

# பாட்டும் கூத்தும்

புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

பதிப்பவர்:
டாக்டர். முத்துச்சண்முகன்
டாக்டர். ஜெ. நீதிவாணன்

T05989
R002D06
T. 5989

மதுரைப் பல்கலைக் கழகம்
பல்கலைநகர், மதுரை-625021

# பாட்டும் கூத்தும்

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நினைவுச் சொற்பொழிவு

சொற்பொழிவாளர்

**புத்தனேரி. ரா. சுப்பிரமணியம்**

பதிப்பாசிரியர்கள்

**டாக்டர் முத்துச்சண்முகன்** எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத்தலைவர், மதுரைப் பல்கலைக்கழகம்.

**டாக்டர் ஜெ. நீதிவாணன்** எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர், தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக்கழகம்

**தமிழ்த்துறை**

**மதுரைப் பல்கலைக்கழகம்**

**1977**

மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு-21
நாடக வரிசை—2

முதற்பதிப்பு : ஆகஸ்டு 1977

உரிமை பதிவு

கிடைக்குமிடம் :

**மதுரைப் பல்கலைக்கழக மத்திய கூட்டுறவு அங்காடி,**
பல்கலைநகர்—625021. மதுரை மாவட்டம்.

அச்சிட்டோர் :

மதுரைப் பல்கலைக்கழக கூட்டுறவு அச்சகம், பல்கலைநகர்-625021.

# நூன்முகம்

தமிழ் நாடகத் தலைமையாசிரியர் தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் அவர்களின் பெயரால் அவ்வை. திரு. தி. க. சண்முகம் அவர்கள் நிறுவிய அறக்கட்டளைச் சொற்பொழிவுகளின் வரிசையில் ஆறுவதாகும் இப்பொழிவு. இத்தகைய உரைகள் இரண்டு அல்லது மூன்று நாட்கள் அருகிருந்து கேட்போருக்கு மட்டுமே பயன்படக் கூடியவை என்ற நிலையை மாற்றி, இலக்கிய வளர்ச்சியில் ஆர்வங்கொண்டோர் அனைவருக்கும் எக்காலத்தும் பயன்படவேண்டும் என்ற நோக்கில் எழுத்து வடிவம் தரப்பட்டு நூலாக வெளியிடும் முறையில் இது இரண்டாவதாகும். சென்ற ஆண்டு திரு. எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்களின் 'நாடகக் கலையின் வரலாறு' நூல் வடிவம் பெற்றது. தமிழ் மேடையைப் பற்றியும் அதன் வளர்ச்சிகளைப் பற்றியும் எழுத்து வடிவிலான சான்றுகள் அதிகம் இல்லாமலிருப்பது முத்தமிழின் ஒரு கூருகக் கருதப்படும் கூத்துத் தமிழினைப் பற்றி விரிவான ஆய்வுகள் எழாமலிருப்பதற்குக் காரணமாகின்றது. இந்நிலையை மாற்றுவதற்கு, மேடையோடு நெருங்கிய உறவு கொண்ட கலைஞர்கள் முன்வந்து தமது அனுபவங்களை வெளிப்படுத்துவதே சிறந்த வழியாகும். இவ்வடிப்படையிலேயே இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவுகள் பெரும்பாலும் கலைஞர்களைக் கொண்டே நிகழ்த்தப்பெறுகின்றன. இதுவரையிலும் நிகழ்த்தப்பெற்றவை பெரும்பாலும் நாடகக் கலையைப் பற்றியே தனிக்கவனம் செலுத்திப் பல அரிய செய்திகளை வெளிக்கொணர்ந்தன.

இசைத் தமிழ் முழங்காத நாடக மேடையினை நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. நாடக மேடையில் நடிப்பிற்கும் இசைக்கும் ஒத்த இடம் தரப்பட்டது. பல நாடகங்கள் இனிய இசைக்காகவே சிறப்புப்பெற்றிருக்கின்றன. பாட்டிற்கும் கூத்திற்குமிடையேயுள்ள உறவினை ஆராயாமல் தமிழ் நாடக மேடையின் வரலாறு நிறைவுபெற்றதாகாது. பாட்டும் கூத்தும் தமிழ் மேடையில் களிநடம் ஆடிய வரலாற்றினை நமக்கு எடுத்துரைப்பதற்கு இவ்விரண்டிலும் தேர்ச்சி பெற்ற ஒரு கலைஞராலேயே இயலும். புத்தனேரி திரு. ரா. சுப்பிரமணியம் அவர்கள் தமது இளம் வயது முதலே நாடக மேடையோடு நெருங்கிய தொடர்புடையவர்; சின்னஞ்சிறு வயதிலேயே ஓசையின்பத்திலே ஒரு மயக்கம் கொண்டவர்; தென்னங் குச்சிகளை வாள்களாக ஏந்திக் கொண்டு கட்டபொம்மனாகவும், ஊமைத்துரையாகவும், வெள்ளையத்தேவனாகவும் ஆடிப்பாடி ஆர்ப்பாட்டம் செய்தவர்; பிற்காலத்தில் திரு. அவ்வை. தி. க. சண்முகம் போன்ற பெருங்கலைஞர்களோடு நெருங்கிய உறவு கொண்டவர்; பல முன்னணி நாட்டிய நடிகைகளுக்கு நாட்டிய நாடகங்களை ஆக்கித் தந்தவர். 'பாட்டும் கூத்தும்'

பற்றிய தமது அனுபவங்களை நமக்குச் சொல்வதற்கு அவரை விடச் சிறந்த ஒரு கலைஞர் இருக்க முடியாது.

★★★

இரு நாட்களாக நிகழ்த்தப்பெற்ற இச்சொற்பொழிவுகள் நூல்வடிவம் பெற்றபோது பலபகுதிகளாகப் பாகுபாடு செய்யப்பட்டன. இந்நூல் முழுக்க முழுக்க வரலாற்று அடிப்படையில் எழுதப்பட்டதாகும். தொல்காப்பிய கால முதல் தற்காலம் வரையிலும் தமிழ் நாடக மேடையில் பாட்டும் கூத்தும் இடம் பெற்றிருந்த வரலாறு சிறப்பாகத் தரப்பட்டுள்ளது. பழைய நாடகங்களில் முழங்கி, எழுத்து வடிவில் இடம் பெறாத பல பாடல்கள் செவி வழியாகவே பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. அப்பாடல்களில் பலவும் இன்றைய தலைமுறையினர் அறியாதவை. அத்தகைய பாடல்களைத் திரட்டி, அவை எந்த ராகத்தில் பாடப்பட்டனவோ அந்த ராகத்தைக் குறிப்பிட்டுத் திரு. சுப்பிரமணியம் நமக்களித்துள்ளார். பல அருமையான பாடல்கள் இம்முறையில் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றன.

முதல் அதிகாரத்தில் தொல்காப்பிய காலமுதல் சோழர் காலம் வரையிலுமுள்ள செய்திகள் கால வரிசைப்படித் தரப்பட்டுள்ளன. பழைய இலக்கியங்களில் கூத்துக் கலையைப் பற்றிக் கூறப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களையும் திரு. சுப்பிரமணியம் திரட்டித்தந்துள்ளார். இதனையடுத்த அதிகாரத்தில் தமிழ் நாடக வளர்ச்சியில் சோழ மன்னர்களது பங்கு விளக்கமாகத் தரப்பட்டுள்ளது. பதினெட்டாம் நூற்றுண்டு வரையிலுமுள்ள வரலாறு இவ்வதிகாரத்தில் பேசப்படுகிறது.

திரு. சுப்பிரமணியம் குறிப்பிடுவதனைப் போன்று பாட்டும் கூத்தும் பதினெட்டாம் நூற்ருண்டில் நல்ல திருப்பத்தைப் பெற்றன. மூன்ருவது அதிகாரத்தில் இதனை மிகச் சிறப்பாக விளக்குகிருர். இது வரையிலும் பலரும் கேள்விப்பட்டிராத பல புதிய நாடக நூல்களைக் குறிப்பிட்டுச் செல்கிருர். குறவஞ்சி நாடகங்களைப் பற்றிய ஒரு பரந்த அளவீடு இங்கே தரப்படுகிறது. ''குற்ருலக் குறவஞ்சி அரங்கேறிய பின் தமிழகத்தில் நடைபெறும் எல்லா நடன நிகழ்ச்சிகளிலும் ஏதாவது குறத்தி நடனம் ஆடுவது என்பது ஒரு தவிர்க்க முடியாத சம்பிரதாயமாகி விட்டது'' என்று குற்ருலக் குறவஞ்சியின் சிறப்பினை ஆசிரியர் விளக்குவது குறிப்பிடத்தக்கது. புகழ்பெற்ற நடன ஆசிரியர்கள் திரு. கே. என். தண்டாயுதபாணி பிள்ளை, திரு. பக்கிரிசாமிப் பிள்ளை, வழுவூர் திரு. இராமையா பிள்ளை, திருமதி. ருக்மணிதேவி அருண்டேல் ஆகியோர் புதிய குறவஞ்சி நாடகங்களை அரங்கேற்றிய செய்திகள் வரிசையாகத் தரப்பட்டுள்ளன. 'விசித்திரமான கதையம்சம் கொண்ட' நொண்டி நாடகங்கள் அடுத்து விளக்கப்பட்டுப் பல புதிய செய்திகள் தரப்பட்டுள்ளன.

தமிழ் நாடகத்தின் பொற்காலமாகக் கருதப்படும் பத்தொன்பதாம் நூற்றாண்டுச் செய்திகளை அடுத்த அதிகாரம் விளக்குகிறது. விலாச நாடகங்களைப் பற்றிய ஒரு அளவீடும், பாட்டுமயமான நாடகங்களைப் பற்றிய மற்றொரு அளவீடும் இவ்வதிகாரத்தில் விரிவாகத் தரப்பட்டுள்ளன. அரிச்சந்திர விலாச நாடகத்தில் வரும் திருடர்களது பாடல் இன்றும் சுவைத்து இன்புறத்தக்கது.

''கோரை மீசைதனை முறுக்கி — கண்டோர்
குலைநடுங்க விறுக்கி
ஊரை வலமாக நெருக்கி
உண்டைவில் கன்னக்கோல் பெருக்கி
யாரை மறந்தாலும் அலங்காரம் கொண்டோரை
அடித்துத் தள்ளி வீட்டை
இடித்துக் கொள்ளையிடும்
திருடர் நாங்களே — பொல்லாத
திருடர் நாங்களே!
உத்தமர் பொருளை எடுக்கோம் — லோபி
ஊராள்வ ரானாலும் விடுக்கோம்
சத்தியன் வாசலை அடுக்கோம் — ஈயாச்
சண்டாளரை விட்டுப் படுக்கோம்''

திருடர்களது 'தொழில் நெறிகளை' உள்ளத்தைக் கவரும் வகையில் விளக்கும் இதுபோன்ற எண்ணிறந்த பாடல்களைத் திரு. சுப்பிரமணியம் நமக்குக் காத்துத் தந்துள்ளார்.

மிகப் பழைமையான விலாசநாடகமாகக் கருதப்படும் மாணிக்கவாசக சுவாமி விலாசத்தில் இடம் பெறும் வைகையாற்று வெள்ளப்பாடலும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வைகையில் நீரையே கண்டறியாத இக்கால மக்களுக்கு வைகையாறு வெள்ளப் பெருக்கெடுத்தோடும்போது எங்ஙனமிருக்குமென்பதனைத் தோடி ராகத்தில் அமைந்த அப்பாடல் அழகாக விளக்குகிறது. மறைந்து அழிந்துகொண்டு வரும் யட்சகானத்தைப் பற்றிய பல அரிய செய்திகளையும் திரு. சுப்பிரமணியம் வெளியிடுகிறார்.

தாசில்தார் நாடகத்தில் தோடி இராகத்தில் அமைந்த ஒரு பாடல் கிராமக் கணக்கர்களது தன்மைகளை மிக அழகாகச் சுட்டுகிறது. நகைச்சுவை ததும்ப எழுதப்பட்ட இப்பாடல் அக்காலச் சமுதாயச் சூழலை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. இப்பாடல் தற்காலத்திற்கும் முழுக்க முழுக்க ஏற்புடைத்தாகும்.

இறுதி அதிகாரம் தமிழ் நாடக மேடைக்குப் புதிய பொலிவைத் தந்த பெருங்கலைஞர்களைப் பற்றியதாகும். பம்மல் சம்பந்தனார்,

சங்கரதாஸ் சுவாமிகள் போன்ருேரது கலேப் பணிகளைத் திரு. சுப்பிரமணியம் வரன்முறையாக எடுத்துரைக்கிருர். ஒவ்வொருவரது பங்கினையும் எடுத்துரைத்து அதன் விளைவாகத் தமிழ் நாடக மேடையில் ஏற்பட்ட மாறுதல்களையும் சுட்டுகிருர். 'பாட்டிலே நாடகம் என்ற நிலைமை மாறி 'நாடகத்திலே பாட்டு' என்ற மாற்றம் ஏற்பட்டதென்பதனைச் சுட்டிக் காட்டுகிருர். இவ்வதிகாரம் தமிழ் நாடக வளர்ச்சி பற்றிய ஆய்வில் ஒரு இன்றியமையாத பகுதியாகும். இவ்வதிகாரத்தின் ஒரு சிறப்பு, இதன் மூலம் தெரிய வரும் அக்காலச் சமுதாய வரலாருகும். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் தமிழகக் கலைஞர்கள் காட்டிய ஆர்வமும் நாட்டுப் பற்றும் நம்மை வியக்க வைக்கின்றன. குறிப்பாக, விசுவநாததாஸ், சுப்பிரமணியசிவா, தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர், கே. பி. சுந்தராம்பாள், பாஸ்கரதாஸ் போன்ற கலைஞர்களது பங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

இறுதிப் பகுதியில் திரு. சுப்பிரமணியம் திரு. அவ்வை. தி. க. சண்முகம் அவர்களது நாடகக் குழுவோடு தனக்கிருந்த நெருங்கிய உறவையும் அனுபவங்களையும் சுவைபட விளக்குகிருர். நாட்டிய நாடகங்களை ஆக்கித் தருவதில் தம்முடைய பங்கினையும் எடுத்துரைக்கின்ருர்.

★★★

தமிழ் நாடக மேடை வளர்ச்சியினை அதனேடு நேரடித் தொடர்பு கொள்ளாத ஒரு ஆய்வாளர் ஆய்வு செய்வதென்பது ஒரு முறை; அம்மேடையோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அதன் வளர்ச்சியில் பங்கு கொண்ட ஒரு கலைஞர் எழுதுவதென்பது மற்ருெரு முறை. இம்முறையில் பல கருத்துக்கள் அகநிலைச் சார்புடையதாகத் (Subjective approach) தோன்றலாம். எனினும், எழுத்து வடிவில் இடம் பெருது, பல செய்திகள் நமக்குத் தெரியாமலே மறைந்து கொண்டுவரும்போது இதுபோன்ற கலைஞர்களது அனுபவ வெளிப்பாடுகளே எதிர்கால ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படுவதாகும். திரு. சுப்பிரமணியம் போன்ற கலைஞர்களே இவ்வழியில் தமிழ் நாடக மேடை வரலாற்றினை எழுத்து வடிவில் ஆக்கித்தர முடியும். மதுரைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ள இம்முயற்சிக்குத் தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் தந்துள்ள திரு. புத்தனேரி. ரா. சுப்பிரமணியம் அவர்களுக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் கடமைப்பட்டுள்ளது.

**பதிப்பாசிரியர்கள்**

அறக்கட்டளைச் சொற்பொழிவு விவரம்

| எண் | பெயர் | நாள் | தலைப்பு |
|---|---|---|---|
| 1. | பேரா. சி. எஸ். கமலபதி, ஆங்கிலப் பேராசிரியர், ஜமால் முகமது கல்லூரி, திருச்சி. | 1969—70<br>1970-பிப். 9.10 | 1) மா முனிவரின் மறுமலர்ச்சி முழக்கம்<br>2) முனிவரின் அடிச்சுவட்டில் இன்றும் நாளையும் |
| 2. | பேரா. அ. ச. ஞானசம்பந்தன், தமிழ்த் துறைத் தலைவர், மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை. | 1970—71<br>1971-ஏப். 14,15 | 1) தமிழ் நாடக வரலாற்றுச் சுருக்கம்<br>2) சங்கரதாஸ் சுவாமிகள் - நாடகக் கலைஞர் |
| 3. | சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், எம்.எல்.சி. | 1971—72<br>1972-மே 24, 25 | நாடகக் கலை |
| 4. | கவிஞர் எஸ். டி. சுந்தரம், செயலாளர், தமிழ்நாடு சங்கீதநாடகசங்கம், சென்னை | 1972—73<br>1973-ஜுன் 6, 7 | உலக அரங்கில் உயர்தமிழ் நாடகம் |
| 5. | கலைமாமணி, பாரதி கலைஞர் எஸ். வி. சகஸ்ரநாமம், சென்னை. | 1973—74<br>1974-அக்.14,15 | 1) உலக நோக்கில் நாடகக்கலை வளர்ச்சி<br>2) தமிழ் நாட்டில் நாடக வளர்ச்சியும் எனது நாடகக்கலை அனுபவங்களும் |
| 6. | புத்தனேரி ரா. சுப்பிரமணியம் துணைத்தலைவர், குழந்தை எழுத்தாளர் சங்கம், சென்னை. | 1975—76<br>1976-மார்ச் 18, 19 | பாட்டும் கூத்தும் |

## நன்றியுரை

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் அவர்களின் பெயரால் நிறுவப்பட்ட அறக்கட்டளையின் சார்பில் நிகழ்த்தப்பெற்ற இவ்வாருவது சொற்பொழிவினை நூல்வடிவில் கொண்டுவருவதற்கு இசைவுதந்த துணைவேந்தர் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்களுக்கும் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்கும் எங்கள் நன்றி உரியது.

தமிழ்த்துறையின் வளர்ச்சியில் பேரார்வம் காட்டிவரும் பதிவாளர் பேராசிரியர் ப. முருகன் அவர்கட்கும் எங்களது நன்றி உரியது.

நூல் அச்சேறியபோது அச்சுப்படிகளைத்திருத்தி உதவிய இதழியல் விரிவுரையாளர் செல்வி. அ. சாந்தா, ஆய்வுமாணவர் திரு. ம. திருமலை ஆகிய இருவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ்த்துறையின் இருபத்தோராவது வெளியீடாகிய இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த மதுரைப் பல்கலைக்கழகக் கூட்டுறவு அச்சகத்தாருக்கும் எமது நன்றி.

**பதிப்பாளர்கள்**



தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| 1 | பழங்காலத்தில் பாட்டும் கூத்தும் | 4 |
| 2 | தமிழ்க் கலையும் சோழ மன்னரும் | 14 |
| 3 | பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட திருப்பம் | 19 |
| 4 | தமிழ் நாடகத்தின் பொற்காலம் | 32 |
| 5 | பொற்காலப் படைப்பாளிகள் | 49 |

# தோற்றுவாய்

தமிழ் நாடக மேதை சங்கரதாஸ் சுவாமிகளின் பெயரால் அமைந்த அறக்கட்டளையின் சார்பில் சொற்பொழிவு நிகழ்த்தும் அரிய வாய்ப்பினை மதுரைப் பல்கலைக்கழகம் எனக்கு அன்புடன் வழங்கியுள்ளது. கிடைத்தற்கரிய பேறு என்றே இதனைக் கருதி நன்றி பாராட்டுகிறேன்.

தமிழ் நாடகம் பற்றிய ஒரு பொருளில் பேச வேண்டும் என்பது அறக் கட்டளையின் அன்புக் கட்டளை.

தமிழ் நாடகக் கலையைப் பற்றி ஏற்கெனவே பலர் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும் வழங்கியுள்ளனர். எனவே இதே பொதுத் தலைப்பில் பேச முற்படும்போது பலர் சொன்ன சில கருத்துக்களை மீண்டும் குறிப்பிட வேண்டியதாக இருக்கும். ஆதலால் அணுகுமுறை புதியதாக இருந்தால் சிறப்பாக இருக்குமே என்ற சிந்தனை எழுந்தது. இந்த அடிப்படையில் எனது உரையைத் தொடங்குகிறேன். எனினும் நிலையான உண்மைகளை மீண்டும் சுட்டிக்காட்டுவதில் தவறில்லை என்பதையும் நான் மறக்கவில்லை.

சின்னஞ்சிறு வயதிலேயே எனக்கு ஓசையின்பத்திலே ஒரு மயக்கம். ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நெல்லை மாவட்டத்தில் எங்கள் ஊர்ப்பக்கங்களில் அடிக்கடி கட்டபொம்மன் நாடகம் நடக்கும். கொட்டகையோ மேடை அலங்காரமோ எதுவும் இராது.

தெரு ஓரத்திலே பத்தடி அகலத்திலே ஒரு தட்டுப் பந்தல். அதன் முன்-னே ஒரே ஒரு சாதாரணத் திரை. பந்தலுக்குள்ளிருந்து நடிகர்கள் வெளியே வந்து ஐந்தடிப் பரப்புக்குள்ளே ஆர்ப்பாட்டமாக ஆடிப்பாடி நடிப்பார்கள். ஒப்பனைகூட முழுமையாக இராது.

கட்டபொம்மன் நாடகத்திற்கென்றே தனியான இசைப்பாணி ஒன்று உண்டு. நாட்டுப் பாடல் மெட்டிலே ஒரு சுகமான ஓசை நயமும் தாளக்கட்டும் இருக்கும்.

*தானனே தானனே தானன்னனு*
*தானனே தானனே தானன்னனு*

என்ற சந்தத்தில் அமைந்திருக்கும். இதிலே துரிதம், மடக்கு எல்லாம் இடையிடையே விரவிவரும்.

*''போகாதே போகாதே என் கணவா — நான்*
*பொல்லாத சொப்பனம் கண்டிருக்கேன்!''*

என்று சோகச்சுவை ததும்ப இழுத்து இழுத்துப்பாடும் பாடலும்உண்டு;

*'' ஒட்டாரங்காடு உடன்காடு*
*ஓடி வருகுது பேய்க்குதிரை!''*

என வீரக்குதிரை காற்றெனக் கடிது பாயும் வேகநடையும் உண்டு.

அந்த ஐந்தடிப்பரப்புள்ள மேடையளவில் குதிரை ஐந்து காததூ-ரம் சிட்டாய்ப் பறக்கின்ற வேகத்தை ஆட்ட பாட்டத்தின் மூலம் காட்டி உணர்ச்சிமயமாக்கிவிடுவார் நடிகர்.

*'' வானம் பொழியுது பூமி விளையுது*
*மன்னவனுக்கேது கப்பமடா!''*

என்ற உரிமைக்குரலும் கட்டபொம்மன் நாடகத்தில் கேட்டது.

கட்டபொம்மன் நாடகங்களைப் பார்த்துப் பார்த்து அந்தக் காலத்-திலே எனக்கும் என் தம்பியர்க்கும் உள்ளத்திலே ஒருவகைக் கிளர்ச்சி ஏற்பட்டது. கட்டபொம்மன், ஊமைத்துரை, பகதூர்வெள்ளை என்னும் வெள்ளையத்தேவன் ஆகிய வீரப் பாத்திரங்களாக நாங்கள் கற்பனை செய்து கொண்டு நாடகத்தில் கேட்ட பாடல்களை மாறிமாறிப் பாடிய வண்ணம் வீட்டு முற்றத்திலேயே ஆர்ப்பாட்டம் செய்வோம். பக்கத்து வீட்டு அன்பு நண்பர்களும், உறவினர்களும் எங்களை அவர்கள் வீட்-டிற்கு வரச்சொல்லி, கட்டபொம்மன் நாடகம் ஆடிக்காட்டும்படி வற்பு-றுத்துவார்கள்; உற்சாகம் ஊட்டுவார்கள். நாங்களும் சற்றும் கூச்சமில்-லாமல் தென்னங்குச்சிகளை வாள்களாக ஏந்திக் கொண்டு ஆடிப்பாடி மகிழ்வோம். எங்கள் பாட்டிலே இசை நயம் இராது;ஓசை நயம் இருக்-கும்; உணர்ச்சிமயம் இருக்கும்; வேகமும் விறுவிறுப்பும் தொனிக்கும்.

என் உள்ளத்திலே நாடக உரையாடல்களைவிடப் பாடல்களிலே மயக்கம் ஏற்பட்டதற்கு நாங்கள் பிள்ளை விளையாட்டாக ஆடிய கட்ட-பொம்மன் நாடகம்தான் என்று சொல்லவேண்டும்.

இந்த ஆர்வத்தின் வளர்ச்சியினுல்தான் பிற்காலத்தில் நாடகங்-களுக்குப் பாடல்கள் எழுதும் மன எழுச்சியும், நாட்டிய நாடகங்கள் இயற்றும் ஆற்றலும் என்னிடம் வளர்ந்தன என நான் நம்புகிறேன்.

'' எவன் தன்னைப்பற்றியும் தன் காலத்தைப் பற்றியும் எழுதுகி-ருனே அவனே எல்லா மக்களைப் பற்றியும் எல்லாக் காலத்தைப் பற்றி-யும் எழுதும் எழுத்தாளன், '' என்பது பேரறிஞர் பெர்ஞட்ஷாவின் கருத்து.

எனவே, கலைத்துறையில் ஏற்பட்ட பின்னணியையும், அனுபவங்-களையும் அடிப்படையாகக் கொண்ட முறையில் எனது பேச்சு அமைவது சிறப்பு என நான் கருதுகிறேன். இந்த எண்ணத்தோடுதான் 'பாட்டும் கூத்தும்' என்ற பொதுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். பாட்டிலே நாடகம், நாடகத்திலே பாட்டு என்ற வகையில் சிந்தனை செய்ய முற்-பட்டேன்.

# I

# பழங்காலத்தில் பாட்டும் கூத்தும்

பாட்டும் கூத்தும் தமிழிலே பழங்காலத்தில் எந்த நிலையில்இருந்தன என்பதைச் சிறிது சிந்திக்க வேண்டும்.

உலகம் பிறந்த உடனே பிறந்தது தமிழ் மொழி; அது உயர்-தனிச் செம்மொழி என்பதும், இயல், இசை, கூத்து என மூவகைப்படுவதால் அது முத்தமிழ் எனப் பெயர் பெற்றது என்பதும் நிலையான உண்மைகள்.

தொல்காப்பியர் காலம் கி. மு. 4 - ஆம் நூற்றாண்டு என்று ஒரு கருத்து நிலவுகிறது. தொல்காப்பியருக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாடகம் விளங்கியது என்பதற்கு ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் கீழ்க்கண்ட சூத்திரத்தைச் சான்று காட்டுவது வழக்கம். நாடக

ஆராய்ச்சியாளர்கள் தமது ஆராய்ச்சியைத் தொடங்க முற்பட்டவுடனே கவனிக்கும் அரிச்சுவடி போன்றது இந்தச் சூத்திரம்:-

'' நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல்சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனுர் புலவர்''

– தொல்-பொருள்-
அகத்திணை இயல் - 53

''நாடக நூல்கள் பெருவரவினவாகி அவற்றிலுள்ள வழக்கு நன்கு உணரப்பட்ட பின்னரே இச்சூத்திரம் இயற்றப்பட்டிருக்க வேண்டும்'' என ஆராய்ச்சி அறிஞர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களே குறிப்பிட்டுள்ளார் என்ருல் நாடகத்தின் தொன்மைக்கு வேறு என்ன சான்று வேண்டும்?

நாடகம் என்ற சொல்லும் கூத்து என்ற சொல்லும் தமிழ் இலக்கியங்களில் பலவாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கு மணிமணியான சான்றுகளைப் பட்டியல் போட்டுக் காட்ட முடியும். குறிப்பாகச் சிலவற்றை இங்கு தொட்டுக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன். இனிய செய்திகளை எத்தனை முறை எண்ணிப் பார்த்தாலும் சலிப்புத் தட்டாதல்லவா?

'' கூத்தாட்டவைக் குழாத் தற்றே'' — குறள்
'' பாடல் ஓர்ந்தும் நாடகம் நயந்தும்'' — பட்டினப்பாலை
'' நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த
வீசு வீங்கின்னியம் கடுப்ப '' — பெரும்பாணுற்றுப்படை
'' நாடக மடந்தையர் ஆடரங்கு ''
'' நாடகம் ஏத்தும் நாடகக் கணிகையோடு ''
'' நாடக முருப்பசி ''
'' வால சரிதை நாடகங்களும் ''
'' நாடக மகளிர் ஈரைம்பத்திருவரும்''
'' நாடக மகளிரும் நயத்தகு மாக்களும் ''

—சிலப்பதிகாரம்

'' ஆடற் கூத்தினெடு அவிநயம் தெரிவோர்
நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்
பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய
நாடகம் விரும்ப ''

பழங்காலத்தில் பாட்டும் கூத்தும் நாட்டு மக்களின் வாழ்க்கை-யோடு கலந்து உறவாடிக் களிப்பூட்டின.

" நன்மணம் பிறந்த நாடகக் கணிகை "
" நாடக மடந்தையர் நலங் கெழுவீதி "
— மணிமேகலை

" நாடகம் நாங்களுற்றது "
" நாடக மியற்றுகின்றார் "
" கிளைஞரும் இசையும் கூத்தும்
கேழ்ந் தெழுந்து " — சீவகசிந்தாமணி

" நயத்திறம் பொருந்த நாடகம் கண்டும் "
" நன்புணத் தெளித்த நாடகம் போல"
" இசையோடு சிவணிய யாழின் நூலும் "
" நாடகப் பொருளும் "
— பெருங்கதை

" நகவே தகும் எம்பிரான் என்னை
நீ செய்த நாடகமே "
" நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து "
— திருவாசகம்

" நடமே நாடகம் கண்ணுள் நட்டம்
பரதம் ஆடல் தாண்டவம் பரதம்
ஆலுதல் தூங்கல் வாணி குரவை
நிலையம் நிறுத்தம் கூத்தெனப்படுமே "
— திவாகர நிகண்டு

" நண்பணைத் தண்ணற வுண்ணிய
போன்றொளிர் நாடகமே "
— திருக்கோவையாரின் விசேட உரை

" இசை நாடகங்கள் இன்பத்தை விளக்கும் "
— நச்சினார்க்கினியர்

" கண்டார்க்கு இன்பம் செய்தலின்
நாடகம் என்றார் "
— பேராசிரியர் உரை

தமிழ்க் கலைகளின் பழங்காலம் ஒளிமயமாக இருந்தது எனச் சிலப்பதி-காரம் அரங்கேற்று காதைக்கு எழுதிய உரையில் இசை நாடகம் பற்றி உண்மை ஒளி பரப்பியுள்ளார் அடியார்க்குநல்லார்.

எனவே, தமிழ் நாடகத்தின் தொன்மையை மறப்பாரும், மறுப்-பாரும் எவரும் இலர்.

(இராகம்: பூர்வி கல்யாணி) (தாளம்: ஆதி)

ஆடுகின்றான் — பதம்
பாடுகின்றான்
ஐவகைக் கலைகளின்
தெய்வமாக என்றும்
— ஆடுகின்றான்
தேடுகின்றான் — அன்பை
நாடுகின்றான்;
செந்தமிழ் விளையும்
சிந்தையிலே என்றும்
— ஆடுகின்றான்
செவிகளில் இனிக்கும் இசையினில் மிதப்பான்
சிற்பம் ஓவியக் கலைகளில் சிரிப்பான்;
கலைகளின் இதயக் கருத்தினில் இருப்பான்
கண்கவர் நாட்டியக் கலையினில் குதிப்பான்.

இந்தப் பாடல் யான் இயற்றிய ''காவிரி தந்த கலைச்செல்வி'' என்னும் நாட்டிய நாடகத்தில் கதாநாயகன் பாடி ஆடும் பதமாக அமைந்துள்ளது. பாட்டும் கூத்தும் பரமனின் வடிவம் என்பதே இந்தப் பாடலின் கருத்து.

ஆடவல்லானின் ஆட்டத்திலே நாடகம் பிறக்கிறது என்பதற்குச் சாத்தனாரின் கூத்தநூல் சான்றாக விளங்குகிறது.

இந்நூலின் தோற்றுவாயின் தொடக்கத்தில் கீழ்க்கண்ட சூத்திரம் மலர்ந்துள்ளது.

''மோனத்து இருந்த முன்னோன் கூத்தில்
உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே
இசையில் பிறந்தது ஆட்டத்து இயல்பே
ஆட்டம் பிறந்தது கூத்தினது அமைவே
கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே
நாட்டியம் பிறந்தது நாடக வகையே''

பதவுரை, பொழிப்புரையே தேட வேண்டாத எளிய, இனிய சொற்கள் நிறைந்த தெளிவான சூத்திரம் இது.

''பன்னிரு கூத்தும்
பற்பல கூத்தும்
பன்னீ ரெட்டுளனும்
பாவையின் கூத்தும்''

என்றெல்லாம் கூத்தின் வகைகளைப்பற்றி இனிய பல சூத்திரங்களையும் கூத்த நூலில் காணலாம்.

சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையில் குறிப்பிடப்பட்ட நூல்களில் ஒன்றானதும் மறைந்து போன நூல்களில் ஒன்றாக நெடுங்காலமாகக் கருதப்பட்டதுமான சாத்தனார் எழுதிய 'கூத்த நூல்' அண்மையில் தமிழுக்குக் கிடைத்த கலைச் செல்வமாகும். கவிஞர் ச. து. சு. யோகியார் அவர்களின் அருமையான விளக்கக் குறிப்புகளுடன் இந்நூலை 1968-இல் வெளியிடுவதற்குத் துணைபுரிந்த தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கும், பதிப்பாசிரியர் மகாவித்துவான் மே. வி. வேணுகோபால்பிள்ளை அவர்களுக்கும் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது.

பழங்காலத்தில் ஆடப்பட்ட கூத்துகளில் வள்ளிக்கூத்து ஒன்று என்பதை,

''வாடா வள்ளி வயவர் ஏத்திய''

- தொல் - பொருள் - 60

என்ற தொல்காப்பிய நூற்பா வரி உணர்த்தும்.

''வாடாவள்ளி வளம்பல தரூஉம்''

என்று பெரும்பாணாற்றுப்படை 370-ஆம் வரியும் சுட்டிக்காட்டுகிறது.

வள்ளிக்கூத்து என்பது குறிஞ்சி நிலத்து மக்களின் கூத்து வகை. இது எப்படி ஆடப்பட்டது என்பது பற்றிய விளக்கம் கிடைக்கவில்லை. வள்ளியும் முருகனும் ஆடுவது போன்ற நாட்டிய நாடகப் பாணியில் அமைந்த நாடோடிக் கூத்து என்று கருத இடம் இருக்கிறது.

கண்ணனின் திருவிளையாடல் பழங்காலத்தில் 'வாலசரிதை நாடகம்' என்ற பெயரில் நடத்தப்பட்டது எனவும் தெரிகிறது.

சிலப்பதிகாரத்தில் வரும் ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை போன்ற பாடல்கள் கதை தழுவி வரும் கூத்து வகையில் அடங்கும். சிலப்பதிகாரம் 'நாடகக் காப்பியம்' எனப் போற்றப்படத்தக்கதானாலும் அது ஒரு முழுமையான நாடக வடிவம் கொண்ட நூல் என்று கூற இயலாது.

இசை நாடகம் பற்றிய இலக்கண நூல்கள் பல, முன்பு இருந்தன, மறைந்தன என அடியார்க்குநல்லார் விளக்கியுள்ளார். ஆயினும் நாடக இலக்கியம் என்று கருதத்தக்க நாடக நூல்கள் அவருடைய குறிப்பில் காணப்படவில்லை.

ஏட்டில் எழுதாத கவிதைகள் என நாடோடிப் பாடல்களைப் பற்றி நாம் குறிப்பிடுகிறோம் அல்லவா? அதேபோலப் பழங்காலத்தில் ஏட்டில் எழுதப்படாத நாடகங்கள் பல நாட்டில் நிகழ்ந்து வந்தன என்பது திண்ணம்.

கதை தழுவிய கூத்து முழுவதையும் அப்படியே பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதுவது எவ்வளவு கடினம் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் ஏடுகள் காப்பாற்றி வழங்கிய இலக்கியச் செல்வங்களை இன்று நாம் துய்த்துக் கொண்டிருக்கிறோம். இயன்ற அளவு இரத்தினச் சுருக்கமான பாடல்களைத்தான் அக்காலத்தில் ஏட்டில் வடிக்கக்கூடிய வசதியும் வாய்ப்பும் இருந்தன. பழங்காலக் கூத்து வகைகளை ஏடுகளில் அடக்கிக் காட்டக்கூடிய அவசியமும் அவகாசமும் அக்காலத்தில் எப்படி இருக்க முடியும்?

அதுவும் தவிர, நாடகம் என்பது நடித்துக் காட்ட வேண்டியதே தவிர ஏட்டிலே வடித்துக் காட்ட வேண்டியதில்லை என்ற எண்ணமும் பழங்காலக் கூத்துக் கலைஞர்களுக்கு இருந்திருக்க வேண்டும்.

எழுதுகோலும், எழிலான தாளும், அச்சுப்பொறி போன்ற ஏராளமான வசதிகளும் நிறைந்துள்ள இந்தக் காலத்தின் நிலைமையைச் சற்றே எண்ணிப் பாருங்கள். இந்த வசதிகள் இருந்தும் கடந்த பத்தாண்டுகளில் மிகப் புகழ்பெற்ற மேடை நாடகங்களைக்கூட நூல் வடிவிலே காண இயலவில்லை. இன்னும் சில நூற்றாண்டுகளுக்குப் பின் இன்றைய நாடக இலக்கியங்களில் எத்தனை, எதிர்கால மக்களின் கரங்களிலே தவழ முடியும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். இந்தச் சிந்தனையில் பழங்கால நாடக நூல்கள் நம் கையில் கிடைக்காமல் போனதன் காரணம் தெளிவாகத் தெரியும்.

எட்டுத்தொகையில் தொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தனிப்பாட்டிற்கும் ஒரு கதைப் பின்னணி இருந்திருக்க வேண்டுமல்லவா? அத்தகைய கதைச் சூழலையெல்லாம் விளக்காமல் ஏடு கொள்ளும் அளவுக்கு மட்டும் பாடலைத் தீட்டிக் காப்பாற்றி வந்துள்ள நம்முடைய முன்னோர்களின் அறிவாற்றலை எண்ணி எண்ணி இறும்பூது எய்த வேண்டும். கால வெள்ளத்துக்கெல்லாம் தப்பி அவை நம் கரங்களில் தவழ்கின்றன என்றால் அது நாம் செய்த பெரும் பேறு என்றுதானே எண்ணவேண்டும்.

எட்டுத்தொகை நூல்களில் வரும் பல பாடல்கள் பாத்திரங்கள் பேசும் நாடகப் பாணியிலேயே உள்ளன.

ஒரு காதலன் தன் காதலியிடம் கூறுவதாக அமைந்துள்ள,

''யாயும் ஞாயும் யார்ஆகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்''

என்ற குறுந்தொகைப் பாடலுக்கு இசையமைத்தால் அப்படியே ஒரு நாடகத்துக்குப் பொருந்தும் காதல் பாட்டாக அமைவதைக் கண்டு மகிழலாம்.

இப்படியாகக் குறுந்தொகைக் காட்சிகள், கலித்தொகைக் காட்சிகள், புறநானூற்றுக் காட்சிகள் என்று தொகுக்கப்படத்தக்க பாடல்கள் ஏராளமாக உள்ளன.

''நகுதக்கனரே நாடு மிக்கூறுநர்''

என்ற பாடலைத் தனி நடிப்பாக (Mono-acting) நடித்துக் காட்டிய அனுபவம் எனக்கு உண்டு.

இத்தகைய சங்க இலக்கியப் பாடல்களுக்குப் பண் வகுத்து மாணவர்களும், மாணவியரும் நடித்துக் காட்டும் பாடத்திட்டம் வகுத்தால் அபிநயம் மூலமாகவே பாடல்களின் கருத்தை எளிதில் புரியவைக்க முடியும்.

''நாடகசாலை பாமர மக்களின் பல்கலைக் கழகம்'' என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் கவியரசி சரோஜினிதேவி. இதன் அடிப்படையில்தான் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள்,

''கண்ணைச் செவியைக் கருத்தைக் கவர்ந்து நிதம்
எண்ணரிய போதனைகள் ஈவதற்கு — நண்ணுமிந்த
நாடக சாலையொத்த நற்கலா சாலையொன்று
நீடுலகில் உண்டோ நிகழ்த்து''

எனப் பாராட்டியுள்ளார்.

''ஆறுமாதம் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியதைக் கற்றோரிடம் ஒருநாள் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்; அப்படி ஆறு மாதம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதை ஒருநாள் நாடகம் மூலம் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்'' எனக் குறிப்பிடுகிறார் திருமுருக கிருபானந்தவாரியார். நாடகக் கலையின் ஆற்றலை இந்தக் கூற்று மெய்ப்பிக்கின்றது.

எனவே சங்க இலக்கியப் பாடல்களில் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து அப்படியே தனி நடிப்பாகவும், ஓரங்க நாடகமாகவும் இசையுடன் அமைத்து மாணவர் சமுதாயம் நடிக்க ஏற்பாடு செய்தால், தெளிவான இலக்கிய அறிவு வெகுவிரைவில் பரவும் என்பது திண்ணம்.

இடைக்காலத்தில் வீரப் புலவர் நக்கீரர் வரலாற்றை ஒட்டிய 'நக்கீரர் நாடகம்' என்ற நூல் இருந்திருக்க வேண்டும் என அறிஞர் எஸ். வையாபுரிப்பிள்ளை பொருத்தமான காரணங்களோடு தமது இலக்கிய தீபம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இயற்கையின் சீற்றத்தால் எழுந்த கடல்கோள், தென்மதுரை, கபாடபுரம், பூம்புகார் முதலான பல மாநகரங்களை விழுங்கி ஏப்பமிட்டபோது, இசை நாடக நூல்களும் பொருள் இலக்கண நூல்களும் மூழ்கிப் போயிருக்கவேண்டும் என்ற அறிஞர்களின் கருத்தை மறுப்பதற்கில்லை.

கடலில் ஆழ்ந்தவையும், கனலில் தீய்ந்தவையும், கரையானுக்கு இரையானவையும் போக எஞ்சியுள்ளவற்றுள் இயல் வகை நூல்களே பெரும்பாலானவை.

இயற்கையின் சீற்றத்தோடு மட்டுமன்றி தமிழின் எதிரிகளின் சீற்றத்தினலும் கலைநூல்கள் பல அழிந்துபோயின என்ற கருத்தும் மேலோங்கி நிற்கிறது.

பரிதிமாற் கலைஞர் என்னும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் துணிவுடன் குறிப்பிட்ட ஒரு காரணத்தைக் கவனிக்க வேண்டும்.

''நாடகத் தமிழ் வீழ்ச்சியடைந்ததற்குக் காரணம் யாது? ஒழுக்க நிலை வகுக்கப் புகுந்த ஆரியரும், சைனரும் நாடகக் காட்சியாற் காமமே அறிவினும் மிகப் பெருகுகின்றதென்ற போலிக் கொள்கை உடையவராய்த் தமது நூல்களால் கடியப்படுவனவற்றுள் நாடகத்தையும் சேர்த்துக் கூறினர். அக்காலத்திலிருந்த அரசர்களும் இதனை அறிவித்து, நாடகத் தமிழைத் தலையெழவொட்டாது அடக்கி வந்தனர். ஔவையாரும், திருவள்ளுவருமே ஒருங்கே புகழ்ந்த இல்லற வாழ்க்கையையே தீவினை அச்சத்தின்பாற்படுத்துக் கூறும் சைனர்கள் நாடகத் தமிழைக் கடிந்தது ஓராச்சரியமன்று! இவ்வாறு, கட்டுப்பாடுகளுக்கிடையில் நாடகத் தமிழ் தலையெடுத்து ஓங்காமல் போயிற்று. இவ்வாறு நாடகத் தமிழுக்கு நாற்புறத்திலும் தடை அமைக்கப்பட்டபின் அஃது அழிநிலையடையத் தலைப்பட்டது. பண்டிதராயினர் கடிந்து, நாடகத் தமிழைக் கைவிடவே அது பாமரர் கையகப்பட்டு இழிவடைந்து தெருக்கூத்தளவே நிற்கின்றது!'' தமிழ் நாடகம் அழிந்து போனதற்கு மறைமலையடிகள் பின்வருமாறு காரணம் கூறியுள்ளார்:

''பண்டைத் தமிழ் மொழிக்கண் இயற்றப்பட்ட நாடகக் காப்பியங்களும், அக்காப்பிய இலக்கணம் கூறும் நாடகத் தமிழ் நூல்களும், சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்குநல்லார் காலத்திலேயே, ஐயகோ, இறந்து போயின! அவை இங்ஙனம் இறந்துபட்டது எதனல் எனில் கூறுதும்.''

''இசை நாடகங்களை அருவெறுப்பாரான பௌத்த சமண சமயத்தவர்கள் வட நாட்டினின்றும் பெருந்திரளாகப் போந்து இத்தமிழ் நாடெங்கணும் குடிபுகுந்து கி. பி. இரண்டாம் நூற்ருண்டு முதல் அவர் தம் கோட்பாடுகளில் சிக்குண்ட தமிழாசிரியர்களும் அவர்போல் அவற்றை அருவெறுத்துவிடவே அந்நூல்களெல்லாம் அங்ஙனம் அழிந்துவிடலாயின''.

இசை நாடக நூல்கள் அழிவுக்குக் காரணமானவர்கள் என்று பௌத்தர்களையும் சமணர்களுடன் சேர்த்து மறைமலையடிகள் கூறியுள்-

ளது, பொருந்துமா என்பது ஆராய்தற்குரியது.

கடைச் சங்க காலத்தை அடுத்த களப்பிரர் ஆதிக்க காலத்தில் (கி.பி. 250 முதல் 550 வரை) இசைத்தமிழ், நாடகத்தமிழ் நூல்களும், பொருள் இலக்கண நூல்களும் சமயநூல்களும் திட்டமிட்டு அழிக்கப்பட்டன என அழுத்தமாகக் கூறியுள்ளார் அறிஞர் மு. அருணுசலம் (தமிழ் இலக்கிய வரலாறு - 10 - ஆம் நூற்ருண்டு, முன்னுரை. பக்கம் 27 - 28).

சமண சமயத்தவர்கள் கலேகளை வெறுத்தார்கள் என்பதற்கு 'ஏலாதி' நீதிநூலின் 25 - ஆவது பாடல் ஆதாரமாக இருக்கிறது.

''பாடகஞ் சாராமை பாத்திலார் தாம்விளையும்
நாடகம் சாராமை நாடுங்கால் - நாடகம்
சேர்ந்தாற் பகைபழி தீச்சொல்லே சாக்காடே
தீர்ந்தாற்போல் தீரா வரும்'' - ஏலாதி - 25.

பாட்டையும் ஆட்டத்தையும் கேட்டலும் காண்டலும் பொதுமக்களிடையே பகையும் பழியும் கடும் சொல்லும் சாவும் விளேவிக்கும் என்பது இவ்வெண்பாவின் கருத்து.

தேவாரப் பாடல் ஏடுகளேச் சமணர்கள் புனலிலே எறிந்தனர் என்றும், எனினும் அந்தப் புனித ஏடுகள் எதிர்நீச்சல் போட்டு ஞானசம்பந்தர் கைக்குக் கிட்டின என்றும் தேவார மகிமைக் கதை ஒன்று சொல்லப்படுகிறது. சமணர்கள் தூக்கி எறிந்த ஏடுகள் தேவாரப் பாடல்கள் மட்டுமல்லாமல் அக்காலத்தில் விளங்கிய இசை நாடக ஏடுகளாகவும் இருந்திருக்கலாம் அல்லவா? வெள்ளத்திலே வீசப்பட்ட கலே ஏடுகள் எல்லாம் மீண்டும் கிடைத்திருக்கும் என்று எண்ண முடியுமா?

பின்னர், பல்லவர் ஆட்சிக் காலத்தில் ஓரளவு கலே வளர்ச்சி மறுமலர்ச்சி பெற்றமையால் சிறந்த நாடகங்கள் தோன்றலாயின. மகேந்திர பல்லவ மன்னன், தானே 'மத்த விலாசம்' என்னும் நாடகத்தை இயற்றி இக்கலேக்கு விளக்கம் அளித்தான் என்பது வரலாறு. 'மத்த விலாசம்' என்னும் நையாண்டி நாடகம் வடமொழியிலேயே அமைந்துள்ளது. மகேந்திர பல்லவன் காலத்தில் திருநாவுக்கரசரும் வாழ்ந்தார் என்பதை எண்ணும்போது இதயத்தை ஈர்க்கும் இசைப் பாடல்களும் அக்காலத்தில் முழங்கின என்ற உண்மை புலப்படும்.

''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''

அப்பர் அடிகள் எழுதிய இந்தப் பாடலும், 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் ' என்ற பாடலும் இக்கால நாடக மேடையில் இசை கனியும் நடனப் பாடல்களாகப் புகழ் பெற்றுள்ளன. இத்தகைய அருமையான பாடல்களை இயற்றிய அப்பர் அடிகள் வாழ்ந்த காலத்திலும், 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய' ஞானசம்பந்தர் காலத்திலும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற இசைமேதை கலைப்பணி ஆற்றிய காலத்திலும் தமிழிலே இசை நாடக நூல் ஒன்றும் தோன்றாமல் இருந்திருக்குமா? இவர்களது காலத்தில் இசை நாடகங்கள் பல இடங்களிலும் நிகழ்ந்திருக்கவேண்டும் என்று துணிவாக யூகிக்க இடமிருக்கிறது. ஆயினும் நூல் வடிவில் ஆதாரம் இல்லையே!

'' கோயில் நாடகக் குழுக்களும் வருகென ''

என்ற ஒரு தொடர் பெருங்கதையில் வருகின்றது. எட்டாம் நூற்றாண்டிலும் நாடகக் குழுக்கள் இயங்கி வந்தன என்பது இதனால் தெரிகிறது. 'நாடகக் குழு' என்ற தொடர் 1200 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ் நாட்டில் வழங்கி வந்தது என்பது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததல்லவா? மாணிக்கவாசகர் ''நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து'' எனப் பாடியுள்ளமையால் அவர் காலத்திய நாடக மேம்பாடு புலனாகிறது.

இசைமரபு, வாக்கியமரபு, நிருத்தமரபு, அபிநயமரபு, தாளமரபு ஆகிய ஐந்துமரபுகள் பற்றிய நூல் 'பஞ்சமரபு' என்பதாகும். இதனைப்பற்றியும் சிலப்பதிகார உரையில் அடியார்க்குநல்லார் குறிப்பிட்டுள்ளார். ஒன்பதாம் நூற்றாண்டிற்குரிய இந்த நூலின் முதற்பகுதி, வேலம்பாளையம் திரு. வே. ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் வழங்கிய ஏட்டுப் பிரதியைக் கொண்டு பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப. சுந்தரேசனாரால் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களின் உதவியுடன் 1973 - இல் வெளியிடப்பட்டுள்ளது.

' நல்ல நரம்பு குழல் கண்டம் தோல் கூத்து
பல்லபொருட் கூடுகின்ற பாணியுடன் - சொல்லிமலர்க்
கையால் அபிநயமும் காட்டுதல் காண், காரிகையாய்
பொய்யாத நூலின் பொருள்''

என்ற வெண்பா பஞ்ச மரபு என்ற நூலின் பொருளைக் குறிக்கின்றது. இந்நூலின் இரண்டாம் பகுதியும் வெளியானால் கூத்துக்களைப் பற்றிய மேலும் பல செய்திகள் தெரியவரும்.

# 2

# தமிழ்க் கலையும் சோழ மன்னரும்

தமிழையும் கலையையும் வளர்த்த பெருமை சோழ மன்னர்களுக்கு உரியது. கி. பி. 850 முதல் 1300 வரை சோழர்களின் பொற்காலம். கி. பி. 985 முதல் 1011 வரை அரசாண்ட மாமன்னன் இராஜராஜசோழன் கடல் கடந்தும் தமிழ் நாடகத்தைப் பரப்பிய புகழைப் பெற்றான். தஞ்சையில் நிலைபெற்ற கலைக்கோயிலாகப் பெருவுடையார் கோவிலை நிர்மாணித்த பெருமை இவனுக்கே உரியது. இயல், இசை, நாடகம், ஓவியம், சிற்பம் என்னும் கலைகளை வளர்க்கும் கூடமாக இந்தக் கலைக்கோயிலை உருவாக்கி அதில் நாடகக்குழுவினரையும் நிறுவனம் செய்தான் என்று வரலாறு கூறுகின்றது.

இராஜராஜேச்வரம் என்னும் தஞ்சைப் பெரிய கோயிலில் இராஜ ராஜேஸ்வர நாடகம்' ஆண்டுதோறும் வைகாசித் திருவிழாவில் நடைபெற்று வருவதற்காக மானியம் வழங்கப்பட்டுள்ளது பற்றி ஒரு கல்வெட்டுச் சாசனம் உள்ளது.

அந்தக் கல்வெட்டில் கீழ்க்கண்டவாறு பொறிக்கப்பட்டுள்ளது:

''....கோப் பரகேசரிவன்மரான உடையார் ஸ்ரீ ராஜராஜேஸ்வர-தேவற்கு யாண்டு ஆருவது உடையார் ஸ்ரீ ராஜராஜேஸ்வரமுடையார் கோவிலில் ராஜராஜேஸ்வர நாடகமாட நித்த நெல்லுத்தூணியாக நிவந்தம் செய்த நம் வாய்க்கேழ்விப்படி சாந்திக்கூத்தன் திருவாளன் திருமுதுகுன்றனை விஜயராஜேந்திர ஆச்சார்யனுக்கும் இவன் வர்க்கத்தாருக்கும் குடுத்தோமென்று ஸ்ரீகார்யக்கண்காணி செய்வார்க்கும், கரணத்தார்களுக்கும் திருவாய் மொழிந்தருளித் திருமந்திரவோலை உதர-விடவவ் விழுப்பறையன் எழுத்தினால் யாண்டு நாலாவது காயநாள் திரு-முகம் பிரசாதம் செய்தருளி வந்தமையினும் இவன் காணி அனுபவித்து வருகிறபடியே ஸ்ரீ ராஜராஜேஸ்வரமுடையார் கோயிலிலே கல்நாட்டு-வித்துக் குடுக்கவென்று''

''திருவாயன் திருமுதுகுன்றனை விஜய ராஜேந்திர ஆச்சாரியன் உடையார் வைகாசிப் பெரிய திருவிழாவில் ராஜராஜேஸ்வர நாடக-மாட இவனுக்கும் இவன் வர்க்கத்தாருக்கும் காணியாகப்பங்கு ஒன்-றுக்கு ராஜராஜேஸ்வரியோடொக்கும் ஆட வல்லானெனும் மரக்காலால் நித்த நெல்லுந்துணியாக நூற்றிருபது கலம் நெல்லும் ஆண்டாண்டு-தோறும் தேவர் பண்டாரத்தே பெறச் சந்திராதித்யர் . . . . . . கல் வெட்டித்து.''

இராஜராஜசோழன் காலம் முதல் தவருமல் ஆண்டுதோறும் வை-காசிப் பெருவிழாவில் நடந்து வந்த இராஜராஜ நாடகம் மராட்டியர் ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. மராட்-டியர் காலத்தில் சரபோஜி நாடகம் நடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகி-றது.

'முத்தமிழ்க் கலையை வளர்க்க நானூறு பெண்களையும், தமிழிசை பாடுவோர் நாற்பத்தெண்மரையும் கந்தர்வர் எழுபத்தைவரையும்' தஞ்-சைப் பெரிய கோவிலில் இராஜராஜ சோழன் ஏற்பாடு செய்திருந்தான் எனவும் ஒரு குறிப்பு உண்டு.

இராஜராஜ சோழன் உண்மையில் தன் பெயரையும் புகழையும் காப்பதற்காக இராஜராஜ நாடக ஏற்பாட்டை நிறைவேற்றும் முக்கிய நோக்கத்துடன்தான் இந்தப் பெரிய கோயிலைக் கட்டினான் என்று கேம்-பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியர் வில்லியம் ரிட்ஜ்வே என்பவர் 1915-

இல் வெளியிட்ட தமது ஆராய்ச்சி நூலில் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.*

தஞ்சைப் பெரிய கோயிலை இராஜராஜ சோழன் பக்திப் பெருக்கோடு கட்டினான் என்பதைவிடக் கலை நலம் கனிந்த தன்னலத்தோடுதான் நிர்மாணித்தான் என்று சொல்வதே பொருந்தும் என்ற வில்லியம் ரிட்ஜ்வேயின் கூற்றும் இராஜராஜனுக்குப் பெருமை சேர்ப்பதாகவே உள்ளது. பாட்டும் கூத்தும் பரப்பும் பணியே பணியெனக்கொண்டவன் பொன்னி நாட்டு மன்னர்மன்னன் என்ற புகழுக்கு முற்றிலும் உரியவன் இராஜராஜ சோழன்.

சோழர் காலத்தில் புகழ்பெற்ற மற்றொரு நாடகம் 'பூம்புலியூர் நாடகம்' என்பது. முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் கி. பி. 1119-இல் வீரைத் தலைவன் பரசமய கோளரி மாமுனி என்பவரால் இந் நாடகம் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது. திருப்பாதிரிப்புலியூர்ப் பாடலீசுவரர் கோயில் கல்வெட்டுச் சாசனத்தில் இந்நாடகத்தைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. இதனை ஆடிய கமலாலய பித்தர் என்பவருக்கு நில மான்யம் வழங்கப்பட்டதாகவும் குறிப்பு உள்ளது.

இராஜராஜ நாடகம், பூம்புலியூர் நாடகம், இரண்டும் பாட்டு மயமான கூத்து வகையாகவே விளங்கியிருக்க வேண்டும். ஆனால் இவைகளும் கால வெள்ளத்தில் மறைந்து காணாமல் போன நாடகங்களின் பட்டியலில் சேர்ந்துவிட்டன.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் வளமான இலக்கியங்களாக மலர்ந்த கம்பராமாயணம், சீவக சிந்தாமணி, கலிங்கத்துப்பரணி, திருத்-

---

*"In the eleventh century A. D. the great Chola King Raja Raja I of Tanjore built a beautiful Siva Temple in his own name and instituted in it a dramatic troupe who had to enact regularly every year the drama called Raja Raja Nataka, which indeed, as its name indicates, must have been a story celebrating the heroic deeds of the great Chola Emperor . . . . .

' . . . . . The evidence demonstrates that dramatic performance relating to the life history of such personages form part of the worship rendered to them at every stage that we have described. Thus the Chola Emperor Raja Raja, built a temple nominally to the hero God-Siva but in reality to himself since he instituted in it a dramatic performance in his own honour to be performed by a troupe of actors maintained for the purpose."

WILLIAM RIDGEWAY

" Dramas & Dramatic Dances of Non-European Races " (1915), pp 204 and 209

தொண்டர் புராணம் தக்கயாகப்பரணி, முதலானவற்றில் நாடகங்க-ளுக்கு உகந்த கதையமைப்பும் பாத்திரப்படைப்பும் விளங்குகின்றன. பாத்திரங்களே பேசுவது போல் நாடகப்பாணி கொஞ்சுகின்ற பாடல்-கள் பல, கம்பராமாயணம், சீவக சிந்தாமணி போன்ற காவியங்களில் உள்ளன.

கம்பராமாயணம், குகப்படலத்தில் உள்ள இனிய பாடல்களை அப்படியே பொருத்தமாகத் தொகுத்துக் ''கங்கை வேடன்'' என்ற அரைமணி நேர இசை நாடகத்தை யான் உருவாக்கினேன். 'அவ்வை' தி. க. சண்முகம், பகவதி குழுவினர் இப்பாட்டு நாடகத்தைச் சென்னை கலைவாணர் அரங்கில் ஒரு விழாவில் பாடி நடித்து உணர்ச்சியூட்டிய நிகழ்ச்சி இன்றும் பசுமையாக என் உள்ளத்தைத் தொடுகின்றது. அக் குறுநாடகத்தில் கவிக் கூற்ருக வரும் இணைப்புப் பாடல்களை இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் பாடியதும் குறிப்பிடத்தக்கது.

சேக்கிழார் காலத்தில் இசையும் கூத்தும் கலைமணம் பரப்பியிருந்-தன. சேக்கிழார் அமைச்சராக இருந்த காலத்தில் சோழ மன்னனுக விளங்கிய இரண்டாம் குலோத்துங்க சோழனுக்கு 'நித்திய கீதப் பிர-மோகன்' என்ற பட்டப்பெயர் உண்டாம். நாள்தோறும் இசையில் மயங்கிய மன்னன் என்பதால் அவன் காலத்தில் கலை வளர்ச்சி மே-லோங்கியிருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

14-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த பட்டினத்தார் இயற்றிய பாடல் கள் இசைநயம் ததும்பப் பாமர மக்களால் பெரிதும் விரும்பிப் பாடப் பட்டு வந்தன. இவருடைய பாடல்களில்

''ஒரு மடமாதும் ஒருவனுமாகி''

என்ற பாடல் பிற்காலத்தில் அரிச்சந்திரன் நாடகங்களில் இடம் பெற்று இன்றுவரை ஒலித்துக்கொண்டிருக்கிறது. இல்லற இன்பம் துய்த்துக் கருவுற்றுக் குழந்தை பெற்றெடுக்கும் வரை ஒரு பெண்மணியின் அனு-பவங்களைச் சுவையாகச் சித்திரிக்கும் பாடல் இது. எனவே கூத்துக்கு ஏற்ற முறையில் இத்தகைய பாட்டை வழங்கிய இசைச் சித்தர் எனப் பட்டினத்தாரைப் பாராட்டலாம்.

''பதினன்காவது நூற்ருண்டில் மாலிக்காஃபூர் படையெடுப்பிற்-குப்பின் நேர்ந்த நாட்டுக் குழப்பங்களினல் பழந்தமிழ் நாடகம் தன் செல்வாக்கை இழந்தது. பின் விஜய நகர ஆட்சியின்போது சிறிது தலை-யெடுத்தது'' என்று குறிப்பிட்டுள்ளார் ஆராய்ச்சி அறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனர்.

பதினைந்தாம் நூற்ருண்டில் மலர்ந்த பல வேதாந்த சித்தாந்தப் பாடல்களும், சித்தர் பாடல்களும் சந்தநயம் பொருந்தியவை. 'பாடு-

*F - 2*

துறை' என்ற பெயரிலேயே தத்துவராய சுவாமிகள் இயற்றிய பாடல்கள் பாமர மக்களும் பக்திச் சுவையோடு தாளம் போட்டுப் பாடும்படி, சங்கீர்த்தனம், பள்ளி எழுச்சி, அம்மானை முதலான வகைகளில் அமைந்துள்ளன.

அருணகிரி நாதரின் திருப்புகழ் சந்த இன்பம் தரும் இன்னிசைக் களஞ்சியம். ஆடிப்பாடி அபிநயம் செய்வதற்கு ஏற்ற பாவ ராக தாளம் அமைந்த சிறப்பு இந்த நூலுக்கு உரியது.

சிறப்புக்குரிய திருக்கோயில்களில் அந்தந்தக் கோயிலின் தலபுராணங்களை நாடகக் கணிகையர் நாட்டிய நாடகமாக ஆடும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வந்தது. ஆனால் அவைகளைப் பற்றிய தெளிவான விளக்கங்களோ, பாடல் வடிவங்களோ கிடைக்கவில்லை.

பதினாறாவது நூற்றாண்டில் நல்லூர் வீர கவிராசர் இயற்றிய அரிச்சந்திர புராணம் அரங்கேற்றப்பட்டது. காப்பியச் சுவை ததும்பும் இனிய பாடல்கள் இந்நூலின் இலக்கியத் தரத்தை உயர்த்துகின்றன. பிற்காலத்தில் வெளியான அரிச்சந்திர விலாசம் போன்ற நாடகங்கள் இந்தக் காவியத்தை அடிப்படையாகக் கொண்டு மலர்ந்தவைகளே.

பதினேழாம் நூற்றாண்டில் குமரகுருபரர் பாடல்களும் பதினெட்டாம் நூற்றாண்டில் தாயுமானவர் பாடல்களும் மக்களை மிகவும் கவர்ந்து உணர்ச்சியூட்டின. இவைகளில் சில, பிற்கால நாடகங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

# 3

# பதினெட்டாம் நூற்ருண்டில் ஏற்பட்ட திருப்பம்

## இராம நாடகம்

பாட்டும் கூத்தும் பதினெட்டாம் நூற்ருண்டில் நல்ல திருப்பத்தைப்பெற்ற சிறப்பைக் காண்கிருேம். செஞ்சொற் கவியின்பமும் தேன் இசை இன்பமும்,அபிநயம் கனிந்த சொற்களும் இசைந்த இராம நாடகம் எனும் அருமையான கவிக்கருவூலத்தை சீர்காழி அருணுசலக் கவிராயர் இந்த நூற்ருண்டிலேதான் வழங்கிஞர். வளங்கொழிக்கும் விருத்தப்பா வழங்கிய கம்பர், நாடகமாக எழுதவில்லையே என்ற ஏக்கத்தை அருணுசலக்கவி தீர்த்துவிட்டார். பாடலும் ராகமும் தாளமும், எதுகையும் மோனையும் கும்மாளம்போட்டு வரும்படியான தேமதுரக்கீர்த்தனைகளை வழங்கிய கவிராயரின் புகழ் நாடகக்கலை உள்ளளவும் நிலைத்து நிற்கும்.

அருணசலக் கவிராயரின் காலம் கி.பி. 1712 முதல் 1779 வரை. இவர் தமது 60-ஆவது வயதில் அதாவது கி. பி. 1772 - இல் இராம நாடகத்தைத் திருவரங்கத்தில் அரங்கேற்றினர் என்று வரலாறு கூறு-கின்றது.

இவர் கம்பராமாயணத்தைப் போலவே பல காண்டங்களாக வகுத்துக் கீர்த்தனைகளை முறைப்படுத்தியுள்ளார். இவருடைய இராம நாடகக் கீர்த்தனைகளில் பல, நாடக மேடைகளிலும் நாட்டிய மேடை-களிலும் முழங்கி வந்துள்ளன.

இவருடைய கீர்த்தனைகளின் பல்லவியைச்சொன்னலே போதும்; பாடல்களின் பெருமை கலையன்பர்களின் உள்ளத்திற்குப் புலப்பட்டு விடும்.

''ஆரோ - இவர் - ஆரோ''
''என்ன பேரோ அறியேனே'' (ராகம் : உசேனி
தாளம் : ஆதி)

''எப்படி மனந்துணிந்ததோ சாமி
வனம் போய் வருகிறேனென்றால்
இதை ஏற்குமோ பூமி'' - (சாவேரி – ஆதி)

''ராமசாமி தூதன் நானடா - அடடா ராவணு -
நான் அடா - என்பேர் அனுமானடா :''
(மோகனம் - அடதாளம்-சாப்பு)

''அந்தராம சௌந்தர்யம் என்ருல்
அறிந்து சொல்லப் போமோ''
– (கேதார கௌளம் - ஆதி)

''ராமனைக் கண்ணாரக் கண்டானே
- விபீஷணன் கை
மாமுடிமேல் வைத்துக் கொண்டானே!''
(மோகனம் – ஆதி)

''ஏன் பள்ளிகொண்டீர் ஐயா!'' - (மோகனம் - ஆதி)

இவ்வாறு ஒவ்வொரு பாடலும் உள்ளத்தைத் தொட்டிழுக்கும் இசைக் காந்தம் போன்றது. கருத்தாழமும் ஓசை நயமும் வாய்ந்த பல பாடற் கனிகளில் இதோ ஒரு சுளை :

கூனியின் சூதுமதியை முதலில் கைகேயி கடிந்து கொள்ளும் கட்-டத்தில் வரும் பாட்டு :

''பரதன் பட்டம் கட்டா விட்டால் நட்டியோ
அவன் சர்க்கரைக் கட்டியோ
என்பிள்ளை ராமன் எட்டியோ

*நான் தான் என்ன மட்டியோ*
*வெட்டிப் போடுவேன் உன்னை!''*

பழகு தமிழ்ச் சொற்கள் கனிந்த அழகு தமிழ்க் கீர்த்தனங்களை வழங்கிய அருணாசலக்கவிராயரைப்பற்றித் தனியே ஓர் ஆராய்ச்சி நூலே எழுத வேண்டிய அளவுக்குச் சத்து நிறைந்தது இராம நாடகம்.

அருணாசலக்கவிராயர் எழுதிய அசோமுகி நாடகம் என்னும் மற்-றொரு நாடகம் இராம நாடகத்தைப் போல் அவ்வளவு பெருமை பெற-வில்லை.

**நாட்டுக் கூத்து**

பட்டி தொட்டிகளில் பரவிப் பாமர மக்களை மிகவும் கவர்ந்த கோலாட்டம், கும்மி, ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை, காவடி, புலி-வேடம், பொம்மலாட்டம், தெருக்கூத்து, கப்பல் பாட்டு, பள்ளு, காவடிச் சிந்து முதலான பல வகையான பாட்டும் கூத்தும் நீண்ட நெடுங்கால-மாக நிகழ்ந்து வந்திருக்கின்றன. திருவிழாக் காலங்களில் இத்தகைய ஆட்டபாட்டங்கள் சிறப்பான இடம் பெற்று வந்துள்ளன.

ஈழ நாட்டிலும் கிராமிய முறையில் பாட்டும் கூத்தும் நெடுங்-காலமாக நடைபெற்று வந்துள்ளன. இலங்கையில் 'நாட்டுக் கூத்து' என்ற பெயரிலேயே இவை பரவியுள்ளன.

பாட்டும் ஆட்டமும் அடங்கிய நாட்டுக்கூத்து மூன்று வகைப்-படும். தென்மோடிக்கூத்து, வடமோடிக்கூத்து, விலாசம் என்ற வகை-களில் நடைபெறும்.

கதை, இசை, ஆடல், உடை, முதலியவற்றில் தென்மோடிக்கும் வடமோடிக்கும் வேற்றுமை உண்டு. பெரும்பாலும் தமிழ்நாட்டுக் கதை களை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுவது தென்மோடிக் கூத்து. பவளவல்லி, அலங்கார ரூபன் வாளபீமன், நொண்டி நாடகம் முதலா-னவை தென்மோடிக்கூத்து நாடகங்களாகும். வடநாட்டுப் புராண இதி-காசக்கதைகளை ஆதாரமாகக் கொண்டு, நடப்பது வடமோடிக் கூத்து. இராமர்கதை, பப்பிரவாக நாடகம், பதினெட்டாம் போர், குசலவநாட-கம், பாண்டவர் வனவாசம், கர்ணன் போர் முதலானவை வடமோடிக் கூத்து வகையில் அடங்கும்.

மன்னார்ப்பகுதி நாடக வகைகள், மாந்தோட்டப் பாங்கு, யாழ்ப்-பாணப் பாங்கு என இரு வகைப்படும். இவைகளைப் பற்றி இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியரும் நாடக ஆராய்ச்சியாளருமான கலாநிதி சு. வித்யானந்தன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

' மாந்தோட்டப் பாங்கைத் தென் பாங்கென்றும் தென் மெட் டென்றும், யாழ்ப்பாணப் பாங்கை வடபாங்கென்றும் வடமெட்டென்றும்

வழங்குவதுண்டு......................தென்பாங்கில் பாக்கள் பெரும்பாலும் வல்லோசை உடையனவாகவும், வடபாங்கில் மெல்லோசை உடையனவாகவும் அமையும்........ இந்நாடகங்களில் சுருக்கமாக அமைவன வாசகப் பாக்கள்... ஈழத்தில் மட்டக்களப்பிலும் மன்னாரிலும் கிராமிய நாடகம் இன்னும் பொதுமக்கள் வாழ்க்கையோடு பின்னிக் கிடக்கின்றது. அவர்களின் அழகுக் கலைகளில் ஒன்றாகவிளங்குகிறது.''

**ராஜா தேசிங்கு இசை நாடகம்**

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்ந்த ஒரு வரலாற்று நிகழ்ச்சியைப் பின்னணியாகக் கொண்டது ராஜாதேசிங்கு இசை நாடகம். செஞ்சிக்கோட்டையின் சிங்கத்தலைவனான ராஜாதேசிங்குக்கும் ஆர்க்காட்டு நவாபுக்கும் நிகழ்ந்த போராட்டத்தை மிகச்சுவையாகச் சித்திரிப்பது இந்த நாடகம்.

> *''ஆர்க்காடு நவாப் செஞ்சிக் கொரு*
> *தூது விட்டாராம்*
> *அந்தத் தூதனும் வந்து சபையில்*
> *சலாமும் விட்டானாம்!''*

என்ற முறையில் இந்த நாடகத்திற்கென்று தனியான இசைப்பாணி உண்டு. இந்த வகைச் சந்த இசையின் வழியிலே பிற்காலத்திலும் பலர் இசைப்பாடல்கள் வரையும் ஆர்வம் பெற்றனர்.

தேசிங்கு ராஜன் நாட்டிய நாடகச்சிறப்பைப்பற்றியும் வில்லியம் ரிட்ஜிவே தமது நூலில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்★ இந்த நாட்டிய நாடகக்கதை சர்வதேச நாடக ஆராய்ச்சியாளரையும் கவரும் சிறப்பினதாகிவிட்டது என்பதற்கு இதுவே சான்று.

**குறவஞ்சி நாடகங்கள்**

பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம், முதலான கூத்துவகைகள் இயற்றப்பட்டுள்ளன. குறவஞ்சிநாடகங்களில் மிகவும் பழமையானதும் சிறந்ததுமாகவும் விளங்குவது திருக்குற்றாலக் குறவஞ்சி. இதனை இயற்றிய மேலகரம் மகாகவி திரிகூடராசப்பக் கவிராயருக்கு கி.பி. 1785-இல் பாண்டிய மன்னர் முத்து விஜயரங்கச் சொக்கலிங்க நாயக்கர் பாராட்டு விழா நடத்திச் சிறப்புப் பட்டத்துடன் 'குறவஞ்சிமேடு' என்ற நன்செய் நிலத்தையும் பரிசிலாக வழங்கினார் என இந்த நூலின் பதிப்புரையில் கூறப்பட்டுள்ளது.

எல்லாக் குறவஞ்சி நாடகங்களுக்கும் இந்நூலே வழிகாட்டி. எல்லாவற்றிலும் வடிவிலும் பாடற்சுவையிலும் பெரியது இது. 119இசைப்-

---

★ ''Dramas and Dramatic Dances of Non-Europeon Races'' - 1915 p 204

பாடல்கள்; அத்தனையும் தேன்போன்றது; வரிக்கு வரி தமிழின் இனிமை கொஞ்சும் நடை; கேட்டால் கிறுகிறுப்பு ஊட்டக் கூடிய சந்த நயம் செறிந்த பாமாலை.

குறத்தி கூறும் மலைவளத்தின் ஒரு பகுதியைத் தொட்டுக்காட்டு-கிறேன். செவியாரச் சுவையுங்கள்:

*''முழங்கு திரைப் புனலருவி கழங்கென முத்தாடும்*
*முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்*
*கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடப்போம்;*
*கிம்புரியின் கொம்பொடித்து வெம்பு தினை இடிப்போம்;*
*செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்*
*தேனலர் செண்பக வாசம் வானுலகில் வெடிக்கும்*
*வழங்கு கொடை மகராசர் குறும்பலவி லீசர்*
*வளம் பெருகுந் திரிகூட மலையெங்கள் மலையே.''*

''தூது நீ சொல்லி வாராய்'' என்ற காம்போதி ராகப் பதம் ஒன்றே போதும் இந்த நாடகத்தின் பெருமையை விளக்குவதற்கு. நாடகத்தலை-வியான வசந்தவல்லி பாங்கியைத்தூது அனுப்புவதாக அமைந்த இப்-பாடல் தனியாகவே பல நாட்டிய நிகழ்ச்சிகளில் புகழ் வாய்ந்த நடன-மணிகளால் அபிநயம் பிடிக்கப்பட்டுள்ள சிறப்புடையது.

திருக்குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகத்தைக் கலாக்ஷேத்திரத் தலைவியான திருமதி ருக்மணிதேவி அருண்டேல் தம் குழுவினருடன் 1944-இல் அரங்கேற்றிப் பல இடங்களில் நடித்துப்புகழ்பெற்றார். திருக்-குற்றாலத் திருக்கோயிலிலும் ரசிகமணி டி. கே. சி. முன்னிலையில் இதனை அவர் நடித்துக் காட்டியுள்ளார்.

குற்றாலக் குறவஞ்சி அரங்கேறியபின் தமிழகத்தில் நடைபெறும் எல்லா நடன நிகழ்ச்சிகளிலும் ஏதாவது குறத்தி நடனம் ஆடுவது என்-பது ஒரு தவிர்க்க முடியாத சம்பிரதாயமாகிவிட்டது.

குற்றாலக் குறவஞ்சியைப்போலவே அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்ற கதையமைப்புடைய பல குறவஞ்சிநாடகங்கள்இயற்றப்பட்டுக்கோயில்-களில் நடைபெற்றும் வந்துள்ளன. தஞ்சைப் பெருவுடையாற் கோயி-லிலும் அவ்வாறு நடந்து வந்தது. 'சரபேந்திர பூபால குறவஞ்சி' என்-பது இரண்டாவது சரபோஜி மன்னர் காலத்தில் இயற்றப்பட்டது. இந் நாட்டிய நாடகத்தை இயற்றியவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசி-கர்.

கவிகுஞ்சர பாரதியார் இயற்றிய அழகர் குறவஞ்சியை நாட்டிய நாடகமாகச் சில ஆண்டுகளுக்கு முன் நாட்டியாலயாவின் சார்பில்அரங் கேற்றினர் திருமதி கமலா.

பாபவிநாச முதலியார் இயற்றிய கும்பேசக்குறவஞ்சியைச் சென்னை நாட்டியக் கலாலயத்தார் 1967-இல் தமிழ் இசைச் சங்கத்தின் பண் ஆராய்ச்சிக் கூட்டத்தில் அரங்கேற்றினர். திரு. கே. என். தண்டாயுதபாணி பிள்ளை நாட்டியம் அமைத்து வழங்கிய இக் குறவஞ்சி நாடகத்தின் பாடல்களைத் திருமதி எம். எல். வசந்தகுமாரி பாடினார். செல்வி வித்யா மூர்த்தி கதாநாயகியாக நடனம் ஆடினார்.

திருச்செங்கோட்டில் கோயில் கொண்டுள்ள அர்த்த நாரீசுவரரைப் பற்றிய ஒரு குறவஞ்சி நாடகத்தின் பழைய சுவடியைக்கொண்டு, நாட்டிய நாடகத்தை உருவாக்கினார் நிருத்யோதயா இயக்குநர் செல்வி பத்மா சுப்பிரமணியம். 1972-இல் தமிழ் இசை விழாவில் அர்த்த நாரீசுவரர் குறவஞ்சி அரங்கேற்றப்பட்டது. நூலாசிரியர் பெயரும் காலமும் தெரியவில்லை.

பழமையான வருணபுரிக் குறவஞ்சியை நடன ஆசிரியர் அடையாறு கே. இலக்குமணன் 1973-இல் தமிழ் இசை விழாவின் போது அரங்கேற்றினார். இந்தக் குறவஞ்சி ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. இதன் ஆசிரியர் தில்லைவிடங்கன் மகா வித்வான் மாரிமுத்துப்பிள்ளை.

இதே போல, சிக்கல் நவநீத ஈசுவரர் குறவஞ்சியை 1974-இல் மேடையேற்றினார் நடன ஆசிரியர் திரு கே. என். பக்கிரிசாமிப்பிள்ளை. இந்தக் குறவஞ்சியும். பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததுதான் இதன் ஆசிரியர் திரு. சு. சொக்கலிங்கம் பிள்ளை.

**விராலிமலைக் குறவஞ்சி**

விராலிமலைக் குறவஞ்சி விராலிமலை ஆலயத்தில் ஆண்டுதோறும் மகா சிவராத்திரியன்று நடந்து வந்ததாம். இப்போது மறக்கப்பட்டிருந்த இந்நாட்டிய நாடகம் மதுரை காந்தி ராமகான குழுவினரால், இசைவாணர் வி. வி. சடகோபன் ஏற்பாட்டில் 1958-இல் தமிழ் இசை விழாவில் நடித்துக் காட்டப்பட்டது. அருமையான வர்ண மெட்டுடன் கூடிய இந்தக் குறவஞ்சிக்கு நட்டுவாங்கம் செய்தார் திருமதி வி. லட்சுமிகாந்தம்.

**தியாகேசர் குறவஞ்சி**

திருவாரூரில் கோயில் கொண்டுள்ள தியாகேசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்ட இனிய குறவஞ்சி நாடகம் இது. காப்பும் மங்களமும் பாடப்பட்ட பின் கட்டியங்காரன் வருதலும், அவன் பாட்டுடைத்தலைவனை அறிவித்தலும் பொதுவாகக் குறவஞ்சி நாடகங்களில் வரும் காட்சிமுறை. கட்டியங்காரன் வருதலும் அவன் தலைவனை அறிவித்தலும் இந்தக்குறவஞ்சியில் காணப்படவில்லை.

இந்தப்பழைய நூலை இயற்றியவரின் பெயர் தெரியவில்லை. ஆனால் இந் நூலாசிரியர் சரபோஜி மன்னர் காலத்தில் (கி. பி. 1684-1710) வாழ்ந்தவர் என்ற குறிப்பு மட்டும் தெரிய வருகிறது. 39 இசைப் பாடல்களே இதில் அடங்கியுள்ளவை. எனவே குற்றாலக் குறவஞ்சியில் மூன்றில் ஒரு பங்குதான் இந்நூலின் அளவு. சுவையும் அப்படியே.

சிங்கன் வரும் சிறப்பைக் குறிக்கும் பிலஹரி ராகக் கீர்த்தனையின் சரணத்தில் எதுகை நயம் ததும்புகின்றது.

''உறுக்கியே பேசி வெறிக்கவே விழித்து
முறுக்கியே மீசை தெறிக்க நடந்து சுகத்துக்கலவி
அறிக்கை மிகுந்த குறுக்கிதமான
செறுக்கியை நாடியே''

சிங்கன் வந்தான் எனத் தீட்டியுள்ளார் ஆசிரியர்.

விளம்பரமாகாமல் இருந்த நாட்டிய நாடகம் சென்னை சரசுவதி கான நிலையத்தினரால் 1966-இல் தமிழ் இசை விழாவில் அரங்கேற்றப்பட்டது.

**திருமலை ஆண்டவர் குறவஞ்சி**

திருநெல்வேலி மாவட்டத்தில் பண்புளிப் பட்டணத்தில் திருமலை என்னும் குன்றில் எழுந்தருளியிருக்கும் முருகன் மீது இயற்றப்பட்ட சிறிய நூல் திருமலை ஆண்டவர் குறவஞ்சி. நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. குறத்தி வருகையைப் பற்றிய பிலஹரி ராகப்பாடல் இந்நூலில் மிகச் சிறப்பானது என்பது என் கருத்து.

(ராகம் : பிலஹரி தாளம் : ஆதி)

**பல்லவி**

குறத்தி வந்தனளே — திருமலைக்
குறத்தி வந்தனளே:

**அநுபல்லவி**

மறத்தியின் சொலை உறுத்தி மஞ்சுறு
நிறுத்தி வஞ்சியர் திறத்தை மிஞ்சிய

(குறத்தி)

அல்லிநேர் குழல் கெண்டை போல் விழி
முல்லை வாணகை தொண்டை வாயிதழ்
வில்லை நேர் நுதல்கண்டு பொன் மொழி
செல்வி போல்ஏழில் கொண்டு மேவிய

(குறத்தி)

இக்குறவஞ்சி நாடகத்தை இசைப் பேரறிஞர் வழுவூர் இராமையாபிள்ளையின் பரத நாட்டிய குருகுலத்தினர் 1970-ஆம் ஆண்டில் தமி-

ழிசை விழாவில் அரங்கேற்றினர்.

**சரகுரு நாடகம்**

திருக்கழுக்குன்றம் தல புராணப் பின்னணியில் இயற்றப்பட்டது சரகுரு நாடகம். இதனை இயற்றியவர் தசாவதாரம் இலக்கணப் புலி பேறை செகந்நாத பிள்ளை. மல்லாபுரி மன்னன் சரகுருவின் தெய்வப் பணியை விளக்கும் புராணக்கதை இது. இதில் பல கீர்த்தனங்கள் உள்ளனவாயினும் பெரும்பாலும் விருத்தப் பாக்களே விரவியுள்ளன. ஆயினும் எல்லாப் பாடல்களுக்கும் இராகம், தாளம் முதலான குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. இந்நாட்டிய நாடகம் திருக்கழுக்குன்றத்திருக்கோயிலில் பல ஆண்டுகளுக்கு முன் திருவிழாக்காலங்களில் நடைபெற்று வந்ததாம். இதனைக் கலைக்கொண்ட குற்றாலம் எஸ். கணேசம் பிள்ளை 1969-இல் தமிழ் இசை விழாவில் நடத்தி அறிமுகப்படுத்தினர்.

**வல்லி பரதம்**

எட்டையபுரம் அரசவைக் கவிராயர் கடிகை நமச்சிவாயப்புலவர் இயற்றியது வல்லி பரதம் என்னும் நாட்டிய நாடகம். 1880-இல் இயற்றப்பட்ட இந்நாடகத்துக்கு அரசவை இசைக் கலைஞர் சாகித்ய வித்வான் சுப்பராமதீட்சிதர் வர்ணமெட்டுகள் அமைத்துள்ளார். வள்ளி திருமணக் கதையே நாட்டிய வடிவம் பெற்றுள்ளது. இடையிடையே உரையாடல் கலந்து, பல இசைப் பாடல்களுடன் உருவாகியுள்ளது. சென்னை நிருத்திய பாரதி கலைக்குழுவினர் இதனை 1968-இல் தமிழ் இசை விழாவில் நடித்தனர். பற்பல சுவையான வள்ளி திருமண நாட்டிய நாடகங்களும் நடந்துள்ளபடியால் அவைகளை வெல்லும் அளவுக்கு இதிலே சுவை மிகுந்துள்ளதாகக் கூற இயலாது.

**கபிலை நாடகம்**

திருக்கோகர்ணம் தலத்தில் ஆவணி மூலத்திருநாளில் கபிலை நாடகம் முன்பு நடந்து வந்ததாகத்தெரிகிறது. சேந்தமங்கலம் கேசவபாரதி இயற்றிய இந்த நாட்டிய நாடகத்தை நடன ஆசிரியர் வழுவூர் இராமையாபிள்ளை தம் குழுவினரைக்கொண்டு 1968-இல் தமிழ் இசை விழாவில் அரங்கேற்றினர்.

தமிழ் இசைவிழாவில் பண் ஆராய்ச்சியின் போது ஆண்டுதோறும் அரங்கேற்றுப்பட்டு வந்த பல குறவஞ்சி நாடகங்கள்,பின்னர் எந்த அரங்கிலும் தொடர்ந்து நடைபெற்றதில்லை. குற்றாலக் குறவஞ்சியைப் போன்று முழுமையும் பாடற்சுவையும் அமையாதபடியால் மற்றக் குறவஞ்சிகள் மீண்டும் மீண்டும் நடைபெறத் தூண்டும் செல்வாக்கினைப் பெறவில்லை என்று தோன்றுகின்றது. ஏன்? குற்றாலக் குறவஞ்சியே இப்போது அடிக்கடி நடைபெறக் காணோமே!

**நொண்டி நாடகங்கள்**

கடலின் பசிக்கும் கனவின் வெறிக்கும்,கரையானின் காதலுக்கும் இரையானவை போக மீதியுள்ள ஏட்டுச்சுவடிகளைத் தொகுத்துப்பேணி வரும் நூல் நிலையங்களில் தஞ்சை சரபோஜி மன்னர் சரஸ்வதிமகால் நூல் நிலையமும், சென்னை அரசாங்கக் கீழ்த்திசை ஏட்டுப்பிரதி நூல் நிலையமும்,குறிப்பிடத்தக்கவைகளாகும். தமிழ்நாடு ஆவணக்காப்பகம், சென்னை மறைமலையடிகள் நூல்நிலையம், திருவான்மியூர் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூல்நிலையம் முதலானவற்றில் பழைய நாடக நூல்களின் அச்சுப் பிரதிகளும் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இப்போது வழக்கத்தில் இல்லாத பல நொண்டி நாடகப்பிரதிகளை மேற்கண்டநிலையங்களில் காணலாம்.

பொதுவாகக் கதைத்தலைவன் தானே தன்னுடைய வீரதீர சாகசங்களைப் பாடி ஆடுவதாக அமைந்துள்ளது நொண்டி நாடகம். அவன் பல சுவைகளும் ததும்பப்பாடியாடுவது நொண்டிச்சிந்து என்னும் இசைப்பாட்டு வகையில் அடங்கும்.

கதாநாயகன் தான் காதலித்த மங்கைக்குக் கனக மணிகள் பூட்டுவதற்காகத் திருடும் காரியங்களைச் செய்து வருவான். பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்பதுபோல் அவன் அரண்மனையிலோ, பிரபுக்களின் மாளிகையிலோ திருடப் போகும்போது, கையும் களவுமாகப் பிடிபட்டுவிடுவான். அவனுடைய கை,கால்கள் துண்டிக்கப்படும். பின்னர் ஆண்டவனை வேண்டித் தன் பாவங்களுக்கெல்லாம் மன்னிப்புத்தேடுவான். வெட்டுண்ட உறுப்புகள் மீண்டும் முளைத்துவிடும். இப்படியொரு விசித்திரமான கதையம்சம் கொண்டது நொண்டி நாடகம்.

எல்லா நொண்டி நாடகங்களிலும் கதைக் கரு இப்படித்தான் இருக்கும். தலைவனின் பெயர், ஊர், சூழ்நிலை ஆகியவற்றில்தான் மாறுதல் இருக்கும்.

பல பழைய சுவடிகளை ஆராய்ந்து பார்த்ததில் திருக்கச்சூர் நொண்டி நாடகந்தான் மிகப் பழமையானதாகத் தோன்றுகின்றது. இதில் வரும் கதாநாயகனின் பெயர் வீரச்சொற்புலி என்பது. திருக்கச்சூர் தியாகேசப் பெருமானை வேண்டி இவன் உய்வு பெற்றான் என்பது கதை. வேசியர் பொருள் பறிக்கும் திறம் பற்றிய பாடல் வர்ணனை இந்நாடகத்தில் நன்கு பாடப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் மதுர கவிராயர். வீரச்சொற்புலி என்னும் கதைத் தலைவன் திருடக் கிளம்பும் வேகத்தை உணர்த்தும் பாடலில் அவன் தன் மேனியை அலங்காரம் செய்து கொள்ளும் நீளமான வர்ணனை உள்ளது.

(தரு: நாத நாமகிரியை)

''இலந்தைக் காயதன் பருமன் கட்டாணிமுத்து
இசையச் செவியிற் கடுக்கன்—பூட்டிக் கொண்டேன்!
நலந்திகழும் நாற்பத்து நாலரை—பச்சை
நல்ல முருகும் காதில் மாட்டிக் கொண்டேன்:

.... .... .... ... .... ....

ஒரு காசும் கவிஞருக்கு உதவாத உலுத்தப்பேய்களை
உடல் கிழிக்கும் பாங்கும் என்கையில் கொண்டேன்
அருங் கவிஞரை மதியாத மூடரை
அடிக்கும் செருப்பே என் காலில் மாட்டிக்கொண்டேன்!''

கவிஞர்களை மதிக்காதவர்களைக் கண்டிக்க வேண்டும் என்ற தன் ஆவலை மதுரக் கவிராயர் நொண்டியின் வாய்மூலமாகச் சாடியுள்ள முறையில் பாடியுள்ள வேகம் கவனிக்கத்தக்கது.

திருச்செந்தூர் நொண்டி நாடகத்தில் பாடல்கள் வளமானவை என்று தெரிகின்றது. இதனைக் கந்தசாமிப்புலவர் என்பவர் இயற்றினார். நெல்லை மாவட்டம் முத்தாலாங்குறிச்சி என்ற ஊரில் பிறந்தவர் இவர். இதற்கு இவர் பாடலிலேயே அகச்சான்று உள்ளது.

தீய காரியங்களைச் செய்துவிட்டு இறுதியில் செந்தில் ஆண்டவரிடம் பாவமன்னிப்புக் கோரியபோது முருகன் நொண்டியின் கனவில் தோன்றி, ''தீமையெலாம் செய்துவிட்டுக் கடைசியில் என்னைத் தேடி வந்து தொழும் திருடா நீ எழுந்திருடா உனக்கு நாம் காலும் கையும் தந்தோம்'' என்று சொன்னதாக வரும் கண்ணியைக் கேளுங்கள்:-

''துச்சனம் செய்து திரிந்து — வந்து நம்மைத்
தொழும் திருடா! இனி எழுந்திருடா!
தற்செயலாக வளரக் — காலும் கையும்
தந்தோம்''

என்று கனவில் வந்தோம் என்றார்! திருச்செந்தூர் நொண்டிநாடகமும் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே தோன்றியதாகும்.

இஸ்லாமியப் புலவர் புதுவை அப்துல்கரிம் சாயபு என்பாரும் ஒரு நொண்டி நாடகம் இயற்றியுள்ளார். அவர் படைத்த செய்தக்காதி நொண்டி நாடகம் 1873-இல் வெளியானது.

மற்றும் பழனி நொண்டி நாடகம், திருமலை நொண்டி நாடகம், அருள்மலை நொண்டி நாடகம் முதலான பல, சென்ற நூற்றாண்டில் மக்களைக் கவர்ந்தன.

**நந்தனார் இசை நாடகம்**

இசைப்பாடல் மேதை எனப் புகழ்பெற்ற கோபாலகிருஷ்ணபார-

தியார் பதினெட்டாம் நூற்றுண்டில் தோன்றியவர். பெரியபுராணத்தில் சேக்கிழார் பாடியுள்ள திருநாளைப் போவார் புராணத்திலே தோய்ந்த இவர், அக்கதையைப் புதுமையாகவும் பொருத்தமாகவும் மாற்றி மக்களையெல்லாம் கவரும் வண்ணம் நந்தனுர் சரித்திரக்கீர்த்தனைகளை உருவாக்கினுர். இந்தக் கீர்த்தனை நூலுக்கு மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் சிறப்புப்பாயிரம் பெறுவதற்காகச் சில நாட்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. பாராட்டுப் பாயிரத்தை நேரில் பெற்றுவருவதற்கு ஒரு பிற்பகல் பாரதியார் பிள்ளையவர்கள்வீட்டுக்குச் சென்றுர். பிள்ளையவர்கள் மதிய உணவுக்குப் பின் சற்றே ஓய்வெடுத்து உறங்கிக்கொண்டிருந்தார். அவரது உறக்கத்தைக் கலைக்க விரும்பாமல் கோபாலகிருஷ்ண பாரதியார் வீட்டு வெளித் திண்ணையில் அமர்ந்து, உணர்ச்சி பாவத்தோடு மெய்மறந்த நிலையில் ''கனகசபாபதி தரிசனம் ஒருநாள் கண்டால் கலி தீரும்'' போன்ற சில இனிய பாடல்களை வாய்விட்டுப்பாடிக் கொண்டிருந்தார். பாடல்களின் நாதஇன்பத்தைக் கேட்ட வண்ணம் கண் விழித்துக் கொண்ட மகா வித்வான், உள்ளம் துள்ளி ''ஆகா! அற்புதம் அருமை!'' என்று பாராட்டிய வண்ணம் வெளியே வந்து பாரதியாரை அன்புடன் ஆரத் தழுவிக் கொண்டே ''உம்முடைய பாடலுக்கு ஒரு சிறப்புப்பாயிரம் தருவது எனக் கல்லவாபெருமை!'' என்று அருமையாகப் பாராட்டுக்கவி இயற்றி வழங்கினுர்.

பாமர மக்களையும் பண்டித சிரோன்மணியையும் கவர்ந்து இழுக்கக்கூடிய இசைக்களஞ்சியம் கோபாலகிருஷ்ணபாரதியாரின் பாடல்கள் என்பதற்கு இந்த நிகழ்ச்சியே சான்ருகும். இவருடைய நந்தனுர் சரித்திரக்கீர்த்தனைகள் வெறும் கீர்த்தனைகள் மட்டுமல்ல அருமையான இசை நாடகக்காவியம். பிற்காலத்தில் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற கலைஞர்கள் பலர் நடத்திய எல்லா நந்தனுர் நாடகங்களுக்கும் ஊட்டம் கொடுத்தவை இவரது நந்தனுர் சரித்திரக் கீர்த்தனைகளே. இசை, நாடகம், நாட்டியம் முதலிய எல்லாக் கலையரங்குகளிலும் இப் பாடல்கள் தக்கவாறு தனிச்சிறப்புடன் இடம்பெற்று வருகின்றன. இவருடைய பாடல்களின் வர்ணமெட்டைப் பின்பற்றிப் பிற்காலத்தில் பலர் பாடல் புனைந்துள்ளனர். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் ' ஓய் திலகரே! நம்ம ஜாதிக்கடுக்குமோ'' என்ற தேசியப் பாடலுக்கு முன்மாதிரியாக வர்ணமெட்டு வழங்கியது, ''ஓய் நந்தனுரே நம்ம சாதிக் கடுக்குமோ-நியாயம் தானே நீர் சொல்லும்'' என்ற நந்னுர் சரித்திரக்கீர்த்தனையேயாகும்.

இயற்பகை நாயனுர் சரித்திரம், திருநீலகண்ட நாயனுர் சரித்திரம், மாமி நாடகம் முதலான பாடற் செல்வங்களும் இவர் படைத்

தவையே. 95 வயதுவரை வாழ்ந்து தமிழ்ப்பணி ஆற்றிய மேதை கோபாலகிருஷ்ண பாரதியார்.

இவரது பாடல்களைக் கொண்டு பல கலை நிறுவனங்கள் இசைப் போட்டி நடத்தி வருகின்றன. தமிழ் இசைச்சங்கத்தில் ஆண்டுதோறும் கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல்கள் இசைப் போட்டியில் முதற்பரிசு பெறும் பாடகர் அல்லது பாடகிக்குத் தம்புரா பரிசளிக்க மூதறிஞர் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அறக்கட்டளை நிறுவியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கீர்த்தனை வடிவில் அமைந்த நாடகங்களில் கவிக்குஞ்சர பாரதியார் இயற்றிய கந்தபுராணக் கீர்த்தனைகளையும், இராமசாமி சிவன் இயற்றிய பெரிய புராணக் கீர்த்தனைகளையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

இசைப்புலவர் சென்னிகுளம் அண்ணாமலை செட்டியார் இயற்றிய காவிரிச்சிந்து நாடக மேடைக்கும் இனிய முறையில் பயன்பட்டு வந்துள்ள இசைச் செல்வமாகும். இந்தப் பாடல்களின் சொல்லழகும் பொருட் சுவையும் ஓசை நயமும் எல்லோரையும் மெய்மறந்து தாளம் போடவைக்கும்.

கூத்துக் கலைக்கு நேர்த்தியான பதங்களை வார்த்துக் கொடுத்த கலைமாமணிகள் பலர் பதினெட்டு - பத்தொன்பதாம் நூற்றாண்டில் விளங்கினர்.

முத்துத் தாண்டவர் இயற்றிய முத்து முத்தான பதங்கள் யாவும் நடனக்கலையின் சொத்து என்பது தகும்.

*''தெருவில் வாரானோ என்னைச் சற்றே*
*திரும்பிப் பாரானோ?''*

என்ற கமாஸ் ராகப்பதம் கலையன்பர்களின் செவிகளில் என்றும் ரீங்காரம் செய்து கொண்டே இருக்கிறது. நாட்டியப் பேரரசி டி. பாலசரஸ்வதி நடனப்பயிற்சி பெற்ற நாள்முதல் இன்று அவரது முதுமைப்பருவம் வரையிலும் இந்தப் பதத்திற்குப் பிடித்துவரும் அபிநய அற்புதத்தை கண்டு மகிழ வேண்டுமே தவிரக் கவிதையில் கூட வர்ணிக்க இயலாது. இவர் இதே பதத்திற்குக் கடந்த 1975 டிசம்பர் மாதம் தமிழ் இசைவிழாவில் பக்கவாத்திய ஆர்ப்பாட்டம் எதுவும் இல்லாமல் தாமே பாடி அபிநயம் பிடித்த அருமையைப் பாராட்டாதார் இலர்.

வடலூர் வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகளின் பாடல்களும் இசை நாடக நாட்டிய மேடைகளில் காலத்தை வென்று புகழ் ஈட்டி வருகின்றன. வள்ளலாரின் ''வருவார் அழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே வந்தால் பெறலாம் நல்ல வரமே'' என்ற பியாகடை

ராகப் பதம் நாட்டியத்துக்கு ஏற்ற பாடல்களில் ஒன்று. வள்ளலாரின் பல பாடல்களை இசைமேதை எஸ்.ஜி. கிட்டப்பா போன்ற பலர், நாடகங்களில் பாடிக் கேட்போர் உள்ளம் கிளர்ச்சி பெறச் செய்துள்ளனர்.

*''வேலவரே உமைத் தேடி ஒரு மடந்தை*
*விடியு மளவும் காத்திருக்கிற வகையென்ன?''*

என்ற பைரவி ராகப் பதத்தையும்,

*''பதறி வருகுது உருகுது என் ஆவி பதைக்குதே, வகை*
*சொல்லடி — சற்றே*
*நில்லடி — மனம்*
*கல்லோடி — அடி*
*தளுக்கு குலுக்கு மினுக்கென்ன போடி!''*

என்ற காம்போதி ராகப்பதத்தையும், இயற்றிய பெருமை கனம் கிருஷ்ணய்யரைச் சேரும்.

*''நடமாடித் திரிந்த உமக்(கு)*
*இடது கால் உதவாமல்*
*முடமானதே தென்று சொல்லுவீர், ஐயா!''*

என்ற பதம் காம்போதி ராகத்தில் அமைந்து, நடன அரங்கிலே புகழ் பெற்றது. இதனை இயற்றியவர் பாப விநாச முதலியார். இதுபோல் பல அருமையான பாடல்களை இவர் இயற்றியுள்ளார்.

*''காலைத் தூக்கி நின்று ஆடும் தெய்வமே — என்னைக்*
*கைதூக்கி ஆள் தெய்வமே!''*

என்ற கவிதைச்சுவையும் இசை நயமும் செறிந்த பாடலை இயற்றியவர் மாரிமுத்தாபிள்ளை. எதுகுல காம்போதியில் அமைந்த இப்பாடல் இசை-நடன அரங்குகளில் எல்லாம் இதய நிறைவு தந்து வருவதாகும்.

*''அதுவும் சொல்லுவாள் அவள்*
*அநேகம் சொல்லுவாள்*
*அவள் மீதில் குற்ற மென்னடி?''*

முதலான சுவை ததும்பும் பதங்களை இயற்றிய சுப்பராமய்யரின் ஒப்பற்ற கலைத்தொண்டு மறக்க முடியாதது.

மகா பாரதக் கீர்த்தனங்கள் இயற்றிய வேலூர் சுப்பராயமுதலியார், மழவை சிதம்பர பாரதி, பிள்ளைப் பெருமாள் பண்டாரம், தஞ்சை பொன்னையா, கடிகை நமச்சிவாயப் புலவர் முதலான பலர் பாட்டும் கூத்தும் பரப்பும் பணியிலே தனிச்சிறப்புப் பெற்றவர்கள்.

32 — 49

# 4

# தமிழ் நாடகத்தின் பொற்காலம்

## விலாச நாடகங்கள்

### *மாணிக்கவாசக சுவாமி விலாசம்*

பத்தொன்பதாம் நூற்றாண்டையே தமிழ் நாடகத்தின் பொற்காலம் என்று குறிப்பிடலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். இதற்குக் காரணம் இந்த நூற்றாண்டிலே விலாசம், வாசகப்பா, யட்சகானம், இசை நாடகம் முதலான வகைகளில் நூற்றுக்கு மேற்பட்ட பாட்டும் கூத்தும் நாட்டிலே நடைபெற்று வந்திருக்கின்றன. இவைகளில் பல ஏட்டுச்சுவடிகளாகவும் நூல் வடிவிலும் காணப்படுகின்றன.

கிடைத்துள்ள விலாச நூல்களில் மாணிக்கவாசகசுவாமி விலாசம் பழைமையானதாகத் தோன்றுகின்றது. 1868 - லேயே நூல் வடிவம் பெற்றுள்ள இதனை இயற்றியவர் சென்னைப்பட்டணம் தியாகராய கிராமணியார் மகன் குப்புசாமி கிராமணியார் எனக்குறிக்கப்பட்டுள்ளது.

விருத்தம், தரு முதலான பாடல் வகைகளில் உருவாகியுள்ள இதில் இராகம், தாளம் எல்லாம் தெளிவாகத்தரப்பட்டுள்ளன. கதைத்தொடர்பு கூறும் முறையில் இடையிடையே சிலவரிகள் வசனம் விரவிவந்துள்ளது.

மாணிக்கவாசகர் சொக்கநாதரைத் துதித்தவுடன் வைகையாறு வெள்ளம் பெருகி வரும் காட்சிக்குக் கீழ்க்கண்ட பாடல் அமைந்துள்ளது

(இராகம் : தோடி தாளம் : சாடி)

**பல்லவி**

*வெள்ளம் வந்ததே – வைகையாறு பெருகி*
*வெள்ளம் வந்ததே !*

**அநுபல்லவி**

*பள்ள மேடுகளெல்லாம் பரவிக் கரைபுரண்டு*
*பாரும் விண்ணும் அளவில் பாற்கடல் போல் திரண்டு*
*(வெள்ளம்)*

**சரணம்**

*ஊழிக் காலத்தில் வரும் ஜலப்பிரளயம் போல்*
*உயர்ந்த மாளிகைகளைப் பேர்த்து*
*ஓங்கி வளர்ந்து கிளைகள் தாங்கும் பெருமரங்களை*
*ஒருமிக்க வேரறவே சாய்த்து*
*ஆழிபோல இரைந்துஆல காலவிடம் போல்சீறி*
*ஆரவாரித் தெங்கெங்கும் அலைமோதிக் கொண்டு*
*மீறி ( வெள்ளம் )*

**அரிச்சந்திர விலாசம்**

விலாச நாடகங்களில் மிகவும் சிறந்தது சத்தியபாஷா அரிச்சந்திர விலாசம். கி. பி. 1883-இல் நூல் வடிவம் பெற்றுள்ள இது ''திரிசிர-புரம் சைவ சமய குரு பரம்பரை கும்பகோணம் சரவணமூர்த்தி அவர்-களின் மாணுக்கராகிய திருமலைவாயல் அப்பாவுப்பிள்ளை எனும் இயற்-பெயருடைய முத்துச்சாமிப்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது'' என நூலிலேயே விளக்கப்பட்டுள்ளது.

இந்நாடகத்தை பெங்களூர் ஆதி ஹிந்து விநோத சபா மு.சுப்ப-ராயஆசாரி மிகச்சிறப்பாக நடித்து வந்தார் என்ற குறிப்பும் உள்ளது. அரிச்சந்திர இசை நாடகம் எல்லாவற்றிலும் தலைசிறந்தது இந்நாடகம். அரிச்சந்திர புராண முறையிலேயே படலம், காண்டம் எனப் பல பகுதி-

*F - 3*

களாகப்பிரித்து எழுதி முறைப் படுத்தியுள்ளார் கவிஞர். அஷ்டாவதா-னம் சபாபதி முதலியார் போன்ற பெரும்புலவர்கள் இந்நூலுக்குச்சிறப்-புப்பாயிரம் வழங்கியுள்ளனர்.

இந்நாடகத்தில் வரும் பாடல்களில் பல அன்று முதல் இன்று வரை நாடக மேடைகளில் முழங்கி வந்துள்ளன. அரிச்சந்திர நாடகம் நடத்திய பலர் இவ்விலாச நாடகப் பாடல்களைத் தக்கவாறு எடுத்துப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

சந்திரமதி பாடும்,

*''ஐயோ மகனே நீ அலறித் துடித்திட*
*அரவந் தீண்டலாச்சே*
*அருள் போச்சே - இருள் ஆச்சே!''*

என்ற சாமா ராகப் பாடலும்

*''வாடாஎன் கண்ணின் மணியே*
*வந்தொரு முத்தம் நீ*
*தாடா என் கண்ணின் மணியே!*
*காடா உனக்கு மனை வீடா நீ இங்குறங்கப்*
*பாடா அயன் விதித்ததோடா பாவி பாவி!''*

என்ற புன்னாகவராளி ராகப் பாடலும் இன்றும் கலையன்பர்களின் செவி-களில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

இவ்விலாசத்தில் திருடர்கள் பாடி ஆடும் தரு சொல் நயமும் பொருள் நயமும் வாய்ந்தது.

'' கேளுங்கள் சபையோர்களே! காசிராஜன் பள்ளியறையில் சய-னித்துக் கொண்டிருக்க, விஸ்வாமித்திரன் கோரியபடி மகா விஷ்ணு-வாள், கதை சங்கு சக்கரங்களைத் திருடராக்கித் தான் அவர்களின் தலை-வனைப் போல் ரூபம் தரித்துக் காசிபன் மகளைக் கவர வருகின்ற விதம் காண்பீர்கள் கனவான்களே!''

(திருடர் தரு; மத்தியமாவதி ரூபக தாளம்)

**பல்லவி**

*திருடர் நாங்களே - பொல்லாத*
*திருடர் நாங்களே!*

**அநுபல்லவி**

*வறுமையுற்றுமே வன் பொருள் அமைந்த*
*வம்பர்கள் வீட்டினில் அம்பு போல் பாய்ந்திடும் (திருடர்)*

**சரணங்கள்**

*கோரை மீசைதனை முறுக்கி - கண்டோர்*
*குலைநடுங்க விறுக்கி*

*ஊரை வலமாக நெருக்கி*
*உண்டை வில் கன்னக் கோல் பெருக்கி*
*யாரை மறந்தாலும் அலங்காரம் கொண்டோரை*
*அடித்துத் தள்ளி விட்டை*
*இடித்துக் கொள்ளை யிடும் (திருடர்)*
*உத்தமர் பொருளை எடுக்கோம் – லோபி*
*ஊராள்வ ரானாலும் விடுக்கோம்!*
*சத்தியன் வாசலை அடுக்கோம் – ஈயாச்*
*சண்டாளரை விட்டுப் படுக்கோம்!*
*செத்ததோர் அன்னியர் செல்வம் கவர்ந்திடும்*
*சீரிபால பாதகர் பேரினைத் தூஷிக்கும் (திருடர்)*

**சகுந்தலை விலாசம்**

முத்தமிழ் வல்லவராய இராயநல்லூர் இராமச்சந்திரக் கவிராயர் இயற்றிய சகுந்தலை விலாசம் கி. பி. 1888-இல் நூல் வடிவம் பெற்றுள்ளது. விருத்தமும் கீர்த்தனைகளும் சரியான வடிவத்தில் கட்டுக்கோப்புடன் காணப்படுகின்றன.

துஷ்யந்த மன்னன் சகுந்தலையை மறந்தபின் அவள் மன்னனை அரண்மனையில் கண்டு வாதாடும் கட்டத்தின் சுவையான பாடல்களை இங்கே சொல்வது இனிமையாக இருக்கும்.

(இராகம் : புன்னாகவராளி தாளம் : ரூபகம்)

சகுந்தலை : *வள்ளலின் பேர்சொல்லப் பிள்ளை வேண்டுமென்று*
*மாதவத்தைப் புரிவார்கள் - இந்தப்*
*பூதலத்தில் திரிவார்கள்! - பெற்ற*
*பிள்ளை வேண்டா மென்று தள்ளி விடுவது*
*பேருலகில் உண்டோ மன்னவா?*

மன்னன் : *பிள்ளை வேண்டுமென்பது உள்ளதே ஆனால் உன்*
*பிள்ளைதானோ என்பேர் சொல்வது? - உன்றன்*
*கிள்ளாக்கோ இங்கெல்லாம் சொல்வது? - அடி*
*பள்ள வழக்கிட்டு மெல்ல மெல்ல வந்த*
*பழிகாரி நிலி நீ யாரடி?....*

எதுகையும் மோனையும் கச்சிதமாக அமைந்து சந்த இன்பம் தருவதை இந்தப் பாடலில் காணலாம். சாகசம் என்பதைக் 'கிள்ளாக்கு' என்ற பழகு தமிழிலே அழகாக அமைத்துள்ள அருமை எண்ணி மகிழ்தற்குரியது. சகுந்தலையின் வாதம் ''பள்ள வழக்கு'' என்ற புதிய சொற்றொடர் (Hollow or without any substance) 'சூன்யமானது' அல்லது 'சாரமற்றது' என்ற பொருளை ஆழமாகக் கொண்டுள்ள நுட்பத்தைஎன்-

னென்பது! இது போன்ற பல நல்ல இசைப்பாடல்கள் இவ்விலாசத்தில் பொதிந்துள்ளன.

**பிரகலாத விலாசம்**

புதுவை அரங்கநாதக் கவிராயர் இயற்றிய பிரகலாத விலாசம் 1876-இல் நூலாக வெளிவந்துள்ளது. பாட்டுமயமான இந்நாடகத்திலும் கீர்த்தனைகள் நேருக்கு நேர் உரையாடும் பாணியிலே விறுவிறுப்புடன் காணப்படுகின்றன. இரணிய நாடகத்தில் இரணியன் பிரகலாதனை நோக்கி, கேதார கௌள ராகத்தில்,

*''எவனடா! ஹரிகிரி என்போனவன் எவனடா?*
*எனக்குண்மை தான் சொல்லடா எதிர் நில்லடா!''*

என்று கோபக் கனலோடு கேட்க, பிரகலாதன் பதிலுக்குப் பாடுவதைக் கவனியுங்கள்.

(இராகம் : மத்யமாவதி தாளம் : ஆதி)

(பல்லவி)

*தாதா ஹரி பெருமையுனக்குத் தெரியாதா?*
*இதென்ன சூதா வாதா? (தாதா)*

**(அநுபல்லவி)**

*மூதாதை ஈன்ற நான்முகத்தோனை ஈன்றவன்*
*மூவர் தொழும் ஆதி மூல மல்லவோ?*

**(சரணம்)**

*வேதிய ரோதிடும் வேத சிரந்தன்னில்*
*கோதிலாச் சுடர்பரஞ் சோதியல்லவோ? (தாதா)*
*மண்டலந் தெண்டிரை விண்டுடன் விண்டலம்*
*அண்டமுண் டுமிழ்ந்த கண்டனல்லவோ? (தாதா)*

பாடலின் ஓசைநயம் உள்ளத்தைத் தொடுகிறதல்லவா?

**மார்க்கண்டேயர் விலாசம்**

வேங்கடராம உபாத்தியாயரும் நண்பர்களும் எழுதிய மார்க்கண்டேயர் விலாசம் 1860-இல் அச்சு வடிவம்பெற்றது. இதன் அமைப்பு முறை மற்றைய விலாசங்களைப் போலவே உள்ளது. இதில் உள்ள பாடல்களின் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு:

மார்க்கண்டன் கதை தரு.

(இராகம் : பந்துவராளி தாளம் : ஆதி)

(பல்லவி)

*மார்க்கண்டன் இதோ வந்தான் – ஜெய*
*மார்க்கண்டன் இதோ வந்தான்*

(அநுபல்லவி)

*தீர்க்காயுசு படைத்தோன் - பெண்*

சித்தமதை விடுத்தோன் - ஜெய (மார்க்கண்டன்)

(சரணங்கள்)

அண்டரண்டம் மதிக்க - இந்த
அவனியெங்கும் துதிக்க
கண்டவர் மனம் தொழுதிருக்க - மிரு
கண்டவர் மனம் களிக்கச் - செய (மார்க்கண்டன்)
அல்லி மலரை எடுப்போன் - மெத்த
அன்ப னுகத் தொடுப்போன்
செல்வி சிரசில் இருப்போன் - ஆதி
தேவி பாதம் அடுப்போன் - செய (மார்க்கண்டன்)

**குசேல விலாசம்**

பக்த குசேலரின் கதையை நாடக வடிவில் தருவது குசேலவிலாசம். செங்காடு சேஷாத்திரி ஐயங்கார் இயற்றி 1876-இல் வெளியிடப்பட்டது.

துவாரகைக்கு வந்தருளிய குசேலரைப் பார்க்க வாருங்கள் எனக் கண்ணன், ருக்மணி முதலான பெண்களை நோக்கிப் பாடுவதை மாதிரிக்காக எடுத்துக் காட்ட விரும்புகிறேன் :

(இராகம்: பியாக் அட தாளம்)

பைந் தொடியரே பாரீர் – அந்தப்
பரிசுத்த குசேலரை
இந்தப் பூமியில் இவர்க்கு நிகர்
எவரைச் சொல்ல இயலும்? (பைந்)
ஆதிநாள் என் னுடனே– இவர்
ஓதினுரே கலைகள்!
சாதுவான முனிவர் நூல்
வேதங்களையும் கற்றேரும் (பைந்)

இது போன்ற பாடல்கள் அவ்வளவு தரமானவையல்ல என்பதைக் குறிப்பிட வேண்டும்.

**நாலு மந்திரி விலாசம்**

சூனும்பேடு முத்துக்கிருஷ்ண தேசிகர் பேரனும் இராமசாமி பக்தரது மகனுமான பாலகவி திருமூர்த்திநயினர் இயற்றிய நாலு மந்திரி நாடகம் 1820–இல் நூல் வடிவம் பெற்றது.

சிற்ப சாத்திரம் கற்ற தபதி ஒருவர் வரும் காட்சியைக் கீழ்க் கண்ட பாடலில் காணலாம். தபதியே பேசுவதாக அமைந்த பாடல்:

(இராகம்: மோகனம் தாளம் : ரூபகம்)

வல்ல தபதி நானே! – பிரதாப

வல்ல தபதி நானே.
இசைகொள் அற்புதச் சிற்ப சாத்திரன்
விசையறச் செயும் கற்ப சூத்திரன்:
ஈடுயர் தெய்வத் தச்சன் என்னைக்கொண்
டாடுவான் மன மகிழவே – பண்
– வல்ல
மட்டப் பலகை ஏந்தித் திட்டமாய் மரங்களை
வாய்ச்சியினால் செதுக்கி நாட்டுவேன்! – மன்னர்
வாழும் பள்ளியறைகள் சூழும் மணி மதில்கள்
வடிவாய்ச் சித்திரங்களைத் தீட்டுவேன்!
எட்டுத் திசைகளிலுள்ள பட்டவர்த்தன ரெல்லாம்
இதயம் களிக்கத் தொழில் பூட்டுவேன் – புவி
எல்லாம் அறிந்த பிரம்மன் சொல்லாதொன்றுமிருக்க
என் சிற்ப சாத்திரத்தைக் காட்டுவேன்
கெட்ட மதிமிகுந்த துட்டப் பிசாசர்களைக்
கீழ்மைப்படச் சூத்திரத்தால் ஆட்டுவேன் – நற்
கீர்த்தியில்லாப் பெருந் தூரத்தற்கு மறுமுறை
கேண்மை அமிர்தம் அள்ளி ஊட்டுவேன்
சட்ட முடனே கலை கற்றோரைப் பழித்திடும்
சண்டிகட்கு முதுரை சாற்றுவேன்.
தந்திர இந்திர மகேந்திர ஜாலம் கற்றோரும்
சரண் எனப் பணிந்திட ஓட்டுவேன்

ஈற்று எதுகை மாலையாக, நாட்டுவேன், தீட்டுவேன், பூட்டுவேன், காட்டுவேன், ஆட்டுவேன், ஊட்டுவேன், ஓட்டுவேன் என்ற சொற்கட்டு சொல்லி மகிழ வேண்டிய சுவையாகும்.

**அப்பர்—பர்மா விலாசம்**

அப்பர்-பர்மா என ஆங்கிலப் பெயரையே தலைப்பாகக் கொண்ட இவ்விலாசம் ஜே ஃபிரான்சின் என்பவரால் அமைக்கப்பட்டது. வெங்கடராம நாயகர் என்னும் புலவரின் ‘நூதனப் பாடல்கள்’ இதில் சேர்க்கப்பட்டுள்ளன என 1888-இல் வெளியான இதன் பழைய அச்சுப் பிரதியில் காணப்படுகிறது.

இதில் அப்பர்-பர்மாவின் பெருமையைக்கூறும் பாடல்விநோதமானது.

(இராகம்: கமாஸ் அட தாளம்)

**பல்லவி**

பார்க்க பார்க்க வெறுக்குமோ – அப்பர்

பர்மா எனும் நாட்டை அம்மா! (பார்க்க)

**அநுபல்லவி**

தீர்க்க மாக அதன் சிறப்பினை ஆதி
சேடனு லோர்விதம் செப்பிட லாகுமோ?

**சரணங்கள்** (பார்க்க)

சத்தியம் தவறாத நாடு தர்மமே மிகுந்த நாடு
பத்தியாகப் பூசையைத்தினம் பரிவுடன் செய்தேத்தும் நாடு (பார்க்க)

கனவிலும் பர புருஷர்களைக் கடுவிஷமாய் எண்ணிப் பெண்கள்
தினமும் தம் புருஷர்களைத் தெய்வமெனத் தொழுவார்கள் (பார்க்க)
சாதிபேதம் என்பதில்லை சாதாரணமாய் அவர்க்குள்
நீதியான வழிதனில் நிலையாக நிற்பவர்கள் (பார்க்க)

அப்பர் பர்மாவை ஓர் உயர்ந்த இலட்சிய நாடாகக் காட்ட முனைந்துள்ளார் கவிஞர்.

**பிரதாப சந்திர விலாசம்**

நவீனமாகப் பல வேடிக்கைப் பாடல்களை இசை வடிவிலே தந்து, அங்கதச்சுவையை ஊட்டும் சுவையான நாடகம் பிரதாப சந்திர விலாசம். அக்காலத்தில் இது மிகப்புகழ் பெற்றதாக விளங்கியதாம். இதனை இயற்றியவர் இராமசாமி ராஜு. இவர் ஆங்கிலத்திலே பட்டம் பெற்றவர். கி. பி. 1877-இல் இது இயற்றப்பட்டது.

இதில் வரும் வித்யாசாகரர் என்னும் பாத்திரம் ஆங்கிலத்தின் பெருமையை அளக்கும் கீர்த்தனை வேடிக்கையாக உள்ளது. நாத நாமக் கிரியை ராகத்தில்,

''நன்மைகள் கேளீர் - இங்கிலீஷின்
நன்மைகள் கேளீர்''

என்ற பல்லவியுடன் அமைந்த இசைப் பாடலில் மெட்டபிசிக்ஸ் (Metaphysics), மேதமெடிக்ஸ் ( Mathematics) , லாஜிக் (Logic) போன்ற பல அறிவியல் சொற்கள் பாடலில் அப்படியே ஆங்கிலத்தில் சேர்க்கப்பட்டுள்ள விசித்திரத்தைக் காணலாம்.

நல்ல கீர்த்தனைக்குரிய கட்டுக்கோப்புடன் இதில் உள்ள இசைப் பாடல்கள் விளங்குகின்றன என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு:

ஒரு பெண்ணைக் கண்டு மயங்கியவனைப் பற்றி நண்பன் பாடுவது:

(இராகம்: பைரவி தாளம்: ரூபகம்)

**பல்லவி**

கண்டவுடன் கருத்துருகிக்
கனிந்ததுவோ நெஞ்சமுமே

**அநுபல்லவி**

கொண்டலைக் கண்டுருகி மயில்
கொண்ட மயல் போன்றுமக்கும் (கண்ட)

**சரணம்**

பண்டழகி மேனகையைப் பார்த்தவுடன் தவ நெறியை
விண்டவிச்வா மித்ரமுனி மெய்ம்மறந்தாற் போலுமக்கும்
(கண்ட)

கல்வியெனும் கடல் கடந்தும்
காரிகையைக் கண்டவுடன்
பில்ஹணனுர் அன்றுபடும் பெருந்துயரந் தானடைந்தே
(கண்ட)

சுகந்தரும்நற் றவமியற்றும் துய்முனி
வனத்தில் மன்னன்
சகுந்தலையைக் கண்டுமதன்
சரங்கள்பட மெலிந்ததுபோல்
(கண்ட)

இந்தப் பாடல் வரிகளில் முதல் சீரில் எதுகை அமைந்துள்ள நயத்தைக் காணலாம்.

**மதன சுந்தரப் பிரசாத சந்தான விலாசம்**

இந்த நீண்ட பெயருடைய விலாசம் மதன சுந்தரேசராகிய சிவபெருமான் திருவருளால் சோழமன்னன் ஒருவன் பெற்ற மக்களின் விளையாட்டைச் சொல்லும் நாடகம். மன்னனுடைய மக்கள் நால்வரும் பலவகையான விளையாட்டுக்களை நிகழ்த்துவதும், பக்தியினுல் சிவன் அருள் பெறுவதுமான செய்திகளை இந்நாடகத்தில் காணலாம். மற்றப் புராணங்களைப் போன்ற கதைச்சுவை இதில் கிடையாது.

விருத்தங்கள் அகவல் முதலானவற்றுடன் சிந்து என்னும் வகை இசைப்பாடல்கள் பதினுறும் இதில் அடங்கியுள்ளன.

கண்ணுமூச்சி விளையாட்டைப் பற்றிய பாடலைப் பாருங்கள்:

(இராகம்: புன்னுகவராளி தாளம்: மிசிரம்)

**பல்லவி**

கண்ணுமூச்சி விளையாடுவோம் — நல்ல
கனமாக சுபங்கள்கை கூடுவோம்

**அநுபல்லவி**

அண்ணு நாமொரு தாச்சியை நேமித்து
அவருத்தரவுப்படி அங்கங்கே சோதித்துக் (கண்ணு)

**சரணம்**

கையில் அகப்படாமல் கரந்திருப்பவர் தம்மைக்

கண்டு பிடித்தவர்க்குக் கண்ணுமூச்சி பொத்தி
மெய்யாகவே தொட்டுத் தாச்சியின் முன்பாக
மிகுந்த உற்சாகமாய் மேன்மை பொருந்தியிடக் (கண்ணு)

கண்ணுமூச்சி விளையாடுவது எப்படி என்பதை இப்பாடல் எளிமையாக விளக்குகிறது.

**பாண்டிய கேளி விலாச நாடகம்**

பாண்டியன் தன் மனைவியோடு இன்ப விளையாடல் புரிவதைச் சித்திரிக்கும் இசை நாடகம். பாண்டியனும் மனைவியும் பூங்காவில் உல்லாசமாக இருக்கும்போது, இரத்தின வியாபாரிகள் இருவர் அணிமணிகளைக் கொணர்வதும் அரசன் வாங்குவதும் குறி பார்ப்பதும் இந்நாடகத்தில் சில முக்கிய நிகழ்ச்சிகள்:

''செந்திரு மார்பன் சிவா ஜீந்திர பூபதி
இந்தநல் விலாசம் இயம்புவீர் என்னப்
பிள்ளைசொல் மழலையைப் பெற்றவர் கேட்டே
உள்ளத்தில் இன்பம் உற்றிடல் போல் —
இன்தமிழ்க் கவிதை இயம்பிடக் கேட்டுச்
சித்தம் மகிழ்வர் சீருள்ள கவிகள்
என்பதால் நாராயணகவி இயம்பியது!''

என கதாசங்கிரகம் குறிக்கப்பட்டுள்ளதால் இதனை இயற்றியவர் நாராயண கவி என்று தெரிகிறது.

**மோகினி விலாசம்**

கொங்கு நாட்டின் ஒரு பகுதியான அரைய நாட்டைச் சேர்ந்த, கொடுமுடிக்கு 14 கல் தொலைவிலுள்ள சிவகிரி முருகன் பேரில் 155 ஆண்டுகளுக்கு முன் பாடப்பட்ட நாட்டிய நாடகம் இது. வித்வான் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் உதவிய ஏட்டுச் சுவடியிலிருந்து திரு. ம. ப. பெரியசாமித்தூரன் பெயர்த்து எழுதி அறிமுகப்படுத்தினர்.

'தென்றலே என்மீது வன்மமோ - நீயும்
தீக்கொண் டெரிப்பது தன்மமோ''

என்பது போன்ற தரமான பல்லவிகளுடன் கூடிய பல கீர்த்தனங்கள் இதில் அடங்கியுள்ளன.

நடனகலா ரத்னம் தஞ்சை டி. எம். அருணசலம் பிள்ளை தம் சண்முகானந்த பரத நாட்டியப் பள்ளி நடன மாணவியரைக் கொண்டு இதனை 1971-இல் தமிழ் இசை விழாவில் அரங்கேற்றினர்.

**ரத்னவதி நாடக அலங்காரம்**

திரிசிரபுரம் தாயுமான சுவாமி திருக்கோயிலின் மகிமையை விளக்கும் ரத்னவதி நாடக அலங்காரம் என்னும் நாடகம் மகாலிங்க பாரதி-

யாரின் மகள் ஆதிலட்சுமி அம்மாள் இயற்றினர். இது 1892-இல் நூல் வடிவம் பெற்றதாகத் தெரிகிறது.

**டம்பாச்சாரி விலாசம்**

சைதை காசிவிசுவநாத முதலியார் எழுதிய டம்பாச்சாரி விலாசம் நகைச்சுவை ததும்பும் சீர்திருத்த நாடகம் என்று சொல்லலாம். இதில் வரும் பாடல்கள் அவ்வளவு சுவையாக இல்லை. ஆனல் இவர் இயற்றிய டம்பாச்சாரி நாடகம் பிற்காலத்தில் பலரது நாடகக் குழுக்களில் பெயரும் புகழும் பெற்றது.

மகாபாரத விலாசம், சுப்பிரமணிய விலாசம், யயாதி விலாசம் முதலான இன்னும் பல விலாச நாடகங்களும் பத்தொன்பதாம் நூற்றுண்டில் நிகழ்ந்தன.

**யட்சகானம்**

யட்சகானம் என்ற இசை நாடக வகையும் பத்தொன்பதாம் நூற்றுண்டில் மக்களைக் கவர்ந்து வந்தது. வல்லாள மகாராஜா யட்சகானம், நீலியட்சகானம், சாரங்கதர யட்சகானம், சிறுத்தொண்டர் யட்சகானம் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

யட்சகானம் பாடல்களுக்குத் தாளம் இன்னதெனக் குறிக்கப்பட்டுள்ளது. தாழிசை, திரிபுடை, ஏகத்தாளி, திபிதை, சம்பை, அஷ்டதாளம், அர்த்த சந்திரிகை என்றெல்லாம் தலைப்புக்கள் தரப்பட்டுள்ளன. தாளத்தை முக்கியமாகக் கொண்டு ஆடப்பட்டது யட்சகானம் என்று தெரிகிறது. யட்சகானத்தின் பாடல்கள் எவ்வாறு இருந்தன என்பதற்கு வல்லாள மகாராஜா யட்சகானத்தின் சிந்துப்பாடல் ஒன்றை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

*''வந்தனர் வந்தனரே குமார*
*சங்கமர் - வந்தனர் வந்தனரே!*
*வந்தனர் சங்கமர் அந்தமதாகவே*
*பந்தெனும் மரமுலை சுந்தரநாதர்கள்*
*வந்தந்த நேயர்கள் மாமையல்கொள்ள*
*செந்தமி ழாலொரு சிந்துபாடியே*
*மாசறு மேனியில் பூசிய சந்தனம்*
*வாசனை எங்கெங்கும் வீசி கண்டிந்தத்*
*தாசிமையல் கொண்டு பேசியே மேல்விழும்*
*ஆசையுடன் வரும் வேசியர் வீதியில்*
*வந்தனர் வந்தனரே''*

## பாட்டு மயமான நாடகங்கள்

### புரூரவ சக்கரவர்த்தி நாடகம்

புரூரவன் கதை மகாபாரதத்தில் ஒரு கிளைக்கதை. சந்திரகுலத் தோன்றலான புரூரவன் தன் அரசையும் மனைவி மக்களையும் இழந்து அரிச்சந்திரனைப்போலப் பல துன்பங்களை அனுபவித்து இறுதியில் எல்லாவற்றையும் மீண்டும் பெற்ற கதை இது. தமிழ்நாட்டின் பலவகையான கலைவடிவங்களில் இக்கதை வழங்கி வந்தது. புரூரவச்சக்கரவர்த்தி அம்மானை, வாசகப்பா, நாடகம் எனப் பல நூல்கள் வெளிவந்துள்ளன.

புரூரவச் சக்கரவர்த்தி நாடகத்தை இயற்றியவர் 'தொண்டை மண்டலம் வல்ல காளத்தி நகர் வீ. அயோத்திதாச கவிராஜ பண்டிதர் புதல்வரும் சங்கீத சாகித்ய சோதிட வல்லவருமாகிய இராமச்சந்திரப் புலவர்' என நூலின் முகப்பில் விளம்பப்பட்டுள்ளது. 'நாடகத்தை அரங்கேற்றியவர் மதுரகவி கபாலமூர்த்திப் பிள்ளை' என்ற குறிப்பும் காணப்படுவதால், இந்நாடகம் நாட்டில் சிறப்பாக நடைபெற்று வந்தது எனத் தெரிகிறது.

நடனமாது புரூரவச் சக்கரவர்த்தியைப் புகழ்ந்து, ஆடிப்பாடும் பாடல் ஒன்றின் பல்லவியை மட்டும் பார்த்தாலே நாடக ஆசிரியரின் இசையார்வம் புலப்படும்.

(இராகம்: காம்போதி தாளம்: ஆதி)

*அழகுள்ள துரை இவர் தானடி - சகி*
*சரி-கம-பத-நிச-பம-கரி-ச மா* (அழகு)

### அமுத மதன நாடகம்

பாகவதக் கதையை அடிப்படையாகக் கொண்டது. அமிர்தம் கடைந்த புராணக் கதை இசை நாடக வடிவில் தரப்பட்டுள்ளது.

'சுக்கிர வாரமும் ரேவதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் நீலாயதாட்சி அம்மாளின் சாகித்யமான அமுத மதனம். மிருதி மதுர பாகவதக்கதை நாடகம் எழுதி முடிந்தது. திருமந்திர நகராகிய பாளையங்கோட்டையில் பிரசித்தியான வெங்கடாசல முதலியார் சபையில் நட நாடக சங்கீதத்துடனே அரங்கேறியது'' என்ற குறிப்பு இந்த நாடகச் சுவடியில் காணப்படுகிறது. நடனத்துக்கும் நாடகத்துக்கும் உரிய இசையுடன் இது நடந்தது என்பது குறிப்பு.

இந்த நாடகம் பற்றிய விருத்தம் ஒன்று காவேரி ராகத்தில் கணபதி துதியாக அமைக்கப்பட்டுள்ளது:

*செய்யவளை மார்பினிலே அணிந்த தேவன்*
*தெரிந்து திருப் பாற்கடலைக் கடைந்து விண்ணோர்க் (கு)*
*உய்யும்வழி யாகவே நல் அமுதம் ஈந்த*

உசிதநா டகத்தமிழை உரைசெய் முன்னே
தூய்யதொரு வெண்கலையும் தரித்து நாலும்
தோளிணையிற் பனிதுலங்கத் துதிக்கை யோடும்
ஐயனெனும் ஆனைமுகக் கடவுளே பா
ராட்டுவாய் கதைக்குவழி காட்டு வாயே!

**கந்தர் நாடகம்**

கந்த புராணத்தை அடிப்படையாகக்கொண்ட இந்நாடகம் வால-சுப்பிரமணியக் கவிராயரால் இயற்றப்பட்டது. ரத்தாட்சி வருடம் பங்குனி வியாழன் உத்தர நட்சத்திரத்தில் பழனியில் அரங்கேற்றப்பட்டது என்ற குறிப்பும் காணப்படுகிறது. கந்தகீர்த்தனை என்ற பெயரும் இதற்கு உண்டு.

இதில் உள்ள பாடல்களின் சுவைக்கு ஒரு துளி: வீரவாகு முருகனை நோக்கிப் பாடுவது:

(இராகம்: புன்னாகவராளி)

சோதி வடி வேலுடைய
சாமியுன் சரணம்
தூது சென்ற வீரவாகு
வந்தேன் உன் சரணம்

வீரவாகு முருகனிடம் தன்னைத்தானே அறிமுகம் செய்துகொண்டு வரும் பாடல் இது.

**நச்சுப் பொய்கை நாடகம் :**

பஞ்சபாண்டவர் வனத்தில் அலைந்து திரிகையில் தாகவிடாய் தணிக்க நச்சுப் பொய்கை நீரை அருந்தி, உயிரிழந்து, பின்னர் நான்முகனையும் எமனையும் வழிபட்டு உயிர்பெற்ற கதை இந்நாடகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இராக் காலங்களில் நடக்கும் கூத்துப் பாட்டுக்கள் நடையில் அமைந்த பாடலும்உரையும் விரவியது என்ற குறிப்பு காணப்படுகிறது.

கேள்வி-பதில் பாணியில் அருபமாக வந்த எமனுக்கும் தருமருக்கும் நடக்கும் தர்க்கம் சுவையானது :

"தனமிருந்தவர்க் காதாரம் ஏதையா — ஓ தருமராஜா !
தனமிருந்தவர்க் காதாரம் தானம் — ஓ அருபவானே !
இனியது உலகில் ஏது சொல்லையா — ஓ தருமராஜா !
இனியது உலகில் மழலைச் சொல்லே — ஓ அருபவானே !
நிற்பதுலகில் ஏது சொல்லையா — ஓ தருமராஜா !
நிற்பதுலகில் கீர்த்தி ஒன்றுமே — ஓ அருபவானே !

கற்பதுலகில் ஏது சொல்லையா — ஓ தருமராஜா !
கற்பதாவது சாவறக் கற்பதே — ஓ அருபவானே !
அற்பமான துலகில் ஏதையா — ஓ தருமராஜா !
அற்பமாவது பிறர்கை யேற்பதே — ஓ அருபவானே !"

**சவ்வருண நாடகம் :**

அத்திஞபுரத்தை அரசாண்ட சவ்வருணன் என்னும் சந்திரகுலத்து அரசன் சூரிய புத்திரியான தபதி என்பவளை மணந்து குரு என்ற குழந்தையைப் பெற்றெடுத்த கதையைச் சொல்வது, இந்த நாடகம். தபதியின் மகனை குருவே கௌரவர் குலத்தின் மூதாதை என்று கருதப்படுகிறது.

இந்த நாடகத்தை இயற்றியவர் பையனூர் வரதராசப்பிள்ளை. நாடகத்தில் கதையம்சம் குறைவாக இருந்தாலும் பாடல் அமைப்பு நல்ல முறையில் அமைந்துள்ளது. இதோ ஓர் எடுத்துக்காட்டு :

பாலை நிலத்தலைவராகிய வேடர் வருகிற விதம்.

(இராகம் : கல்யாணி தாளம் : ஆதி)

**பல்லவி**

எயினர் நாங்களே - பாலைநில
இறைவர் நாங்களே

**அநுபல்லவி**

முயல் உடம்புகள் முதிர் குள்ளநரி
முடுக்குடன் செல்லும்
இடம்கண்டு வெல்லும் (எயினர்)

**சரணம்**

இருப்பு வலையைப் பிடித்தே - வானில
எங்கும் முளைதனை அடித்தே - கட்டிப்
பருப்பத முளையிலிருந்து வருமுட்
பன்றியினைக் கொலை
யன்று செயும் மலை (எயினர்)

எயினர் நாங்கள் பாலைநில இறைவர் நாங்கள் என்று வேடர்கள் பாடும் கம்பீரத்தில் நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற பாரதி வாக்கின் தத்துவத்தைப் பல ஆண்டுகளுக்கு முன்பே இந்தப் பாடல் ஆசிரியர் தொட்டுக்காட்டுயிருக்கிருர் என்பது பளிச்சிடுகின்றதல்லவா?

**மன்மத நாடகம்**

இதற்கு இரதி தேவி புலம்பல் என்ற பெயரும் உண்டு. காமதகனம் நாடகப் பாணியில் ஒருவகை இது. மன்மதன் தகனம் ஆனதும் இரதி தேவி புலம்புகின்ற சோகப் பாடல் இதயத்தைத் தொடுவதாகும்.

அபயம் அபயமய்யா
ஆதி சிவன் பாதத்தில்
அடியாளும் சரணமய்யா !
போதுமய்யா இந்த மட்டும் உம்முடைய
பிள்ளை முகம் பாருமையா !
கன்றிழந்த பசுப்போலே
கதறுகிறேன் பூமியிலே !

.... .... .... .... .... ....

ஆற்றிலே கரைத்த புலி ஓ சிவனே
கர்த்தாவே ! — நான்
ஆனேன் ஒரு பாவி !
தாமரை நீரது போல் நான்பாவி ! சண்டாளி!
தவிக்கிறேன் பெண்ணரசி !

கணவனை இழந்த துயரத்திற்குக் கன்றிழந்த பசுவை ஒப்பிட்டுக் காட்டுவது முறையில் பொருத்தமாக இல்லை யெனினும் சோகத்தின்சிகரத்திற்கு அதனை ஓர் அளவாகக் குறிப்பிட்டாள் எனக் கொள்ள வேண்டும். பெண்ணரசியான தான் சண்டாளியா என்று கேட்டது போன்ற உருக்கம் ஈற்றடியிலே காணப்படுகிறது.

இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இந்த நாடகக்கதையின் பல வடிவங்கள் தெருக்கூத்து வகையில் காமதகனம் எரிந்த கட்சி எரியாத கட்சி என்றெல்லாம் சொல்லாடல் புரிவதற்குக் காரணமாயிருந்தன என்பதை நாடறியும்.

இதைப் போன்றே பாண்டியர் சூதாட்டம் என்ற நாடகமும் அல்லியரசாணி மாலையின் பாணியில் அமைந்த பாமாலையாகும்.

**தாசில்தார் நாடகம்**

டம்பாச்சாரி விலாசம் எழுதிய சைதாபுரம் காசிவிசுவநாத முதலியார் எழுதிய பரபரப்பான நகைச்சுவை நாடகம் இது. சமுதாயக் கேடுகளைச் சாதுர்யமாகக் குத்திக்காட்டும் சூடும் சுவையும் நிறைந்தது.

இந்த நாடகத்தில் கிராமக்கணக்கர் வருகிற ஒரு பாடல் சிற்றூர்களில் அட்டகாசம் செய்யும் கணக்கர் சிலரது குணாதிசயங்களை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது.

(இராகம் : தோடி தாளம் : ரூபகம்

**பல்லவி**

கணக்கர் நாங்களே — கிராமக்
கணக்கர் நாங்களே !

**அநுபல்லவி**

இணக்கமில் குடிகளை உருட்டுவோம்

வணக்கமாய்ச் சர்க்காரை மிரட்டுவோம் — (கணக்கர்)
ஊரை அடித்து உலையில் போடவும்
உள்ளுக்குள்ளே குட்டிக் கலகம் தேடவும்
ஆரையானாலும் அடுத்துக் கூடவும்
அவர்களைப் பின் கெடுக்க நாடவும்
அறிந்தவ ரென அகிலம் மதிக்கும்.
சிறந்தவர் எனத் தீயோர் துதிக்கும் — (கணக்கர்)
சாகுபடியைத் தரிசில் சேர்க்கவும்
தரிசைச் சாகுபடியில் சேர்க்கவும்
போகம் ஒன்றை இரண்ட தாக்கவும்
புரட்டி இரண்டில் ஒன்றை நீக்கவும்
பொய்யைப் பேசிப் பொருளைத் தேடுவோம்!
மெய்யைப் பேசி மிகக்கொண் டாடுவோம்! — (கணக்கர்)

இப்படியாக வளர்கிறது பாடல். சிற்றூர் கணக்குப்பிள்ளை பற்றியும் இப்படித் தோடி ராகத்தில் அருமையான இசைப்பாடல் அமைந்த நேர்த்தியை என்னவென்று சொல்வது! பாதிக்கப்படும் கணக்குப்பிள்ளைகளும் கூட இந்தப் பாடல் நயத்தை மெச்சுவார்கள்!

நன்னிலம் நாரணன் என்பவர் எழுதிய சுபத்திரை கல்யாணம், பூசாரி முத்தன் எழுதிய அர்ச்சுனன் தவம், அனந்தர் எழுதிய உத்தரராமாயண நாடகம், ஸ்ரீரங்கம் சேஷகவிராயர் இயற்றிய பராங்குச நாடகம், பொன்னையா குமாரசாமி இயற்றிய வீங்கீஸ்வர சுவாமியார் பாரிஜாத நாடகம், ராஜகோபாலன் இயற்றிய சுக்கிரீவ விஜயம், குமரபிள்ளை இயற்றிய வள்ளியம்மை நாடகம், பெருமாளையர் இயற்றிய தேரூர்ந்த நாடகம், முதலான நூற்றுக்கணக்கான பாட்டு நாடகங்கள் பத்தொன்பதாம் நூற்றூண்டில் மலர்ந்துள்ளன. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள புத்தகப்பதிவாளர் பட்டியல் வரிசையில் பெயர் விவரங்களைக் காலமுறையுடன் காணலாம்.

**மனோன்மணீயம்**

தமிழ் இலக்கியத்துள் முதன் முதல் முழு நாடக வடிவில் அமைந்த கவிதை நாடகமான மனோன்மணீயம் பத்தொன்பதாம் நூற்றூண்டின் இறுதியில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. ஏறக்குறைய 4500அடிகளில் அமைந்த இந்நாடகக் காவியத்தில்கதைச்சிறப்பு, பாத்திரப்படைப்பு, வெல்லும் சொற்கள் ஒளிவீசும் உரையாடற்கவிநயம், மெய்ப்பாட்டு உணர்ச்சி, தத்துவ நுட்பம் முதலான பல சிறப்புக்கள் காணப்படுகின்றன. ஷேக்ஸ்பியரின் நாடகங்களுக்கு ஒப்பாக இதனைச் சொல்லலாம். ஆயினும் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் அப்படியே மேடையேற்றப்பட்டுப் பெற்ற புகழை மனோன்மணீயம் இன்னும்

பெறவில்லை என்றே சொல்ல வேண்டும். காரணம் இதனை அப்படியே மேடையேற்றும் துணிவைத் தொழில்முறை நாடகக் குழுக்கள் பெற–வில்லை. இந் நாடகத்தில் இசைப் பாடல்கள் இல்லாமையும் கவனிக்க வேண்டிய குறிப்பாகும்.

**சரசாங்கி நாடகம்**

மகாகவி ஷேக்ஸ்பியரின் சிம்பலேன் என்ற நாடகத்தின் பின்ன-ணியிலே இனிய தமிழில் சரசாங்கி என்னும் சுவையான நாடகத்தைப் படைத்தவர் டி.ஆர். சலசலோசனச் செட்டியார் என்னும் கலைப்புலவர்.

1897இல் வெளியான நாடகம் இது. உரைநடை நாடகமாயினும் இடையிடையே பல இசைப்பாடல்களை இதில் காணலாம். கட்டுக்கோப்-பும் இசை நயமும் செறிந்த பாடலுக்கு ஓர் எடுத்துக்காட்டு :

கதைத்தலைவன் அழகானந்தன் தலைவி சரசாங்கியைப்பிரிய மன-மில்லாமல் தவிக்கும் கட்டம்.

(இராகம் : தேசிகத் தோடி தாளம் : ஆதி)

**பல்லவி**

எப்படி உனைப் பிரிவேன்
என்னுசை நாயகி? (எப்படி)

**அநுபல்லவி**

இப்படியும் வருமென்றே
எண்ணினே னலனே இன்றே (எப்படி)

**சரணம்**

முழுக் கொம்பின் தேன் உடைந்து
முடவன் கையில் அடைந்து
ஒழுக்கெடுத்தே மண்பட்டு
ஒழிந்ததைப்போல் நான் விட்டு (எப்படி)
அமுதே நின்மொழி என்றும்
அகலா தென்மனம் நின்றும்
நமதெலாம் நிறை வேற
நாள்வரு மட்டும் வீற (எப்படி)
உள்ளன்ப ருத மாதே
உயிர் சோர்ந்திருக்கும் போதே
கள்ளனைப் போல ஏங்கி
கடிநகர் தனை நீங்கி (எப்படி)

# 4

# பொற்காலப் படைப்பாளிகள்

**பம்மல் சம்பந்தனர்**

முழுவதும் பாடல் மயமாக இருந்த நாடக மேடைக்கு மேல்நாட்டுப் பாணியில் உரையாடலை உரைநடையில் அமைத்து நாடகம் எழுதத் தொடங்கியவர் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களே. இவரது முதல் நாடகம் 1891-இல் வெளியாகியது. இவர் 94 நாடகங்கள் எழுதியுள்ள நீண்டவரலாறு உடையவர்; இவருக்குத் தொண்ணூற்றி நான்கு வயது நீண்ட ஆயுளும் கிடைத்தது. ஆண்டுக்கு ஒரு நாடகம் என்ற கணக்கில் இவரது வயதும் நாடக வகையும் அமைந்த சிறப்பு எண்ணிப் போற்றுவதற்கு உரியது. இவர் நாடகம் எழுதத் தொடங்கிய பின் முழுவதும் பாட்டிலே நாடகம் அமைந்திருந்ததற்கு ஒரு திருப்பமாக, நாடகத்திலே பாட்டு என்ற மாற்றம் ஏற்பட்டது. ஆம்; இவருடைய வசன நாடகங்களில் பொருத்தமான இசைப்பாடல்கள் தேவையான கட்டங்களில் இடம் பெற்றுள்ளன.

இவருடைய நாடகங்களில் கதையம்சமும், நவரசக் கட்டங்களும் சிறப்பாக அமைந்துள்ளன. தமிழ்நாடக உலகத்திற்கு ஏறக்குறைய 75 ஆண்டுகள் அயராது பணியாற்றி நாடகத் தந்தை என்ற புகழை ஈட்டியவர் பம்மல் சம்பந்தனர். இவருடைய நாடகங்களைத் திறன் ஆய்வு செய்து மிகப்பெரிய ஆராய்ச்சிக் கட்டுரையை உருவாக்கி திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார் அறிஞர் திரு ஏ. என். பெருமாள். எனவே தக்கவர் ஒருவர் டாக்டர் பட்டம் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த வளமான நாடக இலக்கியம் படைத்தவர் நாடகப் பேராசிரியர் என்ற சிறப்பு நிலைபெறுகின்றது.

இவருடைய நாடகங்களுக்கு இவரே ஆங்காங்கு சில பாடல்களும் எழுதியுள்ளார்.

தாம் பாடல்களுடன் உருவாக்கிய நற்குல தெய்வம் (1899) சதி சுலோசன (1934) ஆகிய நாடகங்களை ஆப்பரா (opera) என்னும் இசை-நாடக வகையில் சேர்க்கலாம் என நாடகப்பேராசிரியரே குறிப்பிட்டுள்ளார்.

40 பாடல்கள் அடங்கிய சதி சுலோசனவில் கீழ்க்கண்ட கீர்த்தனையையும் காணலாம் இதனை இயற்றியவர் இராமசாமி சிவன். இந்திரஜித் மாண்டதும் அன்னை மந்தோதரி அலறும் கட்டம் :

(இராகம் : பிலஹரி தாளம் :திரிபுடை)

பல்லவி

*மகனே மடிந்தனையோ - மகிதலத்தில்*
*- (மகனே)*

அநுபல்லவி

*அகமகிழ் இலங்கா புரக் காவலனே*
*ஆதிக்க மேற்ற சோதித் தவங்கிடந்த*
*- (மகனே)*

*இந்திரனைச் சிறைபிடித்த இந்திர ஜித்தே*
*எந்தனை மறந்தனையோ - இது விதியோ*
*ஏது செய்வேன் இனி*
*மாது நான் தானே! (மகனே)*

கீர்த்தனை வடிவத்துடன் பம்மல் சம்பந்தனர் பல பாடல்களை எழுதிச் சேர்த்துள்ள போதிலும் அவற்றில் இசைப் பாடலுக்குரிய விறுவிறுப்பும், உயிர்ப்பும் அவ்வளவாக இல்லையென்றே சொல்ல வேண்டும். அதனல்தான் இவர் எழுதிய மனோகரா போன்ற புகழ் பெற்ற நாடகங்களுக்கு மணிமணியான பாடல்கள் எழுதும் பொறுப்பைச் சங்கரதாஸ் சுவாமிகள், மதுர பாஸ்கரதாஸ் போன்ற பாடலாசிரியர்கள் ஏற்றுஇசை நயம் செறிந்த பாடல்களை வழங்கினர்.

**பண்டிதர் கோபாலாச்சரர்**

தேசிய உணர்ச்சி ஊட்டும் முதல் தமிழ் நாடகம் என்ற சிறப்புக்கு உரிய ஆரிய சபா என்ற நாடகத்தை இயற்றியவர் பண்டிதர் க. கோபாலாச்சார். 1894-இல் வெளியான இந் நாடகத்தின் பதிப்புக் குறிப்பில் ''இஃது (இந்தியன் நாஷனல் காங்கிரஸ் விஷயமாக) ஓர் தமிழ்ப்பண்டிதரால் இயற்றப்பட்டது'' என்ற வாக்கியம் காணப்படுகிறது. நகைச்சுவை உரையாடல்களுடன் இசைப் பாடல்கள் பலவும் இந்நாடகத்தில் இடம் பெற்றிருந்தன. விக்டோரியா அரசிக்கு வணக்கம் செலுத்தும் இறுதிப்பாடலை இப்போது காணும்போது வேடிக்கையாக இருக்கிறது.

**பரிதிமாற் கலைஞர்**

பம்மல் சம்பந்தனார் நாடகப்பணி தொடங்கிய காலத்திலே ஆங்கில அறிவின் காரணமாக, ரூபாவதி, கலாவதி போன்ற அருமையான உரைநடை நாடகங்களை எழுதினார் பரிதிமாற் கலைஞர் என்னும் வி.கோ. சூரியநாராயண சாத்திரியார். இவைகளில் இவர் இயற்றிய இசைப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

பகலில் கல்லூரிப் பணியும் இரவில் நாடகப் பணியும் இவருடைய கலை வாழ்வுக்கு ஒளி தந்தன. தமிழ் நாடகக் கலையின் தரம் ஓங்க வேண்டும் என்ற உயர் நோக்கத்துடன் 'நாடகவியல்' என்ற நாடகத் தொல்காப்பியத்தை இயற்றிய பெருமை இவருக்கு உண்டு.

**சங்கரதாஸ் சுவாமிகள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் முத்தமிழ்க் கலை வளர்க்கும் வித்தகராக எழுந்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். இவருடைய புகழை உரைநடையாகச் சொன்னால் போதாது. கவிதையிலே இவர் பெருமைக்கு உருவம் கொடுக்க விரும்புகிறேன்.

*தங்களது வாழ்வெல்லாம் தமிழுக் கீந்த*
*சங்கத்துச் சான்றோரின் மரபில் வந்த*
*சங்கரதாஸ் சுவாமிகளை மறக்கலாமா?*
*தமிழாலே புகழ்வடிவை வரைவிப்போமா?*
*செங்கரும்புச் சாறனைய பாடல் இன்பம்*
*செவிமடுத்து மகிழ்வோமா? மக்கள் நெஞ்சில்*
*பொங்கி வரும் தமிழ் உணர்வை மாலை யாகப்*
*புனைவித்து மனமாரப் போற்று வோமா?*
*எழுதாத உரையாடல் மனம்போல் பேசி*
*ஏனென்று கேட்போரே இல்லை என்று*
*பழுதான நிகழ்ச்சிகளும் கதையும் கொண்டு*

*பார்ப்பவரின் மனம் சுழிக்கக் கூத்துப்போட்டுப்*
*பொழுதெல்லாம் வீணுக்கும் புரையை நீக்கிப்*
*புனிதமுறக் கலைமேடைக் கட்டுப்பாடு*
*வழுவாத ஒழுங்கு முறை வகுத்த வீரர்*
*மறக்குலத்துச் சங்கரரை மறப்பார் யாரே?*
*பேரறிஞர் சங்கரதாஸ் எழுது கோலைப்*
*பிடித்தவுடன் ஊறிவரும் கருத்துவேகம்;*
*ஓரிரவில் அபிமன்யு நாட கத்தை*
*உருவாக்கி ஞரென்ருல் கலைஞர்க்குள்ளே*
*யாரிவர்க்கு நிகராவார்? யாழ்ப்பாணத்தின்*
*அறிவுலகே வலம்புரிச்சங் களித்த தன்றே?*
*பேரிருக்கும் நூருண்டு மட்டு மல்ல!*
*பேருலகம் உள்ளவரை நிலைக்கும் அம்மா!*

தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் எனப் போற்றப்படும் சங்கரதாஸ் சுவாமிகள், ஒவ்வொரு நாடகமும் இதயத்தை ஈர்ப்பது எனத்தகும் நாற்பது நாடகங்களை இயற்றியுள்ளார். ஆழ்ந்தகன்ற நுண்ணறிவுப் புலவராக இவர் விளங்கியதால் இவருடைய நாடகங்களில் உரையாடலும் இசைப்பாடலும் ஒவ்வொரு கட்டத்திலும் ஒன்றையொன்று மிஞ்சும் வண்ணம் அமைந்திருக்கக் காணலாம்.

''ஒரு கதையின் வரலாற்றைத் திரை, உடை, நடை பாவனைகளாலும், இனிய கீதங்களாலும் இடத்திற்குத் தக்கபடி வசனத்துடன் இயற்கையாக நடத்தப்படுவதே நாடகம் எனப்படும்'' எனச் சங்கரதாஸ் சுவாமிகள் ஒரு சூத்திரம் போலக் குறிப்பிட்டார்.

'' சுலோசன சதி '' நாடகத்தில் இவருடைய எண்பத்தைந்து இசைப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதே போல ஒவ்வொரு நாடகத்திலும் பற்பல இசைப்பாடல்கள் அற்புதமாக அமைந்துள்ளன. நாடக மேடையிலே தரமான சங்கீத சுகம் கமழச் செய்தவர் சுவாமிகள்.

இவருடைய நாடகங்களில் நாரதர் பாடும் பொதுவான பாடல் சங்கீத சுகம் பற்றியது.

(இராகம் : பியாகு                    தாளம் : ஆதி)

*சரிகம பதநியாம் எழுசுர நிலைய*
*சங்கீத சுகமே பெரிய சுகம்*
*கவியுரி யுடையவன் அடிதொழு தனுதினம்*
*கதிபெறும் வகையது கருதுவ துவேமனம்*
*சுரிகுழல் நெடுவிழி மடவரிவைய ரினம்*
*தோய்மன மடையுமோ சுகமவுனம்* (சரி)

செவியுணவுக்கு நிகர வியுணவு மாகாது
தேடினு லும்உவமை ஓர்பொருள் கிடையாது
குவியும்ஐம் பொறிஇசை கொண்டிடில் விரியாது
குரங்காம் மனம் ஒடுங்கும் தாவாது — இசை (சரி)

**இதே போல் பிரகலாதா நாடகத்தில் நாரதர் வரும் ஒரு கட்டத்தில் நாதநாமக்கிரியை இராகத்தில் அமைந்த பாட்டிலும் இசையினிமை தவழ்கின்றது:**

**(இராகம் : நாத நாமக்கிரியை தாளம்: ஆதி )**

**பல்லவி**

சங்கீத சாரமே
சாற்றவும்அ பாரமே — **(சங்கீத)**

**அநுபல்லவி**

ஜதிசுதி லயவகை மனமதை யொருநிலை
தனிலுறநிலை நாட்டும் — மதி
தருநிஜமது காட்டும் — சிவ
தலமதில் அருள் கூட்டும் — ஒரு
சஞ்சலமில் லாமல் ஓட்டும் — **(சங்கீத)**

**சரணம்**

பிறவியெ னுமரிய பிணிவிலகிட இது
பெரிய அமிழ்த மாகும் — வந்து
பெருகிய வினை போகும் — செய்த
பிழை விலகியும் ஏகும் — ஆசைப்
பித்த மென்னுங் காடு வேகும் — **(சங்கீத)**

**சீமந்தனி நாடகத்தில் அவலோகன் என்னும் சிற்றரசன் சாமவான் என்னும் பாத்திரத்துக்குப் பெண் வேடம் போட்டுவிடச் சொல்லும் பாட்டு எப்படி ஒப்பனைக்கலையின் விளக்கமாக அமைந்துள்ளது என்பதை எண்ணியெண்ணி மகிழலாம்.**

**(இராகம் : புன்னாகவராளி தாளம் : ஆதி)**

பெண் வேஷம் போட்டு விடடா!
இவனுக்கின்று
விண்ணவ ரம்பையை
எண்ணி வியந்திட
விரித்த குழலை எடுத்துக் கூட்டி
முடித்து மலர்கள் தொடுத்துச் சூட்டி
விழியிரு கணையென எதிர்பவர் விலக
அழகுற எழுதிய கருமையும் இலக

விந்தை பொருந் திரு பந்து புனைந்து
விளங்க உயர்ந்த தனங்கள் வனைந்து
நெற்றிச் சுட்டி ஜடை பில்லை கொப்பு
நிகரறு தலையணி இருபிறை வைப்பு
அட்டிகை வயிரம் பட்டைச் சிவப்பு
அழகிய பதக்கம் உலக மதிப்பு
கம்மல் ஜிமிக்கி புலாக்கொடு நத்து
கண்ட சரப்பளி கண்டிகை முத்து
காசு மாலை கடியாரச் சங்கிலி
கம்பி காரை பொன் சன்னச் சங்கிலி
வாகு வலய மொடு காப்புக் கொலுசு
வளையல் கங்கணவகை பலபல தினுசு
பச்சை நீலமுத லாம்நவ ரத்னம்
பதித்ததாகப் பத்து விரலுக்கு மோதிரம்
இறுக்கி மேலேபூட்டு மிடைஒட்டி யாணம்
இணைமுகப்பு வயிரங்கழல்காய்ப் பிரமாணம்
பாதசரம் கிண்கிணி தண்டை மயங்கை
பணித்த காலாழி, பிலி, மிஞ்சி, சதங்கை
பக்கம் சரிகையுள்ள பட்டுரவிக்கை
பளபளப்பான சேலை பணியணி விதத்தை,
கொண்டு சிங் காரித்துக் கோலமென் மேலே
கோதி எழுதி மதனு ரதிபோலே

சீமந்தனியின் புராணக் காலத்தில் நடப்பதாக வரும் பாடலில் 'கடியாரச் சங்கிலி'யையும் நவீன அணியாகப் புகுத்தியுள்ளது ரசனைக்குரியதல்லவா?

தமது நாடகங்களுக்கு மட்டுமின்றி பம்மல் சம்பந்தனாரின் மனோகரா முதலான நாடகங்களுக்கும் இவர் இனிய பாடல்கள் இயற்றியுள்ளார்.

ஒரு சமயம் மனோகராவில் வசந்தசேனையின் துயரத்தைப் பற்றிய ஒரு பாடல் அமைக்க வேண்டிய சிந்தனையில் சுவாமிகள் இருந்தார். அப்போது சந்தச் சரவம் உடுமலை முத்துச்சாமிக் கவிராயர் சுவாமிகளைக் காண வந்தார். இருவரும் புலமை நண்பர்கள். சுவாமிகள் கவிராயரை நோக்கி ''இந்தக்கட்டத்துக்கு ஒரு பாட்டுச்சொல்'' என்றார் அன்புரிமையோடு. ஆசுகவியான முத்துசாமிக்கவிராயர், அக்கணமே,

''தூக்கம் பிடிக்க வில்லையே மன ஏக்கம்
தொடர்வினை துன் மார்க்கம்!''

என்ற பல்லவியைச் சொன்னார். சுவாமிகளின் மகிழ்ச்சிக்கு அளவே-யில்லை. உடனே தம் மடியில் இருந்த முந்நூறு ரூபாய் நோட்டுகளை அப்படியே முத்துச்சாமிக் கவிராயரிடம் வழங்கி அவரைக் கட்டித்தழுவிப் பாராட்டினார். கவிராயர் ஆனந்தக் கண்ணீர் மல்கினார். தம்மோடு ஒத்த பாடலாசிரியர்களைக் களங்கமற்ற மனத்தோடு சுவாமிகள் பாராட்டிய பண்புக்கு இது போன்ற உருக்கமான நிகழ்ச்சிகள் சில உண்டு என இவரது பெருமையைப் போற்றும் முதுபெரும் நகைச்சுவை நடிகர் கே. சாரங்கபாணி கூறி வியக்கின்றார்.

**உடுமலை முத்துசாமிக் கவிராயர்**

சுவாமிகளைப்பற்றி நினைக்கும்போது கூடவே முத்துச்சாமிக்கவி-ராயர் நினைவும் வரும். சுவாமிகளும் கவிராயரும் உள்ளத்தால் ஒன்று-பட்ட புலமையாளர்கள். சுவாமிகள் தம் பாடல்களின் இறுதியில் தமது பெயர் முத்திரை வைக்கும் வழக்கமில்லாதவர். ஆனால் கவிராயர் பாடல்-களில் தமது பெயர் முத்திரையைப் பதிக்காமல் விடமாட்டார்! சுவாமி-களின் பெயரையும் பாடல் முத்திரையில் சேர்க்க வேண்டுமென்ற ஆவ-லோடு, கவிராயர் தாம் இயற்றிய இராமாயண நாடகப் பாடல்கள் சிலவற்றில் 'முத்துச்சாமி சேர் சங்கரதாசர்' என்ற இணைப்பு முத்திரை-யைப் பதித்துப் புலமை நண்பரின் பெருமையை நிலைநாட்டியுள்ளார்.

புலமை விளையாட்டிலும் இருவரும் இணையானவர்கள். ஒருமுறை கவிராயர் சங்கரதாசரை நோக்கி, ''சுவாமிகளே உம்முடைய பாடல்கள் முள்ளும் முரடும் போல் உள்ளன!'' என்றாராம். உடனே சுவாமிகள் புன்னகை பூத்த வண்ணம் ''கவிராயர் பாடல்கள் கல்லும் கரடுமாக இருக்கும்போது என்பாடல்கள் முள்ளும் முரடுமாக இருப்பதில் வியப்-பில்லையே'' என்றாராம். முள்ளும் முரடும், கல்லும் கரடும் என்ற தொடர்களுக்கு ஆழமான பொருள் பலாச்சுளையும் கற்கண்டும் ஆகும். இருவரும் ஒருவருக்கொருவர் மெச்சிக்கொண்ட நிகழ்ச்சி இது.

விபீஷண சரணாகதி, போஜராஜன், பீஷ்மர் சபதம், ஞான சவுந்-தரி, தயாநிதி, கண்ணாயிரம், மன்மத தகனம், மதுரைவீரன் முதலான நாடகங்களை முத்துச்சாமிக் கவிராயர் படைத்துள்ளார். ஓரடி, சந்தம், வண்ணம் ஆகிய வகைகளில் கவிராயரின் பாடல்கள் நாடக மேடையில் முழங்கி வந்தன. புகழ்பெற்ற நடிகர்களும் உடன்பிறப்பாளர்களுமான கே. எஸ். செல்லப்பா ஐயர், அனந்த நாராயணய்யர் ஆகியோரின் ஆரிய கான சபாவில் கவிராயர் சில ஆண்டுகள் நாடக ஆசிரியராகப் பணியாற்றினார்.

**சுப்பிரமணிய சிவா**

தேச பக்த வீரராகிய சுப்பிரமணிய சிவா பாரத விலாச சபை

என்ற பெயருடன் ஒரு நாடக சபையை இயக்கி வந்தார் எனவும் அதில் சிவாஜி, ராஜாதேசிங்கு ஆகிய மாவீரர்களின் வரலாற்று நாடகங்களை நடத்திச் சுதந்திரக் கனல் மூட்டினார் எனவும் தெரிகிறது. உச்சக் குரலில் வீரமுழக்கப் பாடல்களை மேடையில் முழங்கிப் பாட்டும் கூத்தும் வளர்வதற்குத் துணைபுரிந்த பெருமையுடையவர் இவர். பாரதி பாடல்களை அரங்கிலே ஒலிக்கச் செய்தவர்.

**ஏகை சிவசண்முகம்பிள்ளை**

செங்கை மாவட்டத்தில், சென்னையிலிருந்து ஏறக்குறைய இருபத்தைந்து கல் தொலைவிலுள்ள ஏகாட்டூர் என்னும் சிற்றூரில் பிறந்தவர் சிறந்த நாடக ஆசிரியரும் பாடலாசிரியருமான சிவசண்முகம் பிள்ளை. ஏகாட்டூர் என்பதன் குறுக்கமே ஏகை என்பது. இவர் இயற்றிய கண்டிராஜன் நாடகம் கதையமைப்பு, பாத்திரப் படைப்பு முதலான சிறப்புகளுடன் அழுத்தமான இசைநயம் செறிந்த பாடல்களாலும் புகழ்பெற்றது. இவர் எழுதிய சம்பூர்ண இராமாயணம் நாடகமும் பாடல் வளமிக்க இலக்கியச் சோலையாக விளங்கியது. இவரது கண்டிராஜன், இராமாயணம் ஆகிய நாடகங்களைப் பழைய நாடகக் குழுவினர் பலரும் நடத்தி வெற்றி கண்டனர்.

'அர்த்த புஷ்டியும் இராக புஷ்டியும்' உள்ள உருப்படிகளே சங்கீதத்திற்குப் பெருமை சேர்க்கும் என இசைவாணர்கள் சொல்வார்கள் அல்லவா? அதே தரத்தில் பல நல்ல இசைப்பாடல்களை உருவாக்கியவர் ஏகை சிவசண்முகம்பிள்ளை. எதுகைச் சிறப்பிற்காகவும் ஓசையின்பத்துக்காகவும் வடசொற்களை இடமறிந்து பெய்வதற்கு அக்காலப் பெரும் புலவர்கள் தயங்கவில்லை. ஏகையாரின் இசை தவழ் பாடல் ஒன்றினை சாகித்யச் சிறப்புக்காக எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இராமாயணத்தில் தந்தையின் சொல்லை நிறைவேற்றுவது தனது பாக்யம் என இராமர் கைகேயியை நோக்கி அன்றலர்ந்த செந்தாமரை முகப் புன்னகையோடு பாடுவதாக வரும் கட்டம்:

(இராகம்: சக்ரவாகம் தாளம்: நீபசம்)

**பல்லவி**

*அன்னையே கிருதார்த்தம்*
*அடைந்தேன் எதார்த்தம்*

**அநுபல்லவி**

*மன்னும் பரம் பொருளால்*
*உந்தன் திருவருளால் (அன்னையே)*

**சரணம்**

*இதுவும் அடியேன் செய்த பாக்யம்*

*எவர்க்குண் டிதுபோல் மாசிலாக்யம் (அன்னையே)*
*பிதுர்வாக்ய பரிபாலனம் செய்யும்*
*பிள்ளையே தேவாமிர்தம் எனும் வையம் (அன்னையே)*
*ஒருபிள்ளை இருந்தரசு செய்ய, ஒருபிள்ளை காட்டில்*
*தவசு செய்ய,*
*இருபிள்ளை களும்நல்ல இகபரம் கைக்கென்று சொல்ல*
*(அன்னையே)*

அக்காலத்திய பழம்பெரும் கர்நாடக இசைவாணர் மதிக்க வேண்டும் என்ற உள்நோக்குடன் இந்தப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது என்பது சொல்லமைப்பிலேயே தெரியும். செல்வாக்குப் பெற்ற கமாஸ்ராக ஜாவளி ஒன்றின் வர்ண மெட்டிலே

*"அவ மானத்துக் காளாயினேன்!"*

எனச் சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்றவுடன் இராமர் இலக்குமணனை நோக்கிப் பாடுவதாக அமைந்த ஒரு பாடலும் குறிப்பிடத்தக்கது.

**தெ. பொ. கிருஷ்ணசாமிப்பாவலர்**

பெரும்புலவரான சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர் பல நாடகங்களை இயற்றியதோடு அவைகளை மேடையேற்றி வெற்றி காண்பதற்காக, பாலமனோகர கான பாய்ஸ் கம்பெனி என்ற நாடகக்குழுவையும் நிறுவி நடத்தி வந்தார். முதலில் புராண நாடகங்களுக்குப் புது மெருகு கொடுத்து நடத்திய இவர், பின்னர் சமுதாயச் சீர்திருத்தம், தேசபக்தி ஆகிய நல்லுணர்ச்சிகளை ஊட்டும் பதிபக்தி, பஞ்சாப் கேசரி, பம்பாய் மெயில், தேசியக்கொடி, கதரின் வெற்றி, கதர் பக்தி, கமலசேகரன் முதலான நாடகங்களை உருவாக்கி மேடையேற்றினார். இந்நாடகங்களிலும் இவர் இயற்றிய பாடல்களின் வளம் செவியின்பம் ஊட்டுவதாக விளங்கியது.

'கதரின் வெற்றி' என்னும் தேசியப் புரட்சி நாடகத்தில் கதாநாயகி மரகதம் கைராட்டையைச் சுற்றிக் கொண்டு பாடும் ஒரு பாடலைக் கவனியுங்கள்:

*"சீரான இந்தியாவில் பேர் போன*
*தொழில்க ளெல்லாம்*
*செத்துக் கிடக்கும் இந்தச்*
*சீர்குலைந்த நாளையிலே*
*சேர்ந்த ராட்டின் பெருமை*
*செப்புவேன் கேள் அருமை*
*தீருமே நம் வறுமை"*

இந்தப் பாடலைப் பாடும் போது அவையிலே உணர்ச்சிமயமான கர-வொலி கிளம்புமாம்.

தம் குழுவின் பால நடிகர்களை அழைத்துக்கொண்டு கி.பி. 1923-இல் லண்டன் மாநகர் சென்று அங்கே வெம்பிளி கண்காட்சியில் தேசிய நாடகங்களை ஆங்கிலேயர் முன்னாலே நடத்திக் காட்டிய பாவலரின் துணிச்சலையும் கலையார்வத்தையும், கல்வி மேம்பாட்டையும் எவ்வளவு பாராட்டினாலும் போதாது. நாடகத் தமிழ் இசைப் பாடல்கள் லண்டன் மாநகரிலும் முழங்கச் செய்த இவரது பெருமையே பெருமை!

**நமசிவாயரின் நாடகப்பணி**

தமிழ்ப் பெரும் புலவர் கா. நமசிவாய முதலியாரும் சில நாட-கங்கள் இயற்றியுள்ளதோடு, அவற்றில் இசைப் பாடல்களையும் இணைத்-துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இயற்றிய கீசகன் நாட-கத்தில் உத்தரை பாடும் ஒரு நல்ல கீர்த்தனம்:

(இராகம்: நாட்டைக்குறிஞ்சி தாளம்: ரூபகம்)

**பல்லவி**

*எக்காலத்திலும் மறவேனே — இனிநானே (எக்)*

**அநுபல்லவி**

*மைக் காலனை அக்காலத்தில*
*மடிய உதைத்த அடிமலரினை (எக்)*

**சரணம்**

*விடையையும் கொன்றைத் தொடையையும் — மதிச்*
*சடையையும் மழுப் படையையும் — தோல்*
*உடையையும் மணி இடையையும் — விழிக்*
*கடையையும் நல மடையவே நான் (எக்)*

மதுகை ஊட்டும் எதுகை நயம் இப்பாடலிலே கும்மாளம் போடுகிறதல்-லவா?

இந்நாடகத்தில் பிருகந்நளையும் உத்தரையும் உரையாடும் ஒரு கட்டத்தில் எந்தெந்த நேரத்தில் எந்தெந்த இராகங்களைப் பாட வேண்-டும் என்பதை மிக விளக்கமாக அந்தக் காலத்திலேயே பாடல் வடிவி-லேயே தந்துள்ளார் பாவலர் நமசிவாயர். இறுதியில் பரதம் என்றால் என்ன என்பதை விளக்கும் ஓர் அருமையான விருத்தப் பாடலுடன் காட்சி முடிகிறது. சுவைத்தற்குரிய விருத்தம் இது.

*பாவமோ டிராகம் தாளம் இம்மூன்றும்*
*பகர்வதால் பரதம்என் றுரைப்பர்*
*ஆவதாம் ஆதி அட்சரக் குறியே*

அமைந்திடும் நாமமாம் இதற்கு
மேவிய பாவம் அகத்துறும் நினைவை
விளக்கிடல்; இராகமோ இசையாம்;
தாவறு தாளம் பாவநல் லிசைக்குத்
தக்கவா றிசைத்திட ஒலித்தல்.

## நாடக மேடையில் இசைப்பாட்டு முழக்கம்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாடகமேடை இசைப்பாடக மேடையாகவே நாத இன்பம் நல்கியது. தங்கத்திலே வயிரம் பதித்தாற்போல் சிறு சிறு இணைப்பு உரையாடல்களுக்கு இடையே, பாடல் வயிரம் பளிச்சென்று ஒளி வீசியது.

''அநேகமாக நாடகங்களில் கதை அமைப்பு, நடிகரின் நடிப்பு இவற்றை விடச் சங்கீதமே மேலோங்கி இருக்கிறது'' எனத் தேசிய வீரர் எஸ். சத்தியமூர்த்தி அக்காலத்திய நாடகங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ( நூல்: சத்தியமூர்த்தி பேசுகிறார் ). இது உண்மைதான். வண்ணம், சந்தம், சிந்து, ஓரடி, தாழிசை, கீர்த்தனை, விருத்தம், வெண்பா, கலிவெண்பா, கலித்துறை முதலான பல வகைகளில் இசைப் பாடல்களைப்பொழிந்து இசை வெள்ளம் பெருக்கோட வழி வகுத்தனர் பாடலாசிரியர்கள்.

கனல் தெறிக்கும் கோபப் பாட்டு; புனல் தெளிக்கும் கருணைப்பாட்டு : வீறு கொடுக்கும் வீரப் பாட்டு, தென்றல் கொஞ்சும் காதல் பாட்டு; சண்டைக்கும் பாட்டு; சமாதானத்துக்கும் பாட்டு; தர்க்கப்பாட்டு; குதர்க்கப்பாட்டு இப்படி காட்சிக்குக் காட்சி பாட்டு முழங்கிக்கொண்டிருக்கும்.

பாடத் தெரியாதவர் நடிகராகவோ, நடிகையாகவோ வர முடியாது. நாடகக் குழுவை இயக்கியவர்களும் இசை ஞானம் படைத்தவர்களாகவே விளங்கினர்கள். நாடகம் பார்க்க வந்த ரசிகர்களோ மணிக்கணக்காக அமர்ந்து இசைப் பாடல்களின் இன்பத்திலே மூழ்கித் திளைக்கும் மனப்பக்குவம் பெற்றிருந்தார்கள்.

இசைப் பாடல்களில் பாடப்படும் அதே கீர்த்தனைகள் நாடக மேடையில் முழங்கும்போது அவைகளுக்குக் கதைப் பின்னணியும் தனியான கம்பீரமும் ஏற்படுவதால் ஏராளமான மக்களை ஈர்க்கும் சக்தியைப் பெற்றிருந்தன.

**பாகவதர்களின் நாடகக் குழு**

மக்களின் இத்தகைய ஆர்வம் காரணமாகவே சிறந்த பாகவதர்கள் சிலர் சேர்ந்து தாமாகவே ஒரு நாடகக் குழுவை அமைத்து நாடகம் நடத்தத் துணிந்தனர். அந்தக் குழுவிற்குப் பாரத பூஷண சங்கீத சபா என்று பெயர். பொதுவாக அக்கால நாடகக் குழுக்கள் பெரும்பாலும், சங்கீத சபா என்ற தொடரைத் தமது பெயரில் பொருத்திக் கொண்டிருந்தன.

பாகவதர்களின் பாரத பூஷண சங்கீத சபா முதன் முதலாக விக்ரமஸ்திரீ சாகசம் என்ற நாடகத்தை நடத்தினார்கள். காயகசிகாமணி முத்தையா பாகவதர் என்ற புகழ்பெற்ற இசைவாணரே இந்நாடகத்தை எழுதி, இயக்கினார். பிரம்மதேசம் கிருஷ்ண சாஸ்திரிகள் போன்ற இசைவிற்பன்னர்கள் இக்குழுவில் பாடி நடித்தார்கள். பழம்பெரும் நடிகர் சி. வி. வி. பந்துலுவும் இக்குழுவில் சிறப்பான இடம் பெற்றிருந்தார்.

இந்நாடகத்தில் விக்கிரமனை வசப்படுத்துவதற்காக கதாநாயகி கனகாங்கி சந்யாசி வேடத்தில் வந்து பாடிய ஒரு பாடலைக் கேளுங்கள்

(இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்)

*சூத்திரப் பாவை கயிறற்று வீழுமுன்*
*சூட்சுமக் கயிற்றினைப் பாரடா - அதி*
*நேத்திரம் இரண்டிலும்*
*நேரே இயங்கிய*
*நீடொளி போன்றது*
*தேடரி தாகிய-* (சூத்திரப்பாவை)
*பாயும் ஈராறு கலை*
*பழகி வருவதோர் சமாதி*
*ஜாதி பேதத்தையும்*
*மாதர் போகத்தையும்*
*தள்ளி வைப்பதோ சமாதி* (சூத்திரப்பாவை)
*''சினம் இறக்கக் கற்றாலும்*
*சித்தி யெல்லாம் பெற்றாலும்*
*மனம் இறக்கக் கல்லாதார்*
*வாயேன் பராபரமே''* (சூத்திரப்பாவை)

**நவாப் கோவிந்தசாமிராவ் நாடகக்குழு**

''நாடகக் கொட்டகை ஒன்றை ஏற்படுத்தி, நாடக மேடையை நிர்மாணம் செய்து காட்சிக்குக் காட்சி மாறும்படியான திரைகளைக் கட்டி, தற்காலத்தில் வழங்கும்படியான முறையில் தமிழ் நாடகங்களை முதன்

முதலாக நடத்தியவர் தஞ்சை நவாப் கோவிந்தசாமி ராவ்'' அவர்களே எனக் குறிப்பிட்டுள்ளார் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார். மனமோகன நாடகக் கம்பெனி என்ற பெயரில் பக்த ராம்தாஸ், தாராசசாங்கம், பாதுகா பட்டாபிஷேகம், விக்கிரம ஸ்திரீசாகசம், சிறுத்தொண்டர் முதலான நாடகங்களை நடத்தி மக்களைக் கவர்ந்தார் கோவிந்தசாமி ராவ். பூனா நகரத்திலிருந்து வந்து தமிழ் நாட்டில் நாடகங்களை நடத்திப் புகழ் பெற்ற சாங்கிலி நாடகக் கம்பெனியாரைப் பின்பற்றி, கோவிந்தசாமி ராவ் தம் நாடகங்களை உருவாக்கினர் என்று சொல்லப்படுகிறது. ராம்தாஸ் நாடகத்தில் இவர் நவாபாகவந்து ஆர்ப்பாட்டம் செய்தமையால் ' நவாப் ' கோவிந்தசாமி ராவ் என்ற பெயர் நிலைத்துவிட்டது. இவரைப் போலவே பிற்காலத்தில் ராமதாஸ் நாடகத்தை நடத்தி, நவாப் வேடத்தில் பெரும் புகழ் பெற்றமையால்தான் நவாப் இராஜமாணிக்கம் என்ற கலைமாமணியின் பெயர் நிலை பெற்றது.

கோவிந்தசாமி ராவ் நாடக உரையாடல்களை முன் கூட்டியே நடிகர்கள் மனப்பாடம் செய்து நடிக்க ஏற்பாடு செய்வதில்லையாம். நாடகத்தின் முதல்நாள்தான் இன்னின்னர் இன்னின்ன வேடம் தரித்து இப்படிப்பேசவேண்டும் என வாய்மொழியாக முடிவு செய்வாராம். தகுந்த பாட்டுக்களை மட்டும் முன்னதாகவே தேர்ந்தெடுத்துப் பயிற்சி கொடுத்துத் தக்கவாறு மேடையில் பாட ஏற்பாடு செய்வாராம். எனவே இவருடைய நாடகங்களில் உரையாடல் விருப்பம்போல் நாளுக்கு நாள் மாறினாலும், பாட்டுகள் தரமான சங்கீதமாக நிரந்தரமாக முழங்கி வரும். இக்குழுவில் பெண்வேடம் தரித்து வந்த சுந்தரராவ் ' சாவேரி ' ராகம் பாடுவதில் வெகு சமர்த்தர்.

நாடகக் குழுவை நாடகக் கம்பெனி என்று அழைக்க முற்பட்டது கோவிந்தசாமி ராவ் கம்பெனியைப் பின்பற்றித்தான். நாடகம் நடத்துவதை ஒரு தொழிலாக மதித்துப் போற்றினர் என்பதையே கம்பெனி என்ற பெயர் சுட்டிக் காட்டுகின்றது. இதன் காரணமாகவே தொழில்முறை நடிகர்கள் என்ற பாகுபாடு ஏற்பட்டது.

**கல்யாணராமய்யர் கம்பெனி**

மனமோகன நாடகக் கம்பெனிக்கு இணையாக நாடகமேடையில் புதிய பாதை வகுத்தவர்கள் கல்யாணராமய்யர் கம்பெனியார். இந்த நாடகத்தில் சங்கரதாஸ் சுவாமிகள் நடிகராகவும் நாடக ஆசிரியராகவும் இருந்தவர். எனவே இக்குழுவில் வளமான இசைப்பாடல்களும் உரையாடல்களும் மேலோங்கி இருந்தன.

**பாலாமணி அம்மாள் நாடகக் குழு**

நாடக உலகில் ஒரு விக்டோரியா மகாராணிபோல அந்தக் காலத்தில் கருதப்பட்டவர் கும்பகோணம் பாலாமணி அம்மாள். இவருக்குப் பட்டம்மாள் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. அனைத்தும் பெண்களே நடிக்கும் குழுவாக இவர் உருவாக்கி இருந்தார். பின்னர் பெரிய பெரிய சங்கீத வித்துவான்கள் இவருடைய கம்பெனியில் வேடம் ஏற்றுப் பாடத் தாங்களாகவே முன் வந்தார்களாம். எம். கந்தசாமி முதலியார் இக்குழுவில் ஆசிரியராக புகழ்பெற்றார். 'கிஞ்சின்' கோதண்டராமன் என்பவர் இக்குழுவில் பரதநாட்டியம் ஆடுவார். நல்லிசையை முழக்கிய நாடகக்குழுவை இயக்கியவர் பாலாமணி அம்மாள் என்ற பெயர் கிடைத்தது. டம்பாச்சாரி நாடகத்தில் பாலாமணி அம்மாளே கதாநாயகியாக நடிப்பார். இணையற்ற நகைச்சுவை நடிகரான சி எஸ். சாமண்ணா பதினொரு வேடத்தில் தோன்றி மக்களை மகிழ்விப்பார்.

கும்பகோணத்தில் பாலாமணி அம்மாள் நாடகங்களைக் கண்டு மகிழ்விப்பதற்காகவே மாயவரத்திலிருந்தும், திருச்சியிலிருந்தும் வரும் மக்களை ஏற்றி வரும் ரயிலுக்கு ''பாலாமணி ஸ்பெஷல்'' என்ற பெயர் ஏற்பட்டதாம். அறம் வளர்த்த ''கலையரசி'' என்ற பெயரும் இவருக்கு உண்டாம். இவர் நடத்திய தாராசசாங்கம் போன்ற நாடகங்களைப் பற்றியெல்லாம் பழம்பெரும் நடிகர் எம். கே. ராதா அவர்கள் கதை கதையாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். டி. டி. தாயம்மாள், எஸ்.பி.கமலம் ஆகியோர் நடத்திய நாடகங்களிலும் எல்லாப் பாத்திரங்களையும் பெண்களே ஏற்று நடித்துப் புகழ் பெற்றார்கள். அனைவரும் இனிய குரலில் தரமான பாட்டுக்களைப் பாடி, மக்களின் பாராட்டைப் பெற்றார்கள்.

**மதுராம்பிகா சங்கீத நாடக சபா**

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே புகழ்பெற்று விளங்கிய மதுராம்பிகா சங்கீத நாடக சபா என்ற குழுவிற்குச் சின்னச் சாமாஜயர் கம்பெனி என்று பெயர். இதில் இராவண கோவிந்தசாமிநாயுடு 'ராஜபார்ட்' என்னும் கதாநாயகர், சின்னச்சாமா கதாநாயகியாக நடிப்பார். இக்கம்பெனியின் அரிச்சந்திர நாடகப் பாடல்கள் தனிப் புகழ் பெற்றன. காட்டுராஜா கிருஷ்ணஐயர் என்பவர் இக்குழுவில் பாடி முழக்கிய மற்றொரு நடிகர் ஆவர்.

**இன்னிசை பரப்பிய கன்னையா கம்பெனி**

மயக்கத்தக்க மாபெரும் காட்சி அமைப்புகளும் வியக்கத்தக்க புதிய உத்திகளும் கொண்டு நாடக மேடையைக் கலையின் சிகரமாக காட்டிய சி. கன்னையாவின் கிருஷ்ண விநோத சபாவிற்கு இருபதாம் நூற்றாண்டின் நாடக வரலாற்றில் தனி இடம் உண்டு.

இன்னிசையும் இலக்கியமும் எழிலார்ந்த
ஓவியமும் சிற்ப மாண்பும்
பின்னரியொரு நாடகமாம் கலைவடிவம்
பெற்றதும் பெருமை யன்றோ !
முன்னுரைத்த கலையெல்லாம் முன்னேற
வேண்டு மெனில் நாடகத்தை
உன்னதநற் கலையாக வளர்க்கின்ற
மனஉறுதி ஓங்க வேண்டும்.

நாடகக்கலை பற்றிய என் பாடல்களில் இதுவும் ஒன்று. இதில் கண்ட வண்ணம், இன்னிசை, இலக்கியம், ஓவியம் ஆகிய எல்லாக் கலைகளின் மொத்த வடிவமாக நாடகமேடையை உயர்த்தியவர்களில் முதன்மையானவர் கன்னையா அவர்களே.

தரமான இன்னிசை நாடகங்களை வழங்கச் செய்து மக்களுக்கு மனநிறைவு தந்தவர் கன்னையா. வடநாட்டு நியூஆல்பர்ட் கம்பெனியின் இசை இயக்குநர் அமீர்அலியை வரவழைத்து மாதச் சம்பளம் கொடுத்து சத்திய அரிச்சந்திரா, கிருஷ்ணலீலா நாடகங்களுக்கு வர்ணமெட்டு அமைக்கச் செய்த புதுமையை வியந்து பாராட்டாதோர் இலர். வர்ணமெட்டுகளுக்கு ஏற்ற பாடல்களை ஏகை சிவசண்முகம் இயற்றினர். கலையுலக பிரம்மா என்று புகழ் பெற்ற லாகூர் ஹுசேன் பக்ஸ் என்பவரை வரவழைத்து மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்து அற்புதமான காட்சிகளை உருவாக்கிய துணிச்சலும் கன்னையாவுக்கே இருந்தது.

நாடகமேடையை ஓர் இசைக் கோயிலாக விளங்கச் செய்தார் கன்னையா. 1008 ராமாயண பட்டாபிஷேகம் நடத்திய பிறகு நிறைவு விழாவாக மகா பட்டாபிஷேக மகோத்சவம் நடத்திய கன்னையா ஏராளமான தான தருமங்களைச் செய்தது மட்டும் அல்லாமல், காஞ்சிபுரம் நாயனுப்பிள்ளை, மகாவித்துவான் ‘பிடில்’ கோவிந்தசாமி பிள்ளை முதலியோரின் இசைதர்பார், சாயக சிகாமணி முத்தையா பாகவதர் கதை, ‘காயபைடு’ ‘கீர்த்தபைடு’ சரஸ்வதிபாய் கதை, மதுரை பொன்னுசாமி பிள்ளை, திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை இவர்களின் நாதஸ்வரம் இப்படிக் கோலாகல இசைவிழாக்களையும் நடத்தினர். நயனுப்பிள்ளையின் கச்சேரி தியாகராஜ ராமாயணம். எனவே அவருக்குக் கனகாபிஷேகம் பண்ணவும் முன்வந்தார் கன்னையா. ஆனல் அடக்கமே உருவான நயனுபிள்ளை அதை ஏற்க மறுத்துவிட்டாராம். நாடகமேடைக்கும் இசைவாணர்களுக்கும் இருந்த தொடர்பினை இந்த நிகழ்ச்சி தெளிவாகக் காட்டுகின்றது.

**கிட்டப்பாவின் கீர்த்தி**

கன்னையா கம்பெனியில் இன்னிசை எழுப்பிய நடிகர்களில் எஸ். ஜி. கிட்டப்பாவின் புகழை யாராலும் எட்டமுடியாமல் இருந்தது. இவருடைய வெண்கல நாதமும் அனைவரையும் மெய் சிலிர்க்க வைக்கும். 'கந்தர்வகான', 'சங்கீத ராஜா' கிட்டப்பா என்றெல்லாம் இசை வாணர்களே இவரைப் பாராட்டுவார்கள்.

கன்னையாவின் தசாவதார நாடகத்தில் கிட்டப்பா மோகினி, விஷ்ணு, இராமர் முதலான பாத்திரங்களை ஏற்றுப் பண்முழக்கம் செய்வார். மோகினி வேடத்தில் தோன்றி அமீர் கல்யாணி ராகத்தில் இவர் பாடிய ''தேவா அசுரகுலத்தோனே'' என்ற பாட்டு தேவாமுதமாக இருந்தது.

இராமன் வனம் ஏகும் கட்டத்தில் பிரிவுத்துயரத்தின் சிகரமாக இராமனும் பரதனும் பாடுவதாக அமைந்த பாடல் அந்தக் காலத்தில் மிகவும் புகழ்பெற்றது. இன்றும் எண்ணி எண்ணி மகிழக்கூடிய தேன்பாடல் அது.

ஹிந்துஸ்தான் காப்பி ராகத்தில் அந்தப் பாடலை எஸ்.ஜி. செல்லப்பா இயற்றிக் கொடுத்திருந்தார்.

(இராகம் : ஹிந்துஸ்தான் காப்பி)

இராமன் : *தசரத ராஜ குமாரா*
*அலங்காரா ! அதிதீரா ! சுகுமாரா*
*இசைபெருகிய ரகு வம்ச சிலாக்கியம்*
*எழில் பிதிர்வாக்யபரி பாலன யோக்யம்*
*வசைதவிர் அதனுல் வரும்பெரும் பாக்யம் — உன்*
*மனதினில் உணர்தம்பி பரதா — சத்ய விரதா*
*சுக புனிதா ! அதிரதா !*

பரதன் : *கோசலை மகிழும் விநோதா*
*குணநீதா ரகுநாதா அதீதா !*
*தாய்செய்த வினையினுல் தமயன் நொந்தேனே !*
*தரணி இகழும் தன்மை தனைஅடைந் தேனே !*
*நேயமொ டுமதடி இணைபணிந்தேனே !*
*நிச்சயம் இதுததி வாரும்*
*அருள்தாரும் ! கிருபைகூடும் ! காருமே.*

கிட்டப்பா இராமனுகவும் சி. வி. வி. பந்துலு பரதனுகவும் தோன்றி இப்பாடலைப் பாடி முடிக்கும்போது. அவையில் உள்ளவர்கள் மெய்மறந்து பிரிவுத் துயரம் தமக்கு நேர்ந்தது போன்ற உணர்ச்சியில் கண்ணீர் மல்குவார்கள்.

1923-இல் திருச்சியில் கன்னையா கம்பெனியின் நாடகம் நடந்த-போது கடைசியாகத் தசாவதாரம் நாடகத்தில் நடித்துவிட்டு விலகினார் கிட்டப்பா. கிட்டப்பா, கன்னையா கம்பெனியில் நடித்த கடைசிக் காட்-சியைக் காண்பதற்காக கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர், திரு-வாவடுதுறை ராஜரத்னம்பிள்ளை, சரஸ்வதிபாய், திருப்பாம்பரம் சாமி-நாதபிள்ளை, பிடில் கோவிந்தசாமி முதலான சங்கீத மேதைகள் அரங்-கிலே கூடி, கிட்டப்பாவின் இசைவெள்ளத்தில் மூழ்கினார்கள். 'மேற்-கண்ட பிரிவுத்துயரப்பாடல் உருக்கமாகப் பாடப்பட்டபோது கிட்டப்பா தம்குழுவைவிட்டுப் பிரியப் போகிறாரே என்ற துயரம் கன்னையாவின் கண்களையும் குளமாக்கி விட்டதுவாம்!

கன்னையா கம்பெனியிலிருந்து விலகிய பிறகும் கிட்டப்பாவின் நாடகமேடை இசைமுழக்கம் தொடர்ந்து நடைபெற்றுவந்தது. கே. பி. சுந்தராம்பாளுடன் இணைந்து தாமே பல நாடகங்களை நடத்திப் புகழ்-பெற்றார். ''எவரனி'' என்பது போன்ற தியாகராஜ கீர்த்தனைகளும், ''கோடையிலே இளைப்பாற்றி'' முதலான இராமலிங்க வள்ளலார் பா-டல்களும் கிட்டப்பாவின் குரலிலே தனி இன்பம் தந்தன. ''எவரனி'' கீர்த்தனையில் கிட்டப்பாவுக்குக் கிடைத்த பெருமை வேறு எந்த இசை-வாணருக்கும் கிடைக்கவில்லை என்பதையும் கலையன்பர்கள் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்.

கும்பகோணத்தில் கிட்டப்பாவின் நாடகம் நடந்தபோது ஒரு சுவையான நிகழ்ச்சி. அந்த நாடகத்தைக் காண சங்கீத வித்வான்கள் செம்மங்குடி நாராயணசாமி அய்யர், தட்சிணாமூர்த்திபிள்ளை, மகாராஜ-புரம் விசுவநாத ஐயர், செம்மங்குடி சீனிவாச ஐயர் முதலானோர் ஆர்-வத்தோடு வந்திருந்தார்கள். கிட்டப்பா அற்புதமாகப் பாடினார். இசை-வாணர்கள் அவரது நாத இன்பத்தில் மூழ்கினார்கள். பாட்டுமுடிந்ததும் செம்மங்குடி சீனிவாசய்யர் அருகில் இருந்தவரை நோக்கி ''கிட்டப்பா இப்போது பாடியது என்ன ராகம்'' என்று கேட்டாராம். கூடியிருந்த வித்துவான்களுக்கே என்ன ராகம் என்று பிடிபடவில்லையாம். என்ன ராகமாயிருந்தால் என்ன? எவ்வளவு அற்புதமாகப் பாடினார்? எப்படி நம்மையெல்லாம் பிரமிக்க வைத்துவிட்டார்!'' என்றாராம் ஒரு பெரிய வித்வான். கிட்டப்பா தன்னைமறந்து சங்கீத இன்பத்திலே தோய்ந்து பாடும்போது இராகத்தின் வடிவங்கள் தாமாகவே வந்து பொருந்தும். பாடுவது என்ன ராகம் என்று தெரியாமலே, நுட்பமான இசையை வழங்கிய ஏதோ ஒருசக்தி அவரிடம் ஒளிவீசிக் கொண்டிருந்தது என்று சொல்லவேண்டும்.

தமது குரலைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக

கிட்டப்பா எப்போதும் கொதி வெந்நீரையே பருகி வந்தாராம். அவர் தொடர்ந்து கொதி வெந்நீரைக் குடித்து வந்தமையினால் தொண்டைக்குழாய் நாளடைவில் வெந்து போய், அதன் காரணமாகவே அவருடைய ஆயுள் குறுகிவிட்டது என்றும் சொல்லப்படுகிறது. 28 வயதிலேயே காலமாகி விட்டார் காலத்தை வென்ற இந்த இசைமேதை.

**கொடுமுடிக் கோகிலம் கே. பி. சுந்தராம்பாள்**

கொடுமுடிக் கோகிலம் கே. பி. சுந்தராம்பாள், பி. எஸ். வேலு நாயரின் சண்முகானந்த சபாவிலும் நடித்து வந்தார். புகழ்பெற்ற ஆர்மோனிய வித்வானும் பின்பாட்டுக்காரருமான டி. எஸ். கோவிந்தராஜுலு நாயுடு சுந்தராம்பாளின் இசைஞான வளர்ச்சிக்கு வழிகாட்டினார். சின்னஞ்சிறு பருவமுதலே தேசபக்தியும் தெய்வபக்தியும் கனிந்த பாடல்களைப் பாடி நாடக மேடைக்குப்பெருமை சேர்த்து வந்தவர் சுந்தராம்பாள். பின்னர் எஸ். ஜி. கிட்டப்பாவுடன் சேர்ந்து பல நாடகங்களில் மக்களைக் கவர்ந்தார். கணீர் என்ற குரலில் பாடுவதோடு, அழுத்தமாகச் சொற்களின் பொருள் தொனிக்கும்படியாக உரையாடல்களை வழங்குவதிலும் இவர் தனித்திறமை பெற்றவர். அன்றுமுதல் இன்று வரை இவருடைய குரல்வளம் நாட்டு மக்களுக்கு உணர்ச்சியூட்டி வந்திருக்கிறது.

இளம்பிராயத்தில் இவர் நாடகத்தில் நடித்துக்கொண்டிருந்த சமயம் பகவத் சிங் தூக்கிலிடப்பட்ட பரபரப்பான செய்தி வந்தது. உடனே கும்பகோணம் ராஜாராம் பாகவதர் என்னும் காந்திபாகவதர் ஓர் உணர்ச்சிமயமான சோகப்பாடலை இயற்றினார்.

*சிறைவாயில் தனில் அழுதாள் — பாரதமாதா*
*சிறை வாயில் தனில் அழுதாள்!*
*கறை யொன்று மில்லாக்*
*காளையர் மூவரைக்*
*கழுத்தை அரிந்ததாலே*
*கவலை கொண்டாள் -- பாரதமாதா!* (சிறை)

(தொகையறு)

*மறத்தற்கு முடியாது மாதாவின் சேவைசெய*
*முயன்ற தாலே*
*பரத்தாக்கு அஞ்சேன் என்று*
*உரைத்த ஏந்தல் பகவத் சிங்கைக் காணோமே!*

(பாட்டு)

*குற்ற மொரு வர்புரிய*
*மற்ற வரை யே மதிக்கும்*

கொற்ற முறைக் கொடுமை
குவலயத்தில் கண்டு (சிறை)

(தொகையரு)

தனக்குவமை யில்லாத தநயரின்
சவத்தைத் தாய்தந்தையர் கண்பாராமலே
தனியாகவே கொண்டு சட்லஸ் நதிக்கரையில்
தகனித்த சண்டாளரை
நிணக்குடல் பிடுங்குவேன் என்று
நிற்கிறுர் நமதன்னை:
அற்பரை நோக்கியே உக்ரவீரத்துடனே

(பாட்டு)

எப்பயன் விளைந்திடுமோ!
எந்நிலை நிகழ்ந்திடுமோ
என்றெண்ணி ஏங்குகிறுர் — பாரதமாதா (சிறை)

மாண்ட் இராகத்தில் அமைந்த உணர்ச்சி மயமாக இந்தப்பாடலை அன்றைய இரவிலேயே நாடகத்திலே பாடி மக்கள் உள்ளம் கொந்தளிக்கச் செய்தார் கே. பி. எஸ். உடனே கைது செய்யப்பட்டார். பகவத் சிங் முதலான மூவர் தூக்கில் இடப்பட்டதும் அவர்கள் சடலம் சட்லஸ் நதிக்கரையில் தகனம் செய்யப்பட்டதும் தேசபக்திவாய்ந்த இசைப்பாடலிலே வரலாற்று இடம் பெற்றுவிட்டது. இசை இயக்குநர் நண்பர் ஜி. கோவிந்தராஜுலு அவர்கள் இந்தப்பாடலை நினைவுபடுத்தி எழுதி எனக்கு உதவினுர்.

பவளக்கொடி நாடகத்தில் அவ்வை தி. க. சண்முகம் கிருஷ்ணனுக நடித்தபோது அதற்குரிய சில பாடல்களை அவருக்கு, கே. பி. சுந்தராம்பாள் சொல்லிக் கொடுத்த பெருமையை, சண்முகம் அவர்கள் 'எனது நாடக வாழ்க்கை' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**எம். ஆர். கோவிந்தசாமி நாயுடு**

சந்தச் சரப சாகித்திய வித்வான் எம். ஆர். கோவிந்தசாமி நாயுடு பாடிய பாடல்களும் நாடக மேடையில் கலகலப்பு ஊட்டிவந்தன. பிரவேசப் பாடலாக அவர் பாடிய ''திரிலோகமும் புகழும் சுந்தர'' என்ற மத்யமாவதி ராகப் பாட்டு அனைவருக்கும் பரவசமூட்டிக் கரசம்பம் செய்ய வைக்கும். இவர் நாடகத்தில் ஒரடிப்பதங்களைக் கற்பனை பண்ணிச் சாகித்யம் பாடுவார். இவர் ''ஸ்பெஷல் ராஜபார்ட்'' என்னும் தனிக் கதாநாயக நடிகர். பல நாடகக் குழுவினர் இவரைத் தத்தம்குழுவில் நடிக்கத் தக்க சமயம் பயன்படுத்திக் கொள்வார்களாம். கடல்கடந்து

சிங்கப்பூர் முதலான இடங்களில் இவர் நடித்துவந்ததாகவும் கூறப்படு-கிறது.

புகழ்பெற்ற மொய்தீன் சாகிபு கதாநாயகனுகவும் டி. பி. ராஜ-லட்சுமி கதாநாயகியாயும் அமைந்த நாடகக்குழு பினுங்கு, சிங்கப்பூர் முதலான இடங்களுக்குச் சென்று முழுவதும் பாட்டுமயமான அரிச்சந்-திரா போன்ற நாடகங்களை நடத்திப் பெருமை பெற்ருர்கள். பழைய பாடல்களை இவர்கள் புதுமெருகு கொடுத்துப் பாடினுர்கள்.

**சுரக் களஞ்சியம் செல்லப்பா**

ஆரியகான சபை என்ற குழுவின் மூலம் அருமையான பாட்டு நாடகங்களை நடத்தி வந்தவர் கே. எஸ். செல்லப்பா ஐயர். இவர் மேடைக்கு வரும்போது, பிரவேசப் பாடலாக ''ஜெய ஜெய கோகுல-பாலா!'' என்ற பைரவி ராகக் கீர்த்தனையை முழக்கிக் கொண்டு வரு-வார். அற்புதமாக ஸ்வரங்களையும் பிர்க்காக்களையும் உதிர்த்தவண்ணம் சங்கீதத்தைப் பேசவைக்கும் குரல் இவருடையது. இவருடைய நுட்ப-மான இசைத்திறமையைப் பாராட்டி ' சுரக் களஞ்சியம் ' செல்லப்பா என்று பலரும் போற்றுவது வழக்கம்.

கே. எஸ். செல்லப்பா ஐயர் கதாநாயகனுகவும் அவரது சகோ-தரர் அனந்தநாராயணய்யர் கதாநாயகியாகவும் நடித்த காட்சிகளைப் பார்த்தவர்கள் தம்மைப் பாக்கியசாலிகளாகக் கருதி மகிழ்வார்களாம். இவர்களின் பாடல் சாதுர்யம் அனைவருக்கும் பரவசம் ஊட்டும்.

''*அழகுள்ள துரையிவர் யாரடி?*'' என்ற பாடலைக்

கதாநாயகி (அனந்தநாராயணன்) கதாநாயகனை (செல்லப்பா) நோக்-கிப் பாடும் போது சொற்களிலே பொடி வைத்துப்பாடி விரல் முத்திரை-யும் காட்டி சபையினரை ''ஆஹாகாரம்'' செய்ய வைத்து விடுவாராம். செல்லப்பா குள்ளமானவர். ஆகையினுல் இந்தப் பாடலை அனந்தநாரா-யணய்யர் பாடும் போது,

'*அழ***குள்ள** *துரையிவர்* **ஆறடி***?*'

என்று 'குள்ள' என்ற சொல்லிலே அழுத்தம் கொடுத்துப்பாடி, ஆரடி என்பதை 'ஆறடி' என விரல் முத்திரையும் காட்டி, இசை நயத்திலே நகைச் சுவையும் கலக்கும்படி செய்துவிடுவாராம் அனந்தநாராயணய்-யர். இதைக் கேட்டு ''உம்மணு'' மூஞ்சி யுள்ளவர்களும் கொல்லென்று சிரித்துக் கைதட்டி ஆரவார வரவேற்புக் கொடுப்பார்களாம். இப்படி இசைப்பாடலிலே விளையாடினுர்கள் இந்தச் சகோதரர்கள்.

**வித்தகர் வேலு நாயர்**

சங்கரதாஸ் சுவாமிகள் 'சுலோச்சனு சதி' நாடகத்தை 1813-ஆம் ஆண்டில் ஆரிய கான சபையினர்க்காகவே எழுதினுர். இதில் முதன்

முதலாக கதாநாயகன் இந்திரஜித்தாக நடித்தவர் பி.எஸ். வேலுநாயர். கே.எஸ். அனந்தநாராயணய்யர் சுலோசனாவாக நடித்தார். 85 இசைப்-பாடல்கள் நிறைந்த இந்த நாடகத்தில் தமக்குரிய பாட்டுகளைத் தமக்கே உரிய பாணியில் பாடி முழக்கிய பெருமை வேலுநாயருக்கு உண்டு. பின்னர் சண்முகானந்த சபா என்ற பெயரில் சொந்த நாடகக் குழுவை வேலுநாயர் நடத்திப் புகழ் பெற்றார். சகுந்தலா நாடகத்தில் இவர் பாடிய பாட்டைக் கேளுங்கள் :

**பல்லவி**

*மனமோகன மானே! — இம்*
*மௌன மேனடி செந்தேனே* (மன)

**அநுபல்லவி**

*வனஜாட்சி யுன் மையலாலே*
*வருந்தியே நான் மிகவாடினேன்*
*வருமமே புரிவது சரியா*
*இதுததி நேர் வருவாயே!*
*மதனெதிர் போர்*
*முனையினில் எனைவிடில் அதிசயமேவுமடி*
*மாருதமே புலியென வருகுது*
*வந்தணைவதில் ஏன் ஜாலம்?*
*மதியுலாவும் வசனியே உன்*
*வாசகம் ஒன்று இன்றே*
*தரவும் என்னடி தடை? -* (மன)

பியாகடை ராகத்தில் அமைந்த இப்பாடலை வேலுநாயர் வெகுசுகமாய்ப் பாடி முழக்குவார். இதனை இயற்றியவர், உடுமலை முத்துச்சாமிக் கவி-ராயரின் மாணவரான சந்தானகிருஷ்ண நாயுடு.

**மதுரை மாரியப்ப சுவாமிகள்**

சங்கரதாஸ் சுவாமிகளின் இலக்கிய மாணவர்களில் ஒருவர் மது-ரை மாரியப்ப சுவாமிகள். சங்கரதாசரின் சமரச சன்மார்க்க நாடக சபையின் முக்கிய நடிகராகப் புகழ் பெற்றார். இசைப் பாடல்கள் இயற்-றுவதில் இவர் வல்லவராக விளங்கினர். தமிழ் இசை இயக்கம் தோன்-றுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே தரமான இசைப் பாடல்களை திறமாகப் படைத்த செம்மல்.

*சரவண பவா*
*தமியேன் எனையாள்!* (சரவண)
*பரம கருணா கரன் உனையல்லால்*
*பாடிப் பாடி உந்தன்*

சங்கீத இன்பமும் மக்களைக் கவர்ந்தன.

சுப்பையா பாகவதர் சாஸ்திரீய சங்கீதம் என்னும் கர்நாடக இசையில் விற்பன்னர். கம்பீரமாகப் பாடுவதில் கிட்டப்பாவைப் போலவே பெரும் புகழ் பெற்றவர்.

தியாகராஜ பாகவதரின் குரல் இனிமை பல்லாயிரக் கணக்கான மக்களை வசீகரித்தது. நாடக மேடையில் முதற்காட்சியில் இவர் தோன்றிய உடனே பார்ப்பவர்கள் உள்ளம் துள்ளிக் குதிக்கும். உரையாடலை உச்சரிப்பதிலும் பாட்டுக்களைப் பாடுவதிலும் ஒரு தனியான நளினம் இழையோடிக் கொண்டிருக்கும். பாகவதருடன் அக்கால நட்சத்திரக் கதாநாயகியான எஸ். டி. சுப்புலட்சுமியும் சேர்ந்து வள்ளி திருமணம், பவளக்கொடி முதலான நாடகங்களில் நடித்ததைப் பார்த்தவர்கள் மறக்க முடியாத கலையின்பம் கண்டவர்களாகக் குதூகலம் அடைவார்கள்.

மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி நடிகராகக் கலை வாழ்வு தொடங்கியவர் பி. யு. சின்னப்பா. இந்தக் குழுவில் இருந்த போது இவரது இயற்பெயர், பி. யு. சின்னச்சாமி. பின்னரே தம் பெயரைச் சின்னப்பா என மாற்றிக் கொண்டார். கணீரென்ற சாரீரமும் கமகம் பொழியும் சங்கீதமும் பி. யு. சின்னப்பாவுக்குப் பேரும் புகழும் வழங்கின. நாடகப் பந்தலில் பாடல் மழை பொழிந்த இசைக் கொண்டலாக இவர் விளங்கினார். ''சண்முகா ஏழை என் மேல் தயவில்லையா?'' ''பக்தி கொண்டாடுவோம்'' முதலான பாடல்கள் பாய்ஸ் கம்பெனியில் சின்னப்பா முத்திரையோடு முழங்கின.

தியாகராஜ பாகவதரும், சின்னப்பாவும் நாடக மேடையில் மட்டுமல்லாமல் திரையிலும் பாமர ரஞ்சமாகப் பாடி இசை வளர்த்த கலை மேதைகளாவர்.

தியாகராஜ பாகவதரை மீண்டும் நாடக மேடையில் காண வேண்டும் என்னும் கலையன்பர்களின் ஆவலைப் பூர்த்தி செய்வதற்காக 1953-இல் நாடகக் கழகம் ஒரு ஸ்பெஷல் நாடகத்தை என்.கே.டி கலாமண்டபத்தில் ஏற்பாடு செய்தது. அப்போது நாடகக் கழகத்திற்குக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைவராகவும், யான் செயலாளனாகவும் இருந்தோம். அந்த ஸ்பெஷல் நாடகம் பவளக்கொடி -அதில் பாகவதர் அர்ஜுனனாகவும் எஸ். டி. சுப்புலட்சுமி பவளக்கொடியாகவும், என். எஸ். கே. அர்ஜுனனின் தோழனாகவும் நடித்தனர். பல ஆண்டுகளுக்குப் பின்னரும் தமது நாடகப் பணியை மறவாமல் இவர்கள் வழக்கம்போல் பாடி நடித்து அன்பர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டனர்.

பதமலர் துணையென உனை நம்பினேன்

(சரவண)

என்ற கல்யாணி ராகப் பாடல் அந்தக் காலத்தில் மக்களை மிகவும் கவர்ந்தது.

இதே போல், "அந்த மிகுந்த முகுந்தன்
மருகனே வாவா! நீ வாவா!
ஆடினேன் புகழ் பாடினேன் - உனை
நாடினேன் நீ வாவா!"

என்ற கரகரப்பிரியா ராகப் பாடலும் பிரபலமானது.

'இது நல்ல சமயமய்யா!'' என்ற மாரியப்ப சுவாமிகளின் பாடலை மேடையில் முழக்கிய பெருமை எஸ்.எஸ். விசுவநாத தாஸ்அவர்களுக்கு உரியது.

**பெயர்களிலே சங்கீதம்**

பல நாடகக் குழுக்களின் பெயரிலேயே சங்கீதம் இணைந்திருந்த சிறப்பு நல்லிசை வழங்கிய நாடகக் குழுக்கள் என்ற எண்ணத்தை உறுதிப் படுத்துகின்றது. இதோ சில பெயர்கள் :

மதுராம்பிகா சங்கீத சபா (சின்னச் சாமா ஐயர்) ஸ்ரீ கிருஷ்ண கான சபா (சாமி நாயுடு), ஆரிய கான சபா (கே. எஸ் செல்லப்பா - சகோதரர்கள்), கிருஷ்ண கான சபா (அல்லி பரமேஸ்வரய்யர்) கணபதிகான சபா, (பி. - இரத்தினம்பாள்), சமரச கான (வேதவல்லித் தாயார்), விஜய கந்தர்வ நாடக சபா (விஜயலட்சுமி கண்ணுமணி), சௌந்திர கான சபா (வீரராகவ முதலியார் சகோதரர்கள்), மதுரை பால மீனரஞ்சனி சங்கீத சபா (ஜெகந்நாத ஐயர்), மதுரை பால விநோத சங்கீத சபா (பக்கிரி ராஜா), பாலகந்தர்வ கான சபா (சீனிவாச நாயக்கர்), மங்கள பால கான சபா (எதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை), சிதம்பர கான சபா (எம். எம். சிதம்பரநாதன்), மோகன கான சபா (ஏ. ஆர். பார்த்தசாரதி நாயுடு), ராம பால கான சபா (வைரா அருணாசலம் செட்டியார்), விஜய கந்தர்வ கான சபா (கே. பி. ஜானகி அம்மாள்), குமர கான சபா முதலானவை.

பெயரில் 'சங்கீத' அல்லது 'கான' என்ற ஒட்டு இல்லாமற்போனாலும் அருமையான இசைப் பாடல்களை வழங்கிய நாடக சபைகள் மிகப்பல.

**விசுவநாத தாஸ் வழங்கிய வீரகானம்**

சங்கரதாஸ் சுவாமிகளின் நாடக ஒளியின் சிறந்த இசைக்கதிராக விளங்கியவர், பாரத நாட்டுப் பால ஊழியன் என்ற புகழ் பெற்ற விசுவநாத தாஸ். சுருதி பேதமில்லாமல் கர்நாடக இசையை நாடக மேடையில் தூயதாக வழங்கிய இசை விற்பன்னர் இவர். நாட்டுப் பற்றை

ஊட்டும் பாட்டுக்களை ஈட்டி, நல்லிசை மீட்டி, ஈட்டிபோல் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் மீது நீட்டிய வீர கான வித்தகர்.

இவருக்கு ஈட்டியாகப் பயன்பட்ட பாட்டுக்களில் ''கொக்குப்பறக்குதடி பாப்பா'' என்ற கருத்தாழமிக்க எளிய இனிய பாட்டு சிறப்பானது. இதனை இயற்றியவர் மதுரகவி பாஸ்கரதாஸ்.

கொக்குப் பறக்குதடி பாப்பா! - அதைக்
கோபமின்றிக் கூப்பிடடி பாப்பா!
மக்களை ஏமாற்றும் கொக்கு - அதன்
மமதை அழிய வேண்டும் பாப்பா!
தேம்ஸ் நதிக்கரையின் கொக்கு - அங்கு
தின்னவழி யில்லாத கொக்கு! - மது
மாமிச வெறி பிடித்த கொக்கு - நம்
மக்களை ஏமாற்ற வந்த கொக்கு

தேசிய உணர்ச்சி ஊட்டும் இத்தகைய பாடல்களை அஞ்சாமல் பாடியதால் பலமுறை சிறையிடப்பட்டார் விசுவநாத தாஸ். இசை நாடகக் கலைக்காகத் தன் வாழ்வைக் காணிக்கையாக்கிய இவர் நாடகமேடையில் வள்ளி திருமணம் நாடகத்தில் மயிலாசனத்தில் வீற்றிருக்கும் முருகன் கோலத்திலேயே பாடிய வண்ணம் உயிர்நீத்த செய்தி மெய் சிலிர்க்க வைத்தது! பல்லாயிரக் கணக்கான ரசிகர்களை விம்மி அழ வைத்தது!

### டி. பி. இராஜலட்சுமியின் நாடகம்

மன்னார்குடி எம். ஜி. நடராஜ பிள்ளை சத்தியவானாகவும் டி. பி. இராஜலட்சுமி சாவித்திரியாகவும், எஸ். வி. சுப்பையா பாகவதர் நாரதராகவும் நடித்த சத்தியவான், சாவித்திரி நாடகத்தில் இம் மூவரும் பாடிய பாடல்கள் முக்கனி இன்பம் ஊட்டின.

'பாரத சமுதாயம் வாழ்கவே' என்ற பாரதியின் பாடலுக்கு இசையமைத்து நாடகமேடையில் முழக்கிய பெருமை மன்னார்குடி நடராஜ பிள்ளைக்கு உரியது என்று பாராட்டுகிறார் பழம் பெரும் நகைச்சுவை நடிகர் கே. சாரங்கபாணி.

### யாவரும் போற்றிய மூவர்

நாடக மேடையில் பாட்டாலும் நடிப்பாலும் நாட்டு மக்களின் இதயத்தில் இடம் பெற்றவர் மூவர். எஸ். வி. சுப்பையா பாகவதர், எம். கே. தியாகராஜ பாகவதர், பி. யு. சின்னப்பா ஆகியோர். இந்த மூவரும் வெவ்வேறு குழுவில் இருந்துமிகச் சிறந்த கலைப் பணியாற்றியுள்ளனர். தொழில் முறை நாடகக் குழுவினரும், ஸ்பெஷல் நாடகக்குழுவினரும் சேர்ந்து நடித்து வந்த வழக்கமான புராண நாடகங்களிலேயே இவர்கள் நடித்தாலும், இவர்களுடைய தோற்றப் பொலிவும்

**எம். எம். சிதம்பரநாதன்**

நாடகங்களில் இசையின் தரத்தைக் காப்பாற்றி நுட்பமான பல பாடல்களைப் பாடிய எம். எம். சிதம்பரநாதனுக்கு அவர் காலத்தில் பெரும் புகழ் இருந்தது. பழம் பெரும் பாடலாசிரியரும் ஆர்மோனியக் கலைஞருமான டி கே. சுந்தர வாத்தியார் இயற்றிய ''பக்தி கொண்டாடுவோம்'' என்ற ஆனந்த பைரவி ராகப் பாடல் ''மீண்டும் பாடுக'' என்று கேட்கும் அளவுக்கு ரசிகர்களைக் கவர்ந்தது. இந்தப் பாடலைப் பொதுவாகப் பலகுழுவினர் மேடையில் முழக்கி வந்தனர்.

'தினைக் காவல் உனக்காகுமா?' என்ற காப்பி ராகப் பாடலையும் இன்னும் பல இன்னிசைப் பாடல்களையும் நாடகங்களில் பாடித் தமது திறமையை நிலை நாட்டியவர் சிதம்பர நாதன்.

*'' காந்தி சிறை புகுந்தார்''*

முதலான தேசபக்திப் பாடல்களையும் இவர் தக்கவாறு பயன்படுத்தி அவையினரின் பாராட்டைப் பெற்றார்.

**மதுரகவி பாஸ்கரதாஸ் - பூமி பாலகதாஸ்.**

கூத்துத் தமிழுக்கு ஏற்ற இசைப் பாடல்களை யாத்துத் தந்த சந்தப் பாவலர்களில் மதுரகவி பாஸ்கரதாஸ், பூமி பாலகதாஸ் ஆகிய இருவரையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

இராகம் : தோடி — தாளம் : ஆதி

*சிங்காரி ஒய்யாரி - இந்த*
*ஜெகத்தை மயக்கு மதி*
*முகத்தைப் படைத்திட்ட* (சிங்காரி)
*சேவை தந்திட வந்த*
*பூவை இங்கு பரிமள* (சிங்காரி)
*சீனியுடன் முக்கனி தேனுங் கலந்தமொழி*
*ஞானியிவளை இனியானும் தெரிசித்திடத்தகு* (சிங்காரி)

*சித்தரும் முத்தரும் நித்தம் மதித்திடும்*
*உத்தமி பக்தி மிகுந்திடும் வித்வ* (சிங்காரி)
*பங்கேருகன் கை தேர்ந்து படைத்திட்ட ராணியாம்*
*பருவத் திழிவுருவின் பாக்ய கல்யாணியாம்*
*மங்காத சங்கீதத்தின் மகிமைக் கோர் வேணியாம்*
*மனதுக் கினிய மயிலாள் - இல்லற வாழ்வில்*
*தனது புகலும் குயிலாள் — இவளே என*
*மதிக்கும் புவியிற் பர கதிக்கும் உதவி செய்வாள்*
*துதிக்கும் தேன்கூடல் பாஸ்கர*

சொற்பேறு மற்புத விற்பனியான
- சிங்காரி

ஒரு காலத்தில் இந்தப் பாடல் கலையன்பர்கள் எல்லோருடைய நாவி-லும் களிநடம் புரிந்து கொண்டிருந்தது. இந்தப் பாடலில் பெயர் முத்-திரையை ஈற்றடியில் 'தென்கூடல் பாஸ்கர' என்ற தொடராகக் காண-லாம்.

'எவரனி' என்ற தியாகய்யர் கீர்த்தனை மெட்டிலேயே பாஸ்கர-தாஸ் மனோகரா நாடகத்திற்காக இயற்றிய பாடலின் பல்லவி.

''இவன் ரதி பார்வதி
இந்திராணி யோ?''

என்பதாகும். இந்தப் பாடலை நாடக மேடையில் கேட்டுக்கேட்டு மெய்-மறந்த ரசிகர்கள் பின்னர் 'எவரனி' கீர்த்தனையை ரசிக்க முந்தியதும் உண்டு எனக் கூறப்படுகிறது.

பாஸ்கரதாஸ் எழுதிய 'கொக்குப்பாட்டை போலவே பூமிபாலக-தாஸ் தீட்டிய 'காக்கா' பாட்டும் நாட்டுப் பற்றை ஊட்டியது.

காக்காப் பாட்டைக் கேட்கிறீர்களா?
காக்கா காக்கா
கடைகெட்ட காக்கா;
கரக்கரட்டக் காயைப்போலே
மூக்கெடுத்த காக்கா;
மாற்றானுக்கு இடம் கொடுத்த காக்கா - உனக்கு
மண்டையிலே மூளையில்லை காக்கா;
காற்றாய்ப் பறக்கிறயே காக்கா - மகாத்மா
காந்தி சொன்னபடி கேளு காக்கா; — உங்க
வீட்டு மேலே கடனுண்டு காக்கா - அது
வெள்ளைக் கொக்கு செய்த மாயம் காக்கா.

பூமி பாலகதாஸ் இசைப்பாடல் ஆசிரியராக மட்டுமல்லாமல் லலிதாங்கி, சகுந்தலா ஆகிய சில நாடகங்களையும் இயற்றியவர் என்பது குறிப்-பிடத் தக்கது.

பாஸ்கர தாஸ், பூமிபாலகதாஸ், டி. கே. சுந்தர வாத்தியார், இவர்களைப் போன்றே ராஜா சண்முகதாஸ், இலட்சுமணதாஸ், இசக்கி முத்து வாத்தியார், வி.எஸ். வீரநாதக்கோனார் முதலான பலர் நாடகப் பாடலாசிரியர்களாய்ப் பாட்டும் கூத்தும் போற்றி வந்துள்ளனர்.

**சிங்கக் குட்டி – புலிக்குட்டி**

நவாப் டி. எஸ். இராசமாணிக்கம் அவர்களின் ஆதி நாடகக்குழு

மதுரை பாலவிநோத சங்கீத சபா என்பது. இதனை பக்கிரிராஜ கம்பெனி என அழைப்பார்கள். இந்தக்கம்பெனியில் எம்.எம்.ரங்கசாமி முருகனாகவும் சிதம்பரம் ஜெயராமன் வள்ளியாகவும் இசை விருந்துவழங்குவார்கள். இருவரும் சிறுவர்கள். 1933-ல் இந்தக்குழுவினர் கோவையில் நந்தனர் நாடகம் நடத்திய போதுதான் காந்தியடிகள் நாடகம் பார்க்க வந்து வாழ்த்தினர். நந்தனர் இசை நாடகத்தில் ஜெயராமன் நந்தனராகவும் ஏ.எம்.மருதப்பா வேதியராகவும் பாடி நடித்துப்பாராட்டுப் பெற்றனர்.

சிதம்பரம் ஜெயராமன், பி. எஸ். கோவிந்தன், வி. என். சுந்தரம் போன்ற இசைமணிகளைத் தமது குழுவில் சேர்த்து கர்நாடக இசை இலக்கண மரபுப்படி சுவாமிகளின் பாடல்களைப் பாடச் செய்தவர் புளியம்பட்டி ரெட்டியார் அவர்களாவார்.

சிதம்பரம் ஜெயராமனும் பி. எஸ். கோவிந்தனும் தனித்தனியே இரண்டு குழுக்களில் நடிக்கும் போட்டி நாடகங்களும் நடந்தன, இருவரும் தனித்தனியே துருவன் நாடகத்தில் கதாநாயகனுக நடித்தனர். யான் சிறுவனுக இருந்த போது திருநெல்வேலியில் இந்த இரண்டு இளம் நடிகர்களும் போட்டியாக துருவன் நாடகம் நடத்தியதைக் கண்டது என் நினைவில் இருக்கிறது. 'சிங்கக்குட்டி ஜெயராமன் பாடி நடிக்கும் துருவன்' என்று ஒரு குழு விளம்பரம் செய்யும்; அடுத்த குழு புளியமாநகர் புலிக்குட்டி பி. எஸ். கோவிந்தனைத் துருவனுகக் காணத்தவருதீர்கள் எனப் போட்டி விளம்பரம் செய்யும். இரண்டு குழுவினரையும் கலையன்பர்கள் இரு கண்களாகப் போற்றி ஆதரித்தார்கள் என்றே அக்காலத்தில் பேசப்பட்டது.

**மனத்தைக் கவரும் மகாலிங்க நாதம்**

சின்னஞ்சிறு பருவம் முதலே இன்னிசையால் நாடகம் வளர்த்த பெருமை டி. ஆர். மகாலிங்கத்திற்கும் உண்டு. கிட்டப்பாவின் பாணியிலே பிர்க்காசங்கீதத்தை மேடையிலே இன்றும் முழக்கி வருகிறார் இவர். இவருடைய பாட்டு மயமான தனி நாடகத்தில் மயங்காதார் யாரும் இலர்.

இப்போதும், இவர் மாதம் இருபது நாடகங்களுக்குக் குறையாமல் வள்ளிதிருமணம், பவளக்கொடி, ஞானசவுந்தரி முதலான நாடகங்களைப் பாட்டுநாடகத் தனிப்பாணியிலேயே நடத்தி வருகிறார்.

தேவர் நாடக மன்றம் உடையப்பா யாவரையும் கவரும் இசை விற்பன்னராக அரிச்சந்திரா, வள்ளி,பவளக் கொடி, முதலான நாடகங்களில் கானமழை பொழிந்து வருகிறார். பழைய அரிச்சந்திர விலாசப்

பாடல்களுக்கு இன்னமும் மகத்துவம் உண்டு என நிலைநாட்டி வருகிறார் இவர்.

**நாடகங்களில் பாரதியார் பாடல்கள்**

மகாகவி பாரதியார் உணர்ச்சிமயமான இசைப் பாடல்களைப் பல வர்ண மெட்டுகளில் இயற்றியுள்ளார். இவரது வாழ்க்கை முழுவதும் தேசியப் போராட்ட நெருக்கடியிலேயே அமைதியின்றிக் கழிந்தமையால் பாடல்களை நாடகங்களில் சேர்க்கச் செய்வதற்கு வேண்டிய சூழ்நிலை இவர் காலத்தில் அவ்வளவாக ஏற்படவில்லை. ஆயினும் பிற்காலத்தில் இவருடைய பாடல்கள் நாடக மேடையில் சிறப்பாக இடம் பெற்றுவருகின்றன. முக்கியமாக டி. கே. எஸ். சகோதரர்களின் குமாஸ்தாவின் பெண் நாடகம் முதல் தேசபக்தர் சிதம்பரனார் வரை பல நாடகங்களில் பாரதியின் பாடல்கள் தக்க கட்டங்களில் சேர்க்கப்பட்டு, 'அவ்வை' சண்முகம், பகவதி முதலான கலைஞர்களின் குரலிலே ஒலித்தன.

இசை நாடகக் காவியம் போல் அமைந்த பாரதியாரின் பாஞ்சாலி சபதம் பாடல்களில் சிலவற்றை ஏற்கெனவே டி. கே. எஸ். சகோதரர்கள் தமது இராமாயணம் நாடகத்தில் சேர்த்துப் பெருமை பெற்றார்கள்.

பின்னர் 'பாஞ்சாலி சபதம்' காவியத்தைத் தக்கவாறு இசைக் கவிதை நாடக வடிவில் மேடையேற்றிய பெருமை எஸ்.வி. சகஸ்ரநாமம் அவர்களின் சேவா ஸ்டேஜ் நாடகக் குழுவிற்கே உரியது.

**தேனிசை வளர்த்த டி. கே. எஸ். நாடகங்கள்**

ஏறக்குறைய ஐம்பதாண்டுக் காலம் பல்வேறு நாடகங்களை வெற்றிகரமாக நடத்திய டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகப் பணியில் நல்லிசைக்குத் தனி இடம் இருந்தது. சங்கரதாஸ் சுவாமிகள், முத்துசாமிக் கவிராயர், பாஸ்கரதாஸ் முதலானோரின் சிறந்த பாடல்களைக் கொண்டு தேனிசை வளர்த்த சகோதரர்கள் பிற்காலத்தில் புதிய கவிஞர்கள் பலரது பாடல்களுக்கு ஆதரவு தந்தார்கள். அத்தகைய நல்வாய்ப்புப் பெற்ற கவிஞர்களின் சில பாடல்களைச் சான்று காட்ட விரும்புகிறேன்.

பொதுவுடைமை இயக்கத் தலைவர் ஜீவானந்தம் அவர்களின் 'காலுக்குச் செருப்பும் இல்லை' போன்ற பாடல்களை 'அவ்வை' சண்முகம் நாடகங்களிலே இணைத்துப் பாடி மக்களை மகிழ்வித்தார்.

'குமாஸ்தாவின் பெண்' நாடகத்திற்கு அருமையான பாடல்களை எழுதியவர் கவி ஆறுமுகனார். இதற்குப் பின் வித்தியாசாகரர் போன்ற சில நாடகாசிரியர் ரா. வே. எழுதிய 'இமயத்தில் நாம்' நாடகத்தில் சிலப்பதிகாரக் கதை முழுவதையும் சுருக்கி ஒரு பாடல் வடிவில் ஒரு

பின்னணிக் காட்சிக்காக உருவாக்கித் தந்து புகழ் பெற்ருர்.

1939-இல் அரங்கேற்றப்பட்ட 'சிவலீலா' நாடகத்துக்கு சையத் இமாம் புலவர் என்ற முஸ்லீம் கவிஞர் பாடல்கள் இயற்றும் வாய்ப்பைப் பெற்ருர். கே. ஆர். இராமசாமியின் நடிப்பிசைப் புலமை இந்த நாடகத்தில் நன்கு துலங்கியது. தி. க. பகவதியின் இசை பாடும் திறமையும் புலனுகியது. ''த மி ழி சை இயக்கத்துக்காகவே தயாரிக்கப்பட்ட நாடகம் போல் ஒளி வீசுகிறது, சிவலீலா'' என ராஜா முத்தையா செட்டியார் அவர்கள் அடிக்கடி பாராட்டுவது வழக்கம்.

அடுத்து உருவான 'அவ்வையார்' நாடகம் மாபெரும் வெற்றியைக் கண்டது. ஏராளமான இசைப் பாடல்கள் இந்நாடகத்தில் முழங்கின. அவ்வையாரே இயற்றிய பாடல்கள் தவிர, சங்கரதாஸ் சுவாமிகள், பாரதியார், பாரதிதாசன், தேசிக விநாயகம் பிள்ளை, திருவனந்தபுரம் இலக்குமணப்பிள்ளை முதலானோரின் இசைப் பாடல்களும் இடம் பெற்றன. திறமையாளருக்கு வாய்ப்புத் தரவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் நடிகர் பி. எஸ். வெங்கடாசலத்திற்கும் பாடல்கள் இயற்றும் வாய்ப்புத் தந்தனர் சகோதரர்கள்.

பின்னர், இந்நாடகத்தில் அங்கவை-சங்கவை அவ்வையாருக்கு அறிமுகமாகும் கட்டத்திற்கு 'பெருமை கொள்வாய் தமிழா' என்ற அருமையான பாடலை இயற்றித் தந்தார் கு. சா. கிருஷ்ணமூர்த்தி. இந்தப் பாடலை சண்முகம் பாடும் போது அவையினரின் மெய்சிலிர்க்கும். பல முறை ரசிகர்களின் பாராட்டுக் கையொலியை பெறும் சிறந்த இசைப் பாடலும் அதற்கு ஏற்றகாட்சியும் அவ்வையார் நாடகத்தின் தனிச்சிறப்பான அம்சங்கள்.

சகோதரர்களின் 'உயிரோவியம்' நாடகத்திற்கும் கு.சா.கிருஷ்ணமூர்த்தி இனிய பாடல்கள் இயற்றியுள்ளார்.

''உயிரோவியமே காதல் பேறே
உயர்காவியமே கரும்பின் சாறே''

என்ற பாட்டு சிறப்பானது. இந்த நாடகத்தை எழுதியவர் புகழ் பெற்ற எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன்.

பில்கணன் நாடகத்தில் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்கள் தனிப் பொலிவு பெற்றன. ''துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?'' என்ற பாடல் தெவிட்டாத இன்பம் தந்தது.

சகோதரர்களின் 'மனிதன்' நாடகம் புதுமையான மலையாளக் கதையின் அடிப்படையில் அமைந்தது. இன்றைய நோக்கிலே சொல்வதானுல் அது ஒரு 'புதிய அலை' நாடகம். வித்துவான் பா. ஆதிமூலம், நா. சோமசுந்தரன் ஆகியோர் நாடக வடிவம் தந்தனர். இந்நாடகத்-

திற்கான பாடல்களை ஆதிமூலம் அவர்களே இயற்றிக் கொடுத்தார்.

'மதமிலான்-மானியான்-மன்னிப்பான் மனிதன், என்ற இலட்சியப் பாடல் இசையோடு மட்டுமன்றி மின்ஒளிப் புதுமையாலும் சிறப்புப் பெற்றது.

சகோதரர்களின் 'இரத்தபாசம்' (ஸ்ரீதர் எழுதியது) 'கள்வனின் காதலி' (கல்கி கதை, எஸ்.டி. சுந்தரம் வசனம்) ' எது வாழ்வு ' (டி.கே கோவிந்தன் வசனம்) முதலான நாடகங்களில் இசைகனிந்த பாடல்களைத் தீட்டியவர் எம். கே. ஆத்மநாதன். பாடலாசிரியராக மட்டுமல்லாமல் இசையமைப்பாளராகவும் புகழ் பெற்றுள்ளவர். உயிரோவியம்' முதல் டி. கே. எஸ். சகோதரர்களின் எல்லா நாடகங்களுக்கும் இவரே இசையமைப்பாளர். சேவா ஸ்டேஜ் போன்ற நாடகக் குழுவினருக்கும் இவர் பாடலாசிரியராகவும் இசையாசிரியராகவும் துணை புரிந்துள்ளார்.

''வானம் பாடிகள் போலே – பிரேம
கானம் பாடி மகிழ்வோம்''

'கள்வனின் காதலி' நாடகத்தில் இன்பநாதம் வழங்கும் இந்தப் பாடல் இவருடைய சிறந்த பாடல்களுக்கு ஓர் எடுத்துக் காட்டு. பிற்காலத்தில் டி. கே. எஸ். நாடகங்கள் அனைத்திற்கும் பாடல்கள் எழுதும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. இதில் என் அனுபவங்களைப் பிற்பகுதியில் சொல்வேன்.

**கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்**

நகைச்சுவை மன்னரான இவர் ஆரம்பகாலத்தில் டி. கே. எஸ். நாடகக்குழுவில் இருந்த போதே கருத்துள்ள பாடல்களைப்பாடி வந்தார். நாடகத்தில் 'வில்லுப்பாட்டு' நிகழ்ச்சி இடம் பெறச் செய்த முதல் கலைஞர் இவரே. பின்னர் இவர் திரைப் படத்தில் புகழ் பெற்ற சமயத்திலும் நாடகக் கலையை மறவாமல் சிந்தனைக்கு விருந்து தரும் பல நகைச்சுவை நாடகங்களை நடத்தினர். நந்தனுருக்குக் 'கிந்தனர்', நீலகண்டருக்குக் 'கீலகண்டர்' இவ்வாருகப் புதிய சிந்தனையோடு மாற்றங்கள் செய்து மேடையேற்றினர். உடுமலை முத்துச்சாமிக் கவிராயரின் மாணுக்கரான உடுமலை நாராயண கவியின் சீர்த்திருத்தப் பாடல்கள் பலவற்றைக் கலைவாணரும் திருமதி டி. ஏ. மதுரம் அம்மையாரும் அருமையாகப் பாடி மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினர்கள். பாட்டும் கூத்தும் வளர்வதற்கு இவர்கள் முழங்கிய புதியபாணி நகைச் சுவைப்– பாடல்கள் பெருந்துணை செய்தன என்பது வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

**நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி**

டி. கே. எஸ். நாடகங்களில் அற்புதமாகப் பாடி நடித்து நடிப்பிசைப் புலவர் எனப் பட்டம் பெற்றவர் கே. ஆர். இராமசாமி. இவர் பின்னர் தாமாகவே கிருஷ்ணன் நாடக சபை என்ற குழுவை நடத்தி இசைநயம் செறிந்த நாடகங்களை நடத்தி வந்தார். பேரறிஞர் அண்ணு எழுதிய 'வேலைக்காரி', 'ஓர் இரவு', ஆகிய மறுமலர்ச்சி நாடகங்களை கே. ஆர். ஆர். நடத்தி நல்லிசையும் வழங்கினுர்.

**பிற நாடகக் குழுவினர்**

சக்தி நாடக சபையின் நாடகங்களில் ஏற்ற இடங்களில் இனிய பாடல்கள் இடம் பெற்றன. எஸ். டி. சுந்தரம் எழுதிய 'கவியின் கனவு' என்ற சிறந்த நாடகத்தில் 'விதியை வெல்வோம் நாம்' என்ற பாடல் இன்பம் இதயத்தை விட்டு அகலாது.

நடிகர் ஆர்.எஸ். மனேகர் அவர்களின் நாடகங்களில் ஆங்காங்கு சில நல்ல பாடல்களைக் கவிஞர் இரா. பழனிசாமி எழுதியுள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் சிவாஜி நாடக மன்றத்தின் 'களம் கண்ட கவிஞன்' என்ற இசைக் கவிதை நாடகம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லையாயினும் கவிஞர் தஞ்சைவாணன் இயற்றிய அழகு தமிழ்க் கவிதையும் இசைப் பாடல்களும் இதயத்தை ஈர்த்தன.

இவ்வாருக, அண்மைக் காலத்தில் நடைபெறும் நாடகங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில பாடல்கள் இடம் பெற்று வருகின்றன.

பாடல்களே இல்லாத நாடகங்களே இப்பொழுது பெரும்பாலும் நடைபெற்று வருவது நல்ல சூழ்நிலை என்று சொல்ல இயலாது.

**எனது கலைப் பணி**

மேட்டூர் தமிழ்ப்பண்ணையின் சார்பில் நடத்தப்பட்ட 'கலாவதி' (பரிதிமாற்கலைஞர் எழுதியது) நாடகத்தில் முதன்முதல் என் பாடல்கள் சில இடம் பெற்றன. பின்னர் ஒரு சில அமெச்சூர் நாடகங்களுக்கும் பாடல்கள் எழுதினேன். அவைகளில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சம் இன்னதென்று இப்பொழுது சொல்ல இயலாது.

முதன்முதலில் டி. கே. எஸ். சகோதரர்களின் 'தமிழ்ச் செல்வம்' நாடகத்திற்காக நான் பாடல்கள் இயற்றிய போது என்னைப் பாராட்டி 'அவ்வை' சண்முகம் அவர்கள் தங்கச் சங்கிலி சூட்டினுர். சென்னை ரசிகரஞ்சனி சபாவில் நடந்த இந்த அரங்கேற்ற நிகழ்ச்சி, கலைத் துறையில் எனது பணிக்குத் தொடக்க விழாவைப் போல் பெருமிதம் அளித்தது. தமிழ்ச் செல்வம் நாடகத்தை உருவாக்குவதையும் உரையாடலினை வகைப்படுத்துவதிலும் எனது துணையைப் பாராட்டி நாடக ஆசிரியர்

'முத்தமிழ்க் காவலர்' கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் அரங்கேற்ற விழாவில் பேசிய அன்புரை எனக்குப் பேரூக்கம் அளித்தது.

டி. கே. எஸ். குழுவினருக்குத் தமிழ் கூறும் நல் உலகமெல்லாம் புகழ் ஈட்டித் தந்த 'இராஜராஜசோழன்' (அரு. ராமநாதன் இயற்றியது) நாடகத்தில் என் பாடல்கள் தனிச்சிறப்புப் பெற்றன.

''திரு. புத்தனேரிக்கவிஞரின் 'பொன்னி நாட்டு மன்னன் வாகை சூடினான்' என்னும் வீர உணர்ச்சி ததும்பும் பாட்டும், நாடக மேடையில் பலமுறை ஒலிக்கும், 'காதலெனும் சக்தியினைக் காலம் எதும் வெல்லாது' என்னும் காதலின் ஆற்றலை உணர்த்தும் பாட்டும் மறக்கவொண்ணா இசை விருந்துகளாகும்' என்ற மதுரைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் மு. வ. அவர்களின் பாராட்டு மறக்கவொண்ணாத வாழ்த்துரையாகும்.

பின்னர், 'சிவகாமி சபதம்' (கல்கியின் கதை) நாடகத்தைச் சகோதரர்களுக்காக உருவாக்கிக் கொடுத்தேன். இந்த நாடகத்தில் அமைந்த அத்தனை பாட்டுக்களும் முத்தானவை என என் உள்மனமே தன்னைத்தானே பாராட்டிக் கொள்கின்றது. தன்னடக்கம் காரணமாகப் பாடல்களின் சிறப்பை வருணிக்கத் துணியவில்லை.

'சித்தர் மகள்', 'பாசத்தின் பரிசு' 'அமைச்சர் மதுரகவி', 'வாழ்வில் இன்பம்', 'உயிர்ப்பலி' முதலான டி.கே.எஸ். நாடகங்கள் அனைத்திலும் தரமான இசை தவழும் என் இனிய பாடல்கள் இடம் பெற்றன.

இடையில் கலைவாணர் என்.எஸ்.கே. நாடக சபாவின் 'தளபதி' யுனைட்டெட் அமெச்சூர் குழுவின் 'இதுவே சொர்க்கம்', துர்க்கா நாடக மன்றத்தின் 'கடவுள் எங்கே?' 'குறிஞ்சி மலர்' முதலான பல நாடகங்களுக்கும் பாட்டுக்கள் வழங்கினேன்.

'சிவகாமியின் சபதம்' என்ற அமரர் கல்கியின் நாவலை நாட்டிய நாடகமாக ஆக்கிக் கொடுத்தது எனது கலைப்பணியின் சிகரம் என 'அவ்வை' சண்முகம் போன்ற கலைமேதைகள் போற்றியது எனக்கு மனநிறைவு தந்தது. அதில்அமைந்த நூற்றுக்குமேற்பட்ட பாடல்களின் சிறப்பையும், அவற்றிற்கு நாடடியக் கலா சக்கரவர்த்தி கே.என். தண்டாயுதபாணி பிள்ளை இசையும், நாட்டியமும் அமைத்த நுட்பத்தையும் நான் நன்குக உணர்கிறேன். அவர் இதற்கு 108 இராகங்களில் இசையமைத்திருந்தார். செல்வி. கே. சந்திரகாந்தாவும் குழுவினரும் இந்நாட்டிய நாடகத்தை வெற்றிகரமாக நடத்தினர்கள்.

நாவலில் நூற்றுக்கணக்கான பக்கங்களில் வர்ணிக்கப்பட்ட புலிகேசியின் குணதிசயங்களை,

விலங்கெனத் திரிபவன் புலிகேசி - கலை
மேன்மையை அறியான் பரதேசி!

என்ற இரண்டே அடிகளில் நாகநந்தியின் வாயிலாகப் படம் பிடித்துக்-காட்டி விட்டேன் என என்னைப்பற்றி அமரர் 'கல்கி' அவர்களின் மக-னார் கி. இராஜேந்திரன் அவர்களே அரங்கேற்றத்தின் போது பாராட்-டியது இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

யான் இயற்றிய இரண்டாவது நாட்டிய நாடகம் 'காவிரி தந்த கலைச்செல்வி' சங்க இலக்கியப் பின்னணியில் அமைந்த ஆட்டனத்தி-ஆதிமந்தி மருதி இவர்களின் கதை. இதற்கும் அற்புதமாக இசை-யும் நாட்டியமும் அமைத்தார் கே. என். தண்டாயுதபாணி பிள்ளை. செல்வி ஜெயலலிதா குழுவினர் இதனை நடத்தி வெற்றி கண்டனர்.

அடுத்து, சிலப்பதிகார மாதவியை மையமாக வைத்து 'சித்திரப்-பாவை' என்ற நாட்டிய நாடகப் பாடல்களைச் செல்வி அ. மல்லிகை குழுவினருக்காக இயற்றினேன். இதில் அமைந்த என் பாடல்களுக்கும் நல்ல பாராட்டுக் கிடைத்தது.

கோவலன் மாதவியுடன் பிணக்கினால் மனத்தை முறித்துக் கொண்-டு போன அக்கணமே மாதவி துயரம் தாங்க மாட்டாமல் மயங்கி விழு-கிறாள். அந்நேரம் அவ்வழியாகக் கவுந்தி அடிகள் தம் போக்கிலே

*புயலுக்குப் பின்னாலே அமைதி உண்டு*
*புத்தரது பெருவெள்ளக் கருணை உண்டு;*
*துயரத்தின் சிகரத்தில் சாந்தம் தோன்றும்*
*சுகமெல்லாம் துறக்கின்ற சுகமும் தோன்றும்*

எனப் பாடிச் செல்வதாக அமைத்தேன். சிலப்பதிகாரக் கதையில் யான் செய்த சிறு மாற்றம் இது. ஆனால் இது ஏமாற்றமாகப் போகவில்லை; எதிர்பார்த்த உணர்ச்சிப் பயனைத் தந்தது. பாடல் உருக்கமாக முடியுங் கட்டத்தில் மாதவி சற்றே மூர்ச்சை தெளிந்து துறவியின் பொன்மொ-ழிப்பாடலைச் சிந்திப்பது போல அவரையே ஒருகணம் பார்த்துக் கொண்-டிருக்கிறாள். உடனே திரை விடப்படுகின்றது. இந்தக் காட்சியின் உணர்ச்சிச் சூழ்நிலையிலேயே மாதவிக்குப் பின்னால் துறவு பூணுவதற்கு வேண்டிய அடித்தளம் ஏற்பட்டு விட்டது போன்ற நுட்பத்தைத் தருகி-றது என்ற பாராட்டு எனது கலையார்வம் என்ற வேருக்கு நீராக அமைந்-தது.

பின்னர், 'ஞானப்பழம்', 'பஸ்மாசுர மோகினி' 'அரைமணிக்குள் இராமாயணம்' ஆகிய சிறு சிறு நாட்டிய நாடகங்களை இராஜசுலோசனா குழுவிற்காக இயற்றி வழங்கினேன். இவைகளும் வெற்றி பெற்றன. இப்போது 'பூமகள் திருமணம்' என்ற நாட்டிய நாடகம் உருவாக்கி வைத்துள்ளேன்.

பொதுவாக மெட்டுக்குப் பாட்டமைக்கும் திரைப்படப்பாணியை

விடப் பாட்டுக்கு மெட்டமைக்கும் நாடகப் பாணி தான் உயிரோட்டம் உள்ளது என்பது என் கருத்து. என் அனுபவ வெற்றியும் கூட.

திரையிலும் கூடப் பாட்டுக்கு மெட்டமைத்த பல பழைய பாடல்கள் இன்னமும் உயிர்ப்புடன் இசை உணர்ச்சி ஊட்டுகின்றன என்பதற்கு, தியாகராஜ பாகவதர், பி. யு. சின்னப்பா முதலியோர் பாடிய பழைய பாடல்களே சான்ருகும். சின்னஞ் சிறுவர்களைக் கொண்டு மீண்டும் இசை நாடகப் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் தோன்ற வேண்டும். அப்படியானுல்தான் சொந்தக்குரலில் சுகமான சங்கீதம் வழங்கும் நடிகமணிகள் தோன்றுவார்கள்.

## முடிவுரை

கோபுரம் இல்லாத கோயிலுக்கு உயர்வில்லை. குதூகலம் இல்லாத திருமணத்திற்குச் சிறப்பில்லை. பசுமை இல்லாத சோலைக்குச் செழிப்பில்லை. பாயாசமில்லாத விருந்துக்கு மதிப்பில்லை-இவற்றைப் போலவே பாட்டில்லாத நாடகத்திற்கு ஊட்டம் இல்லை என்பது என் கருத்து.

நாடகம் என்னும் கோயிலுக்குப் பாட்டானது கோபுரமாக மட்டுமல்லாமல், அந்தக் கோயிலே பாட்டு வடிவமாக இருந்த பழங்காலத்தைப்பற்றி ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். இப்போது யான் குறிப்பிட்ட நாட்டிய நாடகங்கள் போன்றவை பாட்டுக் கோயில்களாக விளங்குகின்றன.

கூத்தானது முழுவதும் பாட்டாக இருந்தது ஒரு காலம். பின்னர் பெரும்பாலும் பாட்டு, இடையிடையே உரையாடல் என்ற நிலை ஏற்பட்டது. அடுத்த கட்டம் பாதிக்குப் பாதி பாட்டு என்ற சம நீதி. அடுத்த கட்டம் முக்கால் பகுதி உரையாடல் கால்வாசி பாடல்கள். அதற்கு அடுத்தபடியாக மிகப் பெரும்பகுதி உரையாடல்-சிறுபகுதி பாடல்கள் பின்னர் முழு நாடகத்தில் ஒன்று அல்லது இரண்டே பாடல்கள், இப்படியாக கூத்துக் கலைகளில் பாட்டுக்களின் செல்வாக்கு படிப்படியாகக் குறைந்து இப்போது பாட்டுக்களே இல்லாத நாடகங்களாகத் தலை தூக்கி நிற்கின்றன.

பாட்டுக்கள் அறவே இல்லாத நாடகம் முழுமை பெற முடியாது என்பது என் உறுதியான எண்ணம். பாடலாசிரியன் என்பதனுல் இப்படிச் சொல்வதாக யாரும் எண்ண வேண்டாம். கலைத்துறையில் பல ஆண்டுகள் தோய்ந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன், நாடக மேடையில் ஒரு சுகமான பாடலைக் கேட்கின்ற இன்பம் பற்பல உரையாடல்களின் வேகத்தினுல் மட்டும் கிடைத்து விடாது என்பது திண்ணம்.

காலத்துக்கு ஏற்றபடி பெரும்பாலும் உரையாடல்கள் அமைந்த

நாடகம் வரவேற்கத்தக்கதுதான். ஆனால் சிறுபகுதியாவது, தரம் குறையாத இசை ததும்பும் பாடல்கள் அமைந்தால் பார்ப்பவர்களுக்கு மன அமைதி ஏற்படும் என்பதில் ஐயமில்லை. நாடகங்களில் நல்ல இசை கனிந்த பாடல்கள் இடம் பெற்றால் அதற்காகவே ஒரு கூட்டம் கட்டாயம் வந்து ஆதரவு கொடுக்கும் என்பதை, கிட்டப்பா போன்றவர்கள் நடித்த நாடகங்கள் மெய்ப்பிக்கின்றன.

நாடகத்தில் பாட்டுக்கள் தேவையில்லை எனச் சில குழுவினர் நினைக்கும், இந்தக் காலத்தில் கூட, டி.ஆர். மகாலிங்கம், தேவர் நாடக மன்றம் உடையப்பா முதலானோர் நடிக்கும் தனி நாடகங்களைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான ரசிகர்கள் ஆவலாக இருக்கிறார்கள் என்பதை நாம் காண்கிறோம். இவர்களைப் போல் சொந்தக் குரலில் பாடி நடிக்கும் பரம்பரை தோன்ற வேண்டும்.

எனவே, நாடகக் கலைஞர்களும், கலையன்பர்களும், நாடகங்களில் நல்ல பாட்டுக்கள் முழங்கச் செய்யவேண்டும். அப்போது தான் கலையுள்ளத்தில் ஒரு நிறைவு ஏற்படும்.

பண்கள் தோன்றிய காலம் முதல் இக்காலம் வரை, நாடகமேடையானது தரமான சங்கீதத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறது. இதேபோல் இனிமேலும் நாடக மேடையானது நல்லிசையைப் பேண வேண்டும் இதுவே எனது சொற்பொழிவின் மையக் கருத்தாகும்.

பாட்டும் கூத்தும் வளர்ப்பதில் நாட்டுக்கு நல்ல பணியாற்றிய தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் புகழ் வாழ்க!

பாட்டும் கூத்தும் நாட்டிலே பரவுக!!

வணக்கம்.

madurai university co operative printing press ltd madurai 21 c - 1000 '77

# மதுரைப் பல்கலைக்கழகத்
# தமிழ்த்துறை வெளியீடுகள்

## 1969

ரூ. பை

1. Philosophy of Tiruvalluvar
   — Dr. T. P. Meenakshisundaran 1 - 50

## 1971

2. வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல்
   — பதிப்பாசிரியர் : திரு நா. வானமாமலை 4 - 00

3. முத்துப்பட்டன் கதை — ,, 2 - 00

4. காத்தவராயன் கதைப்பாடல் — ,, 2 - 00

## 1972

5. கான்சாகிபு சண்டை — ,, 2 - 75

6. கட்டபொம்மு கூத்து — ,, 2 - 25

7. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்:
   முதற்பகுதி-அறத்துப்பால் 8 - 00

   திரு கோ. வடிவேலு செட்டியாரவர்கள் இயற்றிய தெளிபொருள் விளக்கவுரையும், கருத்துரையும், குறிப்புரையும், ஆங்கில மொழிபெயர்ப்புடன்.

## 1973

8. The Treatment of Morphology in Tolkappiam
   — Dr. M. Israel 7 - 00

9. Dravidian Languages and Literatures
   — Complied by Busangi Rajamani 5 - 00

## 1974

10. வையை : மலர் ஒன்று
பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்,
டாக்டர் இராம. பெரியகருப்பன் 12 - 00

11. The inner meaning of human history
The one increasing purpose that runs
through the ages
— Justice S. Maharajan 2 - 25

12. அகிலன் ஆய்வடங்கல்
— சு. வேங்கடராமன் 10 - 00

13. ஐவர் ராஜாக்கள் சரிதம்
— பதிப்பாசிரியர் : திரு நா. வானமாமலை 7 - 00

## 1975

14. தொல்காப்பியம்—பொருளதிகாரம்—அகத்திணையியல்
உரைவளம்—மு. அருணசலம் பிள்ளை
பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
டாக்டர் தா. வே. வீராசாமி 18 - 00

15. வையை : மலர் இரண்டு
பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
டாக்டர் இராம. பெரியகருப்பன் 8 - 00

16. நாடகக் கலையின் வரலாறு
— திரு எஸ். வி. சகஸ்ரநாமம் 6 - 00

17. மு. வ. ஆய்வடங்கல்
— சு. வேங்கடராமன் 12 - 00

18. அகிலன் கருத்தரங்க ஆய்வுரைகள்
— பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
டாக்டர் இராம. பெரியகருப்பன் 16 - 00

19. மு. வ. நினைவுமலர்

— பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்

சு. வேங்கடராமன் 10 - 00

20. வையை : மலர் மூன்று

பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்

டாக்டர் தே. ஆண்டியப்பன்

21. அச்சில்

திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்

– இரண்டாம்பகுதி : பொருட்பால்

திரு கோ. வடிவேலு செட்டியாரவர்கள் இயற்றிய

தெளிபொருள் விளக்கவுரையும், கருத்துரையும்

குறிப்புரையும், ஆங்கில மொழிபெயர்ப்புடன்

## திருக்குறள் ஆய்வக வெளியீடு

### 1973

1. குறள் கண்ட பொருள் வாழ்வு

— டாக்டர் தி. முருகரத்தனம் 5 - 00

### 1974

2. குறள் கூறும் இறைமாட்சி

— டாக்டர் தி. முருகரத்தனம் 6 - 00

3. வள்ளுவர் வகுத்த அரசியல்

(கருத்தரங்கக் கட்டுரைகள்) 6 - 00

### 1975

4. வள்ளுவர் வகுத்த பொருளியல்

(கருத்தரங்கக் கட்டுரைகள்) 7 - 50

அச்சில்

5. குறள் கண்ட சமுதாயம்
— காமாட்சி சீனிவாசன் 10 - 00

6. குறள் கூறும் அரசாட்சி
— டாக்டர் தி. முருகரத்தனம்

கிடைக்குமிடம்:

மதுரைப் பல்கலைக்கழக மத்திய கூட்டுறவு அங்காடி
பல்கலைநகர்–625021
மதுரைமாவட்டம்.